
# கல்வியியல் நோக்கு



யூ.எல். அலியார் M.A. (Ed.)

[illegible] பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 1793

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்திற்கு என் அன்பளிப்பு

செ. ஸ்ரீகிருஷ்ணராஜா

S. SRIKRISHNARAJAH
Justice of Peace (Whole Island)
Regd. No. 13/05/ශාසා/මුද්‍ර/199
No. 24/41, Selvanayagam Road,
Batticaloa.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

| Class No: | |
| --- | --- |
| Acc No | 1793 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class N

Acc No

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியல் நோக்கு

அல்ஹாஜ் யூ.எல். அலியார், எம்.ஏ. (கல்வியியல்)
விரிவுரையாளர்,
பட்டப்பின் ஆசிரியர் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்

பைத்துல் ஹிக்மா
143/15, கிராண்ட்பாஸ் வீதி,
கொழும்பு-14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KALVIYIYAL NOKKU

(Educational Philosophy)

Author : Al Haj U.L.Aliyar B.A., Dip. Ed., Dip. Eng., M.A. (Ed)
Lecturer, Dept.of Post Graduate Teacher Education
National Institute of Education
Regional Centre, Kalmunai

Author Publisher :
'Baithul Hikmah' 143/15 ,Grandpass Rd, Colombo-14.
'Fouzia Manzil', Central Road, Sammanthuarai-3
Printers : Top Prints, 35A, 1st Mosque Lane, Colombo-12
Copy right © : Author
First published; May 1995
Price Rs: 100/-

ISBN 955-95831-0-7

**கல்வியியல் நோக்கு**

நூலாசிரியர் : அல்ஹாஜ் யூ.எல்.அலியார்
பீ.ஏ. (இல) கல்வி டிப்ளோமா
ஆங்கில டிப்ளோமா, எம்.ஏ. (கல்வியியல்)
விரிவுரையாளர், பட்டப்பின் ஆசிரியர் கல்வித்துறை
(தே.க.நி.) கல்முனை நிலையம்
வெளியீடு : 'பைத்துல் ஹிக்மா'
143/15, கிறாண்ட்பாஸ் வீதி, கொழும்பு-14
'பெளஸியா மன்ஸில்', மத்திய வீதி, சம்மாந்துறை.3
அச்சு : டொப் பிரின்ட்ஸ்
35ஏ, முதலாவது பள்ளித் தெரு, கொழும்பு-12,
பதிப்புரிமை : ஆசிரியருக்கு
முதற்பதிப்பு : மே 1995
விலை : ரூபா. 100/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

தூய்மைப் பாத்தியில் தியாக விதையை
துணிவாய் விதைத்த தீரர்
நோய்வாய்ப் படாது வியர்வை நீரால்
விளைபயிர் காத்த வீரர்
வாய்மை மூச்சுப் பசளை இட்ட
வல்லமை கொண்ட வள்ளல்
காய்தல் இன்றி உவந்து என்னைக்
கனிவுப் பயிராய்க் காத்தார்
சேய் நான் அவையில் முந்தியிருக்கும்
செழுமை அமைதி கண்ட
சிமான் ஆதம்பாவா உதுமாலெவ்வைச்
செம்மல் எனது தந்தை
ஆமாம் இந்நூல் அர்ப்பணித்தேன்
இதுவும் போதா! தூ சே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Message From**

## A.D. Gunasekera Esq.,

**Director,**

**Dept. of Post Graduate Teacher Education (N.I.E.)**

Mr. U.L. Aliyar who is a lecturer at the Kalmunai Regional Centre of the Post Graduate Diploma in Education Course has published this book as a collection of articles written by him to Newspapers and Magazines. He has in addition included two articles written specially for this publication.

These articles are on important topics in areas such as Educational Philisophy, Guidance and Counselling, School Management, Methodology and Value Education.

In the field of education, only a few books are available in Tamil medium and as a result the teachers who are following teacher education courses find it difficult to obtain extra reading material to supplement their knowledge. This book will undoubtedly be of much use to such teachers and also for teacher educators.

I take this opportunity to thank Mr Aliyar for his efforts and hope he will continue to enrich the field of education with more and more publications.

**A.D. Gunasekera**

DIRECTOR
Department of Post Graduate Teacher Education.
20.05.1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

. தேசிய கல்வி நிறுவகம் - மஹரகம
பட்டப்பின் ஆசிரிய கல்வித் துறை பணிப்பாளர்

## திருவாளர் ஏ.டி.குணசேகர வழங்கிய

# ஆசியுரை

பட்டப்பின் ஆசிரிய கல்வி டிப்ளோமா நெறியின் கல்முனை பிராந்திய நிலையத்தில் ஒரு விரிவுரையாளராகப் பணியாற்றும் ஜனாப் அலியார் அவரது கட்டுரைகளடங்கிய நூலை வெளியிடுகிறார். இந்த வெளியீட்டுக்கென்றே இரு கட்டுரைகளை விசேடமாக எழுதி சேர்த்துள்ளார்.

கல்வித் தத்துவம், கல்வி உளவியல், வழிகாட்டலும் ஆலோசனையும், பாடசாலை முகாமைத்துவம், கற்பித்தல் முறையியல், விழுமியக் கல்வி போன்ற முக்கிய விடயங்களில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

கல்வியியல் நூல்கள் மிகக் குறைந்த அளவே தமிழில் உள்ளன. இதனால் ஆசிரிய கல்வி நெறிகளைப் பின்பற்றும் ஆசிரிய பயிலுனர்கள் தம் அறிவை வளம்படுத்திக் கொள்வ தற்குத் தேவையான மேலதிக வாசிப்பு சாதனங்களைப் பெற முடியாது சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இந்த நூல் அப்ப டியான ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி கல்விப் பயிற்று நர்க்கும் மிகப் பயனுள்ளதாக அமையும் என்பதில் சந்தேக மில்லை.

ஜனாப் அலியார் அவர்கள் மேற்கொண்ட இவ்வரிய முயற்சிக்காக நான் அவருக்கு நன்றி பாராட்டுவதோடு அவர் தொடர்ந்தும் மேலும் பல வெளியீடுகளைத் தந்து கல்வித்து றையை வளமாக்குவார் என்றும் நம்புகிறேன்.

**ஏ.டி.குணசேகர**

பணிப்பாளர்
பட்டப்பின் ஆசிரியர் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
20.05.95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை கலாசார சமய அலுவல்கள் அமைச்சின்

### மேலதிக செயலாளர்

## அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல் எம்.ஏ. அவர்கள்

### வழங்கிய

# - அணிந்துரை-

கல்வித் தத்துவங்களிலும் நடைமுறைகளிலும் பரந்த அனுபவம் பெற்ற அல்ஹாஜ் யூ.எல். அலியார் அவர்களின் 'கல்வியியல் நோக்கு' எனும் நூல் இந்நாட்டின் கல்வித்துறை வளர்ச்சியில் மற்றுமொரு பங்களிப்பாகும்.

கல்வி என்பது நாளாந்தம் வளர்ந்து கொண்டு செல்லும் ஒன்றாகும். உலகப் 'பரப்பில் கல்வித் தத்துவங்களும், சிந்தனைகளும், முறைகளும் மாற்றமும் வளர்ச்சியும் அடையும் அதேவேளையில் தனிமனிதனும் அவ்வோட்டத்தினை அறிந்து தமது அறிவையும் அனுபவத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

ஒரு குழந்தை வளர்ந்ததிலிருந்து பெரியவனாகி இறக்கும் வரை ஒவ்வொரு நாளும புதிதாக ஒன்றை அறிந்து கொண்டேயிருக்கிறது. அதிலும் குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் இவ்விறுதிக் கட்டத்தில் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, சஞ்சிகை என்பன உலகலாவிய அறிவுப் பொக்கிசங்களை ஒரு மனிதனின் வீட்டுக்கே கொண்டுவந்து சேர்க்கின்றன. இதனைப் பயன்படுத்த வேண்டியது எமது பணியாகும்.

இத்துறையில் ஜனாப் அலியார் அவர்களுடைய இந்நூல் தமது பங்களிப்பைச் செலுத்துகின்றது. அலியார் அவர்கள் கல்வித் துறையில் ஆர்வமும், அக்கறையும், அனுபவமும் உடையவர். அட்டாளைச் சேனை ஆசிரியர் கலாசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் அங்கு விரிவுரையாளராகக் கடமையாற்றினார். கல்வித் தத்துவங்களையும், கல்வி உளவியலையும் முக்கிய பாடங்களாகக் கற்பித்து ஆசிரிய பயிலுனர்களைக் கவர்ந்துள்ளார். அங்கு வெளிவரும் கலை அமுதம் வருடாந்த சஞ்சிகையிலும் அழுத்தமான கட்டுரைகளை எழுதி மாணவரின் பிரயோசனத்துக்கு வழிவகுத்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமது கல்வி முதுமாணிப் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டிருக்கும் பொழுது எனது ஆலோசனைகளை விரும்பி வேண்டினார். அக்காலத்திலேயே கல்வித் தத்துவங்களில் அவருக்குள்ள பரந்த அறிவினை என்னால் உணர முடிந்தது. இத்தகைய பின்னணியுடைய ஒருவரது அத்துறை சார்ந்த கட்டுரைகள் சிறப்பாய் அமைவது இயல்பு. இந்நூலில் கல்வியியல் தொடர்பான 12 கட்டுரைகள் அடங்கியுள்ளன. இவற்றினை வாசிக்கும் பொழுது கல்வியின் பயன்பாடு மிகத் தெளிவாகப் புலப்படுகின்றது. கல்வியில் பரந்த ஈடுபாடுள்ள அதிபர், ஆசிரியர், ஆர்வலருக்கு இவை மிகப் பயன்தரக்கூடியன. அதேபோன்று ஆசிரியர் பயிற்சி பெறும் மாணவருக்கும், கல்வி டிப்ளோமா நெறியைப் பின்பற்றுவோருக்கும் இவை பயனுள்ளவையாக இருக்கும்.

கல்வித்துறையில் மட்டுமன்றி எல்லாத் தொழிற்துறைகளிலும் நாளாந்தம் அறிவையும் அனுபவத்தையும் அதிகரித்துக் கொள்வதன் மூலமே ஒருவர் தனது தொழிற்றுறையில் சிறந்து விளங்க முடியும். நவீன உலகின் தேவைக்கேற்ப கல்வி முறைகளும் மாறிக் கொண்டே வருகின்றன. ஆயினும் கல்வி என்பது மாணவரின் உள்ளத்தே பொதிந்து கிடக்கும் அறிவையும் ஆற்றலையும் வெளிக் கொணர்ந்து அவனை முழு ஆளுமையுடையவனாக்கி தமக்கும் சமுதாயத்துக்கும் உலகுக்கும் அவனது மறுவுலக வாழ்வுக்கும் பிரயோசனமுடையவனாக ஆக்குவதேயாகும். இவ்வடிப்படைத் தத்துவம் ஒன்றேயாயின் அதனை நடைமுறைப்படுத்தும் வழிகள் பல. அவற்றினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து ஒழுகுதல் மூலமே மனித சமுதாயம் மேம்பாடு அடைய முடியும்.

இம்மேம்படுத்தலில் அலியார் அவர்களும் இந்நூலின் மூலம் தமது பங்களிப்பைச் செலுத்துகின்றார். ஓர் அறிஞன் தனது எண்ணக்கருத்துக்களை எவ்வளவுதான் சொற்பொழிவுகள் மூலம் வெளியிட்டாலும், பத்திரிகை, சஞ்சிகைகளில் கட்டுரைகள் எழுதினாலும் அவை ஒருங்கிணைந்து தொகுப்பு நூலாக வெளிவரும் பொழுதுதான் நிறைந்த அந்தஸ்தினைப் பெறுகின்றன. அவ்வந்தஸ்தினைப் பெறும் இந்நூல் அனைவருக்கும் பிரயோசனம் அளிக்க வேண்டும் என ஆசைப்படுகிறேன்.

**அல்ஹாஜ் எஸ்.எச்.எம்.ஜெமீல்**

மேலதிக செயலாளர்

கலாசார, சமய அலுவல்கள் அமைச்சு

*1995.04.20*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டாளைச் சேனை

கல்விக் கல்லூரி பீடாதிபதி

## ஜனாப் ஏ.ஆர்.ஏ. அஸீஸ் அவர்கள் வழங்கிய

# - மதிப்புரை -

ஆசிரிய கல்வியைப் பொறுத்தவரை கல்வியியல் பற்றிய தமிழ் மூலமான நூல்கள் இன்று இலங்கையில் கிடைப்பது அரிது. இதனால் ஆசிரிய கல்வியில் பயிற்சிபெறும் பயிலுனர்கள் மட்டுமல்ல விரிவுரையாளர்கள் கூட கஷ்டப்படுகின்றனர். கல்வியியல் பற்றி தமிழ் மொழி மூலம் வெளிவந்த பல நூல்கள் இன்று கிடைக்காமல் போய்விட்டன. மேலும் கல்வி ஈடுபாடுள்ள புத்தி ஜீவிகளும் கூட தமிழ் மொழியில் கல்வியியல் நூல்கள் எழுதுவதும் குறைவு. இந்நிலை தொடருமானால் வருங்காலத்திலே அரைத்த மாவை அரைப்பது போல மாணவர்களும் விரிவுரையாளர்களும் சில விரிவுரைக் குறிப்புக்களை மட்டுமே நம்பி இருக்க வரும். இந்நிலையினை அறிந்தோ என்னமோ ஜனாப் யூ.எல்.அலியார் அவர்கள் 'கல்வியியில் நோக்கு' என்னும் நூலை வெளியிட முன்வந்துள்ளார்.

ஆசிரியர்களுக்கும், ஆசிரிய பயிலுனர்களுக்கும் பயன் தரக் கூடிய பல நல்ல விடயங்களை உள்ளடக்கிய இந்நூல், அவ்வப்போது நூலாசிரியரால் பத்திரிகைகளிலே எழுதி வெளியிட்ட கட்டுரைகளின் ஒரு தொகுப்பாகும். 12 கட்டுரைகளைக் கொண்ட இந்நூலில் கல்வி முறைமை, கல்வித் தத்துவங்கள், கல்வி உளவியல், கல்வி வரலாறு போன்ற பல விடயங்கள் காணப்படுகின்றன.

ஆசிரிய கல்லூரிகளிலே, பாடநூலாக இந்நூலினைக் கொள்ளாவிடினும் ஓர் உசாத்துணை நூலாகப் பயன்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுத்தக்கூடிய தகுதியினைப் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியதே. ஆசிரியராக, ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக, பாடசாலை அதிபராக, கல்விப் பணிப்பாளராக தான் பெற்ற அனுபவங்களை நூலாசிரியர் பகிர்ந்து கொள்கிறார்.

கல்வியில் நோக்கு என்ற முதலாவது அத்தியாயத்தில் ஆசிரியர் தத்துவம் என்ற பதத்துக்கு பல அறிஞர்களது விளக்கங்களையும் தந்து வரைவிலக்கணப்படுத்தி இருப்பது சிறப்புக்குரிய ஒன்றாகும். தத்துவம் என்பது கல்வி சார்ந்தது என்பதை வலியுறுத்தி சர்வதேசியத்தில் இன்று உருவாகியுள்ள 'வாணாள் முழுவதும் கல்வி' 'யாவருக்கும் கல்வி' 'கட்டாயக் கல்வி' 'இலவசக் கல்வி' 'தொடர் கல்வி' 'திறந்த கல்வி' போன்ற சமகால தத்துவங்களைப் பற்றி ஆசிரியர் அலசியிருக்கிறார்.

இரண்டாவது அத்தியாயம் முன்பள்ளிக் கல்வி பற்றியது. இதில் முன்பள்ளிக் கல்வியின் வரைவிலக்கணம், முக்கியத்துவம், அதன் வரலாறு, இலங்கையில் அதன் வளர்ச்சியும் பிரச்சினைகளும் என பல்வேறு விடயங்களும் விளக்கப்பட்டிருக்கும் முறை சிறப்புக்குரியது. கல்விச் சிந்தனையுள்ள எவரையும் சிந்திக்க வைக்கக்கூடிய ஒரு பகுதி என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் முன்பள்ளி எண்ணக்கருவும் அதன் அமைப்பு செயற்பாடு என்பவையும் இன்று வகுப்பறை மட்டத்தில் சிறப்பாக ஆண்டு ஒன்றிலே ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி பிள்ளை, பெற்றோர், சமூகம், அரசு ஆகிய பல்வேறு கூறுகளையும் பிரச்சினைக்குரிய ஒன்றாகவே மாற்றிவிட்டது.

ஆசிரிய தொழில் தனது அந்தஸ்தினை இழந்து இழிந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்திலே 'ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் உயர் பண்புகள்' என்ற கட்டுரை நல்லாசிரியர்களை உருவாக்க உறுதுணையாக அமைகிறது. அவர் எடுத்துக்கூறும் உதாரணங்கள் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி ஏனைய ஆசிரியர்களுக்கும் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர முகாமைத்துவம், கட்டொழுங்கு, கல்வி வழிகாட்டலும் ஆலோசனைச் சேவையும், பாடசாலை நூலகங்கள் ஆகிய நான்கு கட்டுரைகளும் இன்று எமது நாட்டு பாடசாலை முகாமைத்துவத்தில் கொழுந்து விட்டெரியும் பிரச்சினைகளாகும். அதிபர்களுக்கும், கல்வி நிர்வாகிகளுக்கும், ஆசிரிய கல்வியியலாளர்களுக்கும் பிரயோசனமான குறிப்புக்களை அவை கொண்டுள்ளன.

'இஸ்லாமிய தத்துவ நோக்கில் ஆசிரிய நெறி' 'கல்வி முறையில் கலாசாரத் தனித்துவம்' ஆகிய இரு கட்டுரைகளும் முஸ்லிம்களின் கல்வி பற்றியவை. இவை முஸ்லிம் ஆசிரியர்கள் மட்டுமன்றி, ஏனையோரும் இஸ்லாம் கல்விக்கு வழங்கியுள்ள இடத்தினைப் புரிந்து கொள்ள வழிவகுக்கின்றன. இலங்கைக் கல்வி வரலாற்றில் முஸ்லிம்களின் கல்வி முறைமை, அதன் வளர்ச்சி என்பன பற்றிய பயனுள்ள தகவல்களை அவை தருகின்றன.

எமது நாட்டுக் கல்வி வரலாற்றில் ஒரு வரலாற்றுச் சின்னமாக எடுத்துக் காட்டக்கூடிய பாடசாலைக் கொத்தணி முறை, கல்வி வரலாறு கற்பவர்களுக்கு பிரயோசனமானது.

நூலின் இறுதிக் கட்டுரை ஒரு வரலாற்று ரீதியான விமர்சனமாகும். புவியியல் ரீதியாகவும், சமூக அமைப்பு முறைகளாலும் கற்றல் வளங்களாலும் சமனற்றுக் காணப்படும் எமது நாட்டில் கல்வியும் சமவாய்ப்பின்றிக் காணப்படுவது ஆச்சரியமானதல்ல. காலங்காலமாக ஏற்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் இந்த கல்விச் சமநிலையை பேணுவதற்காகவே கொண்டு வரப்பட்டன. எனினும் சமன்பாடு இன்னும் ஏற்படவில்லை. இதனை வரலாற்று ஆதாரங்காட்டி விமர்சிப்பது கல்வியாளர்களுக்கு பயனுள்ள தகவல்கள் என்பதில் ஐயமில்லை.

'பகற்கனவு' கட்டுரை கல்வி உளவியல் பற்றியதாகும். கல்வி உளவியலில் வேறு பயனுள்ள கட்டுரைகளும் சேர்க்கப்பட்டிருக்கலாம். எனினும் அவ்வப்போது எழுதப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகளின் தொகுப்பு என்பதனால் இங்கு நாம் எதிர்பார்க்க முடியாது.

நூலாசிரியர் கல்வியியலில் அறிவும், அனுபவமும் கொண்டவர் என்பதை அவரது கட்டுரைகள் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. மேலும் எதிர்காலத்தில் முழுமையான கல்வியியல் நூல் ஒன்றினை வெளியிடுவார் என எதிர்பார்க்கிறோம்.

எவ்வாறாயிருப்பினும் கல்வி பற்றிய நல்ல பிரயோசனமான தகவல்கள் பல அடங்கியிருப்பதனால் கல்வி உலகு இந்நூலினை நன்கு வரவேற்கும் என்பதில் சந்தேகமில்லை.

வாழ்க ஆசிரியரின் கல்விப் பணி

ஏ.ஆர்.ஏ. அஸீஸ்

பீடாதிபதி

அட்டாளைச் சேனை, கல்விக் கலாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

அறிவின் மூல ஊற்றாய்
ஆன்மாவின் பேரொளியாய்
இதயங்களை ஆளும்
ஈருலக இரட்சகனாய்
உயர் வேதம் தந்து
உய்வதற்கு வழிவகுத்த
தூயவன் திரு நாமம்
துதித்தே தொடங்குகின்றேன்

கல்வி உலகிற்கு என்னூலை வழங்குவதில் பெருமையடைகின்றேன். கல்வியியல் சம்பந்தமான பன்னிரு கட்டுரைகளை இது தாங்கியுள்ளது.

இன்று கல்வியியல் பற்றிய எண்ணக்கருக்களும் கல்விசார் பிரச்சினைகளும் அவ்வப்போது மக்கள் முன் சமர்ப்பிக்கப்படுகின்றன. கடந்த சில தசாப்தங்களாக உலகில் ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்டுவரும் அறிவுப் பெருக்கம், பொங்கிப் பிரவாகித்து மக்களின் சிந்தனைகளிலும் செயற்பாடுகளிலும் பாரிய செல்வாக்கினை செலுத்தி வருவது பேருண்மை. இந்த மாற்றம் தவிர்க்க முடியாதது. மனித சிந்தனையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியின் வெளிப்பாடு இது. இதனால் மனிதனின் நாளாந்த நடவடிக்கைகள் அறிவியல், தொழில்நுட்ப அம்சங்கள் பொதிந்தவையாக மாறி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய மாற்றங்களின் போது மக்களுக்கு சிந்தனைத் தெளிவையும் பொருத்தப்பாட்டையம், வழிகாட்டலையும் வழங்குவதில் கல்வியியல் துறை பெரும் பங்காற்றுகின்றது. கல்விசார் பிரச்சினைகள், கல்வித்துறையில் மேற்கொள் ளப்படும் மாற்றங்கள் போன்ற விடயங்களில் கற்றவர்கள் குறிப்பாக கல்வித் துறையில் ஈடுபாடுள்ள ஆசிரியர்கள், அதிபர்கள், மேற்பார்வையாளர்கள் போன்றோர் அக்கறை செலுத்துவதும் சமுதாயத்தில் கல்விப் பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இன்றியமையாதது. இந்த வகையில் பிரச்சினைகளை நடுநிலைப் பார்வையுடன் ஆராயும் ஆசிரியரின் பணி மகத்தானது. அவர்களுக்கு உதவுவதே இந்நூலின் குறிக்கோளாகும்.

இங்கு தொகுக்கப்பட்டுள்ள கட்டுரைகள் மூலம் ஆசிரிய ரிடத்திலும் கல்வித்துறையில் ஆர்வமுள்ள மற்றவரிடத்திலும் கல்வியியல் நோக்கு சம்பந்தமான சிந்தனைகள் மேம்படுத்து வதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக கல்விக் களத்தில் பணியாற்றி பட்டதாரி ஆசிரியராக, ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக, கொத்தணி அதிபராக, கல்வி அதிகாரியாக, பிரதேச கல்விப் பணிப்பாளராக, திறந்த பல்கலைக்கழக கல்வியியல் புறநிலை விரிவுரையாளராக, தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் ஆசிரியர் கல்வித்துறை விரிவுரையாளராக, கல்வியியல் முதுமானி ஆராய்ச்சி மாணவனாக பெற்ற அனுபவமும் ஈடுபாடுமே என்னை இத்துறையில் ஊக்குவித்தது எனலாம்.

அவ்வப்போது நாட்டில் கவனத்தை ஈர்த்திருந்த கல்விப் பிரச்சினைகள் சம்பந்தமாக தினகரன், வீரகேசரி, தினபதி ஆகிய தினசரிகளிலும், வார மலர்களிலும் கலை அமுதம், கலாமதி ஆகிய ஆசிரிய கலாசாலை சஞ்சிகைகளிலும் எழுதப்பட்ட பல கட்டுரைகள் இதனுள் சேர்க்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகளில் பொதுவாக புதிய தகவல்களுடன் பொருத்த மான மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன. சில கட்டுரைகள் இத்தொகுப்பிற்கு என்றே எழுதிச் சேர்க்கப்பட்டவையாகும். இறுதியாக இணைக்கப்பட்டுள்ள கட்டுரை தனிநூலா கக்கத்திற்கான தகுதியும் பருமனும் பெற்றபோது முடியுமான வரை சுருக்க வேண்டி ஏற்பட்டது.

கடந்த பல வருடங்களாக கல்வி டிப்ளோமா மாணவர்க ளுடன் ஒரு விரிவுரையாளர் என்ற வகையில் நெருக்கமாகப் பழகும் வாய்ப்புப் பெற்றிருந்தமை இந்நூல் வெளியீட்டுக்கு அடிப்படை எனலாம். கல்வித் தாகமும், ஆய்வு மனப்பாங்கும் கொண்ட டிப்ளோமா ஆசிரிய மாணவர்களும், சகோதர விரிவு ரையாளர்களும் எனது கட்டுரைகள் நூலுருப் பெற வேண்டும் என்று அன்போடும் வாஞ்சையோடும் வேண்டிக் கொண்டார்கள். அவர்களின் வேணவா இந்நூலாக உருப்பெற்றது. நல் லெண்ணம் கொண்ட அவர்களுக்கு நான் நன்றியுடைய வனாவேன்.

நூலாக்கத்திற்காக கட்டுரைகளைத் தெரிவு செய்வதிலும் ஒழுங்கமைப்பதிலும் வெளியீட்டுக்காக வழிகாட்டுவதிலும், வடிவமைப்பதிலும் பல அறிஞர்களும் அபிமானிகளும் எனக்கு மதிப்பிடற்கரிய ஆலோசனைகளை வழங்கியுள் ளார்கள். அவர்கள் என் நினைவில் என்றும் நிலைப்ப வர்கள்.

குறிப்பாக, அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல் எம்.ஏ.(எட்), ஜனாப் மருதூர் ஏ. மஜீத், கவிஞர் ஏ. இக்பால், ஜனாப் அலியார் முஸம்மில் ஆகியோர்க்குக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆக்கத்திற்கு ஊக்கம் தந்தோடல்லாமல் கட்டுரைகளை தட்டச்சில் அழகுறப் பதித்துத்தந்த எனது அன்புக்குரிய ஜனாப் என்.மஹ்ரூப் (ஆசிரியர்) அவர்களுக்கும்

நூலின் முகமென வெளிப்புற அட்டையை வனப்புற வரைந்து வண்ணமும் தந்த ஓவியர் ஹுனா (ஹுசைன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கும், ஆசியுரை, ஆசியுரை, மதிப்புரை வழங்கிய கல்விமான்களுக்கும்

அழகுற அச்சிட்டு குறுகிய காலத்திற்குள் வாசகர் கரங்களில் தவழச் செய்த டொப் பிரின்ட் அச்சகத்தார்க்கும்.

நன்றிகள் கோடி.

**யூ.எல்.அலியார்**
பௌஸியா மன்ஸில்
மத்திய வீதி
சம்மாந்துறை
*1995, மே, 31*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. கல்வியியல் நோக்கு — 1
(Educational Philosophy)

2. முன்பள்ளிக் கல்வி - நோக்கும் போக்கும் — 13
(Pre-School Education)

3. ஆரம்பக் கல்வி ஆசிரியர் - உயர் பண்புகள் — 26
(Characteristics of Primary Teacher)

4. நேர முகாமைத்துவம் — 34
(Time Management)

5. இஸ்லாமிய தத்துவ நோக்கில் ஆசிரிய நெறி — 39
(Teaching Profession - an Islamic view)

6. பகற் கனவு - ஓர் உளவியல் சீராக்கம் — 49
(Day Dreaming)

7. பாடசாலைகளில் கட்டொழுங்கு பேணல் — 60
(Discipline in schools)

8. கல்வி வழிகாட்டலும் ஆலோசனை சேவையும் — 69
(Educational Guidance and Counselling Service)

9. பாடசாலை நூலகங்கள் — 78
(School Libraries)

10. பாடசாலைக் கொத்தணி முறை — 86
(Shool Cluster System)

11. கல்வி முறையில் கலாசார தனித்துவம் — 99
(Cultural Aspects in the Education System)

12. கல்வியில் சம வாய்ப்பு - கோட்பாடும் செயற்பாடும் — 108
(Equal Opportunity in Education)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1
# கல்வியியல் நோக்கு

தத்துவம் என்றால் புரியாத புதிர் என்று சாதாரண மக்கள் கருதுவர். கற்றவர்கள்கூட இதன் பொருளைப் பற்றிக் கரிசனை கொள்வதில்லை, ஒரு வகையில் அவர்களும் ஏதோ ஒரு வாழ்க்கைத் தத்துவத்தைக் கைக்கொண்டவர்கள் என்பது புரிவதில்லை.

வாழ்க்கையில் சம்பவிக்கும் சில நிகழ்வுகளின் போது அல்லது சில சிக்கலான அனுபவங்களை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களில் மனிதனின் சிந்தனையில் அசாதாரண கேள்விகள் மலர்வதுண்டு. அப்போது தனக்குள்தானே கேட்டு விடைபெற முனைகின்ற சிந்தனைத் தொழிற்பாடுகளுக்கு அவன் உட்படுகிறான். எத்தகைய லோகாயத வாதியாக இருப்பினும் மனிதன் தன் இலட்சியக் கோட்டை இடிந்து விழும் போதும் எதிர்பாராத வகையில் அதிக மகிழ்ச்சியையோ அல்லது தாங்க முடியாத துன்பங்களையோ அனுபவிக்கும் போதும் அவனது சிந்தனையில் 'ஏன்?' 'இதன் அர்த்தம் என்ன?' என்ற கேள்விகள் பிறக்கின்றன. அவன் இதுவரை மூழ்கியிருந்த மாயையிலிருந்து விடுபட்டு நடுநிலையிலிருந்து சிந்திக்கின்ற சிந்தனைத் தொழிற்பாடு அவனுக்குச் சில உண்மைகளை உணர்த்துகின்றது. தனது சக்திக்கும் சிந்தனைக்கும் அப்பால் நிகழ்கின்ற இத்தகைய நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு உண்மையை உணர்த்தும் சந்தர்ப்பத்தை வழங்கு கின்றன. இவ்வித சூழ்நிலைகளில் ஒருவன் பெறும் உணர்வும் உண்மையும் தத்துவத்தின் அடிப்படையாக அமைகின்றது. வாழ்க்கைக்கும் வாழ்க்கை நிகழ்வுகளுக்கும் அர்த்தம் கொடுக்கும் சிந்தனைத் தொழிற்பாடே தத்துவம் ஆகும்.

***'பண்டைக் காலத்தில் அறிவுத்திறன் உள்ளவர்கள் பல கேள்விகள் எழுப்பினார்கள். பிரபஞ்சம் யாது? உயிர்கள் உண்டா? கடவுள் உண்டா? துன்பங்களுக்கு என்ன காரணம்? துன்பம் என்பதே உண்மைதானா? அல்லது மனம் உரு வகப்படுத்திக் கொள்ளும் பிரமையா? இதிலிருந்து விடுதலை உண்டா? அதற்கு வழி என்ன? இப்படிப் பல கேள்விகள். இவற்றுக்குப் பல விளக்கங்கள், இவைகள்தாம் தத்துவ ஞானங்கள்.'***

தத்துவம் என்ற சொல் ஆங்கிலத்தில் (Philosophy) ஞானம் என்ற பொருளையும், வட மொழியில் (தரிசனம்) காட்சி யளித்தல் என்ற பொருளையும், தமிழில் (மெய்யியல்) உண்மை என்ற பொருளையும் தருகின்றது. தத்துவம் என்றால் என்ன? என்பதற்குப் பல தத்துவ ஞானிகள் விளக்கம் மூலம் விடையளிக்க முயன்றுள்ளனர். அவரவர் வாழ்க்கை அனு பவங்கள் தத்துவங்களை வழங்கின.

தத்துவம் என்னும் ஆழ்ந்து, அகன்ற அறிவுத்துறை பல அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. அவை ஒவ்வொன்றும் தத்து வத்தின் பிரிவுகளையும் ஆய்வுப்பொருட்களையும் இனங் காட்டுபவையாகவும் உள்ளன. அவை தமக்குள் தொடர்பு டையனவாகவும் உள்ளன. அவையாவன:

*01.* **அதீத பௌதிகவியல்** (Meta Physics): அதாவது பௌதீக உலகுக்கு அப்பாற்பட்ட உண்மைப் பொருட்களை ஆராய்வது.

*02.* **அறிவுக் கோட்பாடு** (Epistomology): அதாவது உண்மை அறிவின் ஆதாரங்களை ஆராய்கின்றது. அவை சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார் அறிவு (Knowledge) ஞானம்(Wisdom) புத்தி (Intellectual) தொடர்பான விடயங்களாகும்.

03. **மதிப்பியல்** (Axiology): மனித வாழ்க்கையில் பொதிந்துள்ள மதிப்புகளை ஆராய்கின்றது.

04. **ஒழுக்கவியல்**(Ethics): அதாவது நல்லது, கெட்டது, விழுமியங்கள் போன்றவற்றை ஆராய்கின்றது.

05. **அளவையியல்**(Logic): அதாவது ஒரு விடயத்தை தெளிவாக அறிவதற்கான சிந்தனை சார்ந்த நுட்ப முறை.

06. **அழகியல்**(Aesthetics): அழகுணர்வு சார்ந்த பெறுமானங்களை ஆராய்கின்றது.

அறிவுக் கோட்பாட்டுக்கும் கல்விச் செயன்முறைக்குமிடையே நெருங்கிய தொடர்புள்ளது. எனவே தத்துவம் என்பது கல்வியியல் சார்ந்தது எனலாம்.

கீழைத்தேச சமய ஞானிகளும், மேலைத்தேய கிரேக்க ஞானிகளும் தத்துவம் பற்றிக் கூறியுள்ள கருத்துக்களே உலகில் தத்துவத்தின் தோற்றம் எனக் கருதப்படுகின்றது. கி.மு. 15ம் நூற்றாண்டில் இருக்கு வேதத்தில் கூறப்பட்டுள்ள கருத்துப்படி உலகில் மாற்றமுறாது நிலவும் சதாகால உண்மைப் பொருள் - மெய்மை (யதார்த்தம்) என்பதே தத்துவமாகும். உபநிடதங்கள், உலகம் -தனிநபர் தொடர்பில் மெய்ப் பொருளைத் தேடியறியும் ஆராய்ச்சியே தத்துவம் எனக் கூறுகின்றன. எனவே கீழைத்தேயத் தத்துவம் நித்திய மெய்ப்பொருளை உணர்வது மட்டுமன்றி அதனை அடையும் வழிவகை காண்பதும் தத்துவம் எனக் கூறுகின்றது. தத்துவஞானி இந்த மெய்ப்பொருளை ஞானக் கண் ஊடாகக் காண்கிறான். எனவே இது தனியே கருதுகோள் -கற்பனை (Hypothesis) சார்ந்ததல்ல.

கிரேக்க தத்துவஞானி சோக்கிரடீஸ், தத்துவம் என்பது ஞானம் என்றார். அதாவது தனிமனிதனின் அனுபவங்கள் சமுதாய அனுபவங்கள் ஆகியவற்றைத் தொடர்புபடுத்தி உலக வாழ்க்கை நெறியாக அது விளங்கவேண்டும். சமுதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்திலுள்ள நன்முறை விழுமியங்கள் (Positive Values), எதிர் மறை விழுமியங்கள்(Negative Values) எவை என ஆய்வு செய்து ஒரு முடிவுக்கு வருவது தத்துவமாகும். பிளேட்டோ தத்துவம் என்பது ஞானத்தின்பால் (Wisdom) பற்று எனக்கூறுகிறார்.

மற்றொரு விளக்கத்தின்படி தத்துவம் என்பது வேதத் துக்கும் விஞ்ஞானத்துக்கும் இடைப்பட்டதாகும். சிந்தனை சார்ந்த பிரச்சினைகளுக்கு வேதம், நம்ப முடியாத அளவு அதிக விளக்கத்தைக் கொடுக்கின்றது. விஞ்ஞானம் மூலம் இத்தகைய பிரச்சனைகளுக்கு விடைகாண முடியாது. எனவே தத்துவம் ஒன்றே இவற்றுக்கு விடைபகர முடியும். தத்துவ விளக்கங்கள் கூட பின்னர் விஞ்ஞானப் பரிசோதனைகளுக்கு உட்ப டுத்தப்பட்டு அவை தத்துவ அறிவியல்களாக வளர்ச்சி பெற்றன. அழகியல், சமூகவியல், உளவியல், என்பன இத்தகைய தத்துவ அறிவியல்களாகும்.

அறிஞர் லெனின், 'மனிதன் உள்ளமும் உடலும் இணை கின்றபோது எழுகின்ற எழுச்சியே தத்துவம்' எனக்கூறியுள் ளார். கல்வியியல் மேதை ஆர். எஸ். பீட்டர்ஸ், 'தத்து வமானது பகுப்பாய்வு ரீதியிலானதோர் செயற்பாட்டுத் தொடராகும். இங்கு எண்ணக்கருக்கள், அறிவு, நம்பிக்கைகள், வழிவகைகள் என்பன பகுப்பாய்வுக்கு உட்படுகின்றன.' எனக் கூறியுள்ளார். ஆர்னோல்ட் றீட், 'மனிதனது பிரச்சினைகள் என்னும் கார்மு கில்களை அப்பால் தள்ளி விளக்கம் என்னும் ஒளிப் பெற்றுக் கொடுக்கும் பேரொளிக் கற்றையே தத்துவம்' எனக் கூறியுள்ளார்.

தத்துவார்த்த நோக்கில் பார்க்கும் போது உண்மை யதார்த்தம் மெய்மை நித்தியம், ஞானம் ஆகியவை ஒரே எண்ணக்கருவைத் தரும் பல சொற்களாகும். மேலைத்தேய கீழைத்தேய விளக்கங்களின் இணைப்பாக தத்துவம் என்பதற்கு பின்வருமாறு விளக்கம் கூறப்பட்டுள்ளது. தத்துவம் என்பது உண்மையை நோக்கிச் செல்லும் எண்ணக்கரு சார்ந்த விவரணத்தின்பால் ஈர்க்கப்பட்ட உளத் தொழிற்பாட்டுத் தொடராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் நமது வாழ்க்கை பற்றியும் நாம் வாழும் உலகம் பற்றியும் நாம் கொண்டுள்ள தனிப்பட்ட மனப்பான்மையை (நோக்கு) தத்துவம் எனலாம். இத்தகைய வாழ்க்கைத் தத்துவம் நமது வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பரந்த நோக்குடன் ஆராய உதவுகிறது. இதனால் பல்வேறு சூழ்நிலைகளிலும் பதட்ட மின்றி அமைதியுடன் சிந்தித்துச் செயற்பட தத்துவம் நமக்கு உதவுகிறது. தருக்க முறைப்படி ஆராய்ந்து நல்ல முடிவுளை எடுக்க நமக்கு உதவுகிறது. மேலும் விஞ்ஞானத்தின் மூலம் விடைபெற முடியாத விடயங்களுக்கு விளக்கம் பெற உதவு வது தத்துவமாகும்.

***'நல்லது என்பது என்ன? தீயது என்பது என்ன? ஒழுக்கம் என்றால் என்ன? மனிதப் பிறப்பின் குறிக்கோள் என்ன? மரணித்த பின் என்ன நடைபெறும்? போன்ற வினாக்களுக்கு விஞ்ஞானத்தின் மூலம் விடை காண முடியாது. குழந்தை எப்படிப் பிறக்கிறது என்பதை விஞ்ஞானம் கூறும். ஏன் பிறக்கிறது? என்பதற்கு அது விடைதரமாட்டாது. அதற்கு தத்துவமே விளக்கம் கொடுக்கும்.'***

'மனிதன் ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகின்றான்' என்னும் தத்துவக் கோட்பாடு பண்டுதொட்டு தத்துவஞானி களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். இதனாலேயே அமெரிக்க கல்வி நெறியாளர் ஜோன் டூயி, 'வாழ்க்கையே கல்வி, கல்வியே வாழ்க்கை' எனக் கூறினார். மனித வாழ்க்கை முழுவதும் தத்துவத்தின் ஆராய்ச்சிப் பொருளாகும். அறி வுக்கும் வாழ்க்கைக்கும் அடிப்படையாக அமையும் பல்வேறு பிரச்சினைகளில் தத்துவம் கவனம் செலுத்துகிறது.

தத்துவஞானி பேட்றன் றஸ்ஸல், 'தத்துவத்தின் ஆய்வுப் பொருளானது வாழ்க்கை, உலகம் என்ற இரு மாற்றுக் கார ணிகளைக் கொண்டது. அதாவது மரபு வழிவந்த சமய, ஒழுக்க நெறிகள் (வாழ்க்கை) விஞ்ஞான பூர்வமான நுண்ணாய்வுகள் (உலகம்) என்பனவாகும் எனக் கூறினார். தத்துவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு அம்சங்களும் அடங்கியிருக்கும். எனினும் தத்துவ ஞானிகளின் கருத்துக்களின் இவ்விரு மாற்றுக் காரணிகளின் விகித சமனும் வேறுபட்டுக் காணப்படும். தத்துவம் என்பது மெய்ப்பொருளைத் தேடியறியும் ஞானம் சார்ந்த தொழிற்பாடு எனலாம். 'கல்வியும் தத்துவமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்' என்று டபிள்யூ. டி. றோஸ் என்பார் கூறுகிறார். 'ஒவ்வொரு கல்விமுறையும் யாதேனும் வாழ்க்கைக் கண் ணோட்டத்தின் அடிப்படையிலேயே அமைகின்றன. ' என்று ஜெறோம் புறூணர் கூறியுள்ளார்.

எனவே வாழ்க்கைக் குறிக்கோள்களை அடைவதற்கு கல்விச் செயன்முறை ஒரு வழியாக இருக்கின்றது. மேலும் வாழ்க்கைத் தத்துவத்தின் ஒரு பகுதியாகவே கல்வித் தத்துவம் அமைகின்றது. வாழ்க்கைப் பிரச்சினைகளையும் கல்விப் பிரச்சினைகளையும் உலகின் பல்வேறு பிரச்சினைகளையும் தத்துவக் கண்ணோட்டத்தில் நோக்கும் போது உண்மையைக் கண்டறிவதற்கு வழியேற்படுகின்றது. இந்த நடுநிலைப் பார்வை உல அமைதிக்கும் சமாதானத்துக்கும் அடிப்படையாக அமைகின்றது. 'போரும் சமாதானமும் மனித உள்ளத்திலேயே முளை விடுகின்றன' எனவே மனித உள்ளத்தைப் போஷிப்பதில் தத்துவம் பெரும் பங்காற்றுகின்றது.

கல்வித் தத்துவம் கல்விப் பிரச்சினைகளுக்கு தத்துவார்த்த விளக்கம் அளிக்கின்றது. 'கல்வியியலாளர் யாவரும் தத்துவ ஞானிகளாக இருக்க வேண்டும் என றொபர்ட் றஸ்க் கூறு கின்றார். அதேபோன்று தத்துவ ஞானிகளே கல்வியியலாளராக வேண்டும். எனவே தத்துவ நோக்கு என்பது கல்வியியல் நோக்கு ஆகும். பல்வேறு கல்விப் பிரச்சினைகளையும் தத்துவ நோக்கில் ஆராய்ந்து கல்வியியலாளர்களுக்குத் தேவையான வழிகாட்டலை வழங்குவது தத்துவ ஞானிகளின் பொறுப்பா கும்.

கல்வியின் நோக்கங்கள், குறிக்கோள்கள், கல்வியின் இறுதி நோக்கம் என்பன நாட்டுக்கு நாடு காலத்துக்குக் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்டுச் செல்வன. கல்வியினூடாக மாணவர் வாழ்க்கைக்குத் தேவையான அறிவு திறன், மனப்பாங்குகளைக் கற்கின்றனர். இந்த இடத்தில் கல்வியின் நோக்கங்கள் வாழ்க்கைத் தத்துவத்துடன் இணைகின்றன. அதேபோன்று வாழ்க்கைத் தத்துவத்தினின்றும் எழுந்த கல்வித் தத்துவம் கல்வி நோக்கங்களை வரையறுக்கின்றது. ஆங்கிலக் கல்வி நெறியாளர் ஹேபார்ட், கற்பித்தல் முறையே கல்வித் தத்துவம்' என்றார். இதன்படி செயன் முறையிலிருந்து தத்துவம் பிறக்கின்றது. அமெரிக்கக் கல்வி நெறியாளர் ஜோன் டூயி, 'ஆராய்ச்சியில் அறிவியல் பிரயோகத்தில் தத்துவம் எழுகின்றது' என்றார்.

பல்வேறு கல்வி அமைப்புக்களிலும் பல்வேறு கல்வித் தத்துவங்களின் செல்வாக்குக் காணப்படுகின்றது. அவை தமக்குள் கலந்து சமரசம் (Eclectic) கண்டுள்ளன. மரபு வழிவந்த கல்விக் கருத்துக்களுடன் பிற்காலத்தில் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியூடாக எழுந்த புதிய கல்விக் கருத்துக்களும் இணைந்து புதிய கல்வி நோக்கங்களை நிர்ணயிக்கின்றன. எனவே கல்வித் தத்துவம் என்பது வாழ்க்கை நோக்கங்கள், வாழ்க்கைக் குறிக்கோள்கள், வாழ்க்கை விழுமியங்கள் (Values), பாரம்பரியங்கள் (Heritage) என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

கல்விக்கும் தத்துவத்திற்குமுள்ள தொடர்பில் மேற்கத்தைய கீழைத்தேய கல்வி நெறியாளர்களிடையே உள்ள ஒப்புவமை எத்தகையது என்பது அறியப்பட வேண்டியதாகும். உடல் (Body) உள்ளம்(Mind) , ஆன்மா (sprit) ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்து முழு வளர்ச்சி பெறச் செய்வதே கல்வியின் நோக்கம் என்பது மேற்கத்தைய கல்வி நெறியாளர்களின் பொதுவான கருத்து. உடலுக்கு முதலிடம், அறிவுக்கும், உணர்வுக்கும் (ஆன்மா) அடுத்த இடங்கள். தமிழ் மரபின்படி சான்றோர் கொண்ட சமுதாயத்தை உருவாக்குவது கல்வியின் நோக்கம். சான்றோர் என்பார், மனம், மொழி, மெய்யால் தூய்மையுடையோர். தமிழ் மரபில் மனத்திற்கு முதலிடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதத்தின் அரசியல், ஆன்மீக, கலாசார விடுதலைக்கு வித்திட்ட தத்துவஞானி மகாத்மா காந்தி, தலை (உள்ளம்) இதயம் (ஆன்மா), கைகள் (உடல்) ஆகியவற்றின் சமநிலை வளர்ச்சிக்குத் தத்துவம் தந்தார். இங்கு உள்ளம் முதலிடம் வகித்துள்ளது. இந்தியாவின் தத்துவமேதை அல்லாமா முகம்மது இக்பால் கல்வியின் நோக்கத்தைப் பற்றிக் கூறும்போது 'ஒவ்வொரு தனிமனிதனதும் தான் (self) என்ற தன்மையின் விருத்தியே கல்வியின் உயர் நோக்கம்' என்றார். இந்நோக்கமே தனி மனிதனதும் சமூகத்தினதும் பொது நோக்கமாக அமைய வேண்டும் என்றார். பொதுவாக கீழைத்தேய சிந்தனைகளில் உள்ளம் (மனம்) முதலிடம் பெறு கின்றது. மேலும், மேலைத்தத்துவம், கல்விக்கு புறச் சூழலின் அவசியத்தை வலியுறுத்தும் அதேவேளை கீழைத்தேயத் தத்துவம், அகச்சூழலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. புலன்களுக்கு அப்பாற்பட்ட ஓர் அனுபவத்திலிருந்து எழுவது கீழைத்தேயக் கல்வித் தத்துவமாகும்.

எனவே தத்துவ நோக்கில் பார்க்கும் போது உலகில் நிலவும் கல்விப் பிரச்சினைகள் அனைத்தும் அடிப்படையில் தத்துவப் பிரச்சினைகளே எனலாம். கலைத்திட்டம், கல்விக் குறிக் கோள், கற்பித்தல் முறை, ஆசிரியர் பயிற்சி, கற்றலும் தூண்டலும், முற்போக்குக் கல்வி, கல்வியில் சம வாய்ப்பு, கட்டாயக் கல்வி, கல்வியில் சுயாதீனம், விழுமியக் கல்வி, சமாதானத்துக்கான கல்வி, தொழிற் பயிற்சி, கல்வி முகா மைத்துவம், பாடசாலை ஒழுங்கமைப்பு, கல்வித் தொழில் நுட்பம், உயர் கல்வி விஸ்தரிப்பு, கல்வித் திட்டமிடல், கல்வி மதிப்பீடு போன்ற பல அம்சங்களிலும் காணப்படும் - எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளுக்கும் முடிவுகளுக்கும் செயன்முறைக் கோட்பாடுகளுக்கும் கல்வித் தத்துவக் கருத்துக்களே அடிப்படையாக உள்ளன.

வாழ்க்கைத் தத்துவம், கல்வித் தத்துவம் என்பவற்றைப் பற்றிய அறிவின்றி கல்விப் பிரச்சினைகளை இனங்காண்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடினமாகும். குறிப்பாக கல்வித் துறையில் ஈடுபடும் நெறியாளர்களும், ஆசிரியர்களும், ஆலோசகர்களும் தத்துவ ஞானிகளாக இருக்க வேண்டும். அதாவது கல்விப் பிரச்சி னைகளை தத்துவ நோக்கில் அணுகக் கூடியவராக இருக்க வேண்டும். வாழ்க்கை என்பது என்ன? மனிதனின் குறிக்கோள் என்ன? இலட்சியம் என்ன? என்பவற்றுக்கான விளக்கங்க ளுடன் வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுப்பது வாழ்க்கைத் தத்துவமாகும். 'தங்களது வாழ்க்கைத் தத்துவங்களுக்கு ஏற்ப மனிதர்கள் வாழ்கின்றனர். இத்தகைய தத்துவங்களின் துணை யின்றி வாழ்தல் இயலுவதன்று' என அறிவியல் மேதை ஆல்டவுஸ் ஹக்ஸ்லி கூறினார். கருத்தியல் வாதம் (Idealism) 'வாழ்க்கையின் உயர் இலட்சியம் மெய்யியல் (உண்மை), அழகியல் (அழகு) அறிவியல் (நன்மை) ஆகியவற்றை அடைவதன் மூலம் முழுமை பெறுதல்' எனக் கூறியது. அதே போன்று ஒவ்வொரு சமய தத்துவமும் வாழ்க்கையின் குறிக்கோள்களை மனித சமுதாயத்துக்கு வழங்கியுள்ளன. 'வாழ்க்கையின் பொருள் என்ன? அல்லது மனிதனின் குறிக்கோள் என்ன? என்ற வினாவுக்கு சமயம் மட்டுமே விடை தரக் கூடியதாய் உள்ளது' என அறிஞர் டி.ஜே.ஓ. கொனர் கூறுகிறார். இந்து சமயம் மெய்ப் பொருளை உணர்தல் எனக் கூறியது. சைவ சித்தாந்தம் ஆன்மா பிரம்மாவுடன் இணைதல் என்கிறது. சமண, பௌத்த சமயங்கள் பிறவிக் கடலின் துன்பங்களிலிருந்து விடுபட்டு நித்திய மெய்ப்பொருளை அடைதல் - பரி நிர்வாணம் அடைதல் எனக் கூறின. கிறிஸ்தவ சமயம், பரிபூரண கிறித்தவம் என்னும் ஆன்மீக வாழ்க்கையை வலியுறுத்தியது. சீன மதத் தத்துவம், குடும்ப வாழ்க்கை உறவுகளை வலியுறுத்தி அற வாழ்க்கைக்கு அத்திவாரமிட்டது. இஸ்லாமிய சமய மரபு இம்மை மறுமை எனும் ஈருலக வாழ்க்கையின் சுபீட்சத்தையும் கூறியது. அனைத்திற்கும் அற நோக்குச் சிந்தனை அடிப்படையாகும். 'கல்வியில் அற நோக்குத் தத்துவம் இழையோட வேண்டும்' பொது நலம், பிறருக்குதவி செய்தல், சமூக நீதி, நல்லொழுக்கம், நன்முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியங்களைப் போற்றல், மானுடப் பண்பு, ஆன்ம ஈடேற்றம் என்பன கல்வியியல் நோக்கமாக அமைய வேண்டும்.

மனிதர்களை உருவாக்கும் ஆசிரியர்களிடத்தில் சிறந்த வாழ்க்கைத் தத்துவம் இருக்க வேண்டியது அவசியமாகும். ஆட்சியாளர்களையும் உருவாக்குபவர்கள் ஆசிரியர்களே. 'இதனாலேயே ஆசிரியர்கள் சமூகத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தார்கள். எத்தகைய கல்வி மரபிலும் கற்றோருக்கு மகத்துவம் வழங்கப்பட்டிருந்தது. தமிழர் கல்வி மரபிலும் இத்தகைய பண்பு காணப்பட்டது. ஆசிரியரிடத்தில் சீரிய சிந்தனை இல்லாவிட்டால் மாணவரிடத்தே சிறந்த பண்பு களை உருவாக்க முடியாது. எத்தகைய மனிதரை உருவாக்க வேண்டும் என்பதற்கு அடிப்படையான தத்துவ விளக்கம் ஆசிரியர்க்கு அவசியமாகும். 'அன்றாடம் எழும் கல்விப் பிரச்சினைகளுக்கு விடை காண்பதில் எமது வாழ்க்கைத் தத்துவம் பெருமளவில் பங்களிப்புச் செய்கின்றது' என றொபர்ட் றஸ்க் கூறுகிறார்.

வாழ்க்கைத் தத்துவத்தினின்றும் எழுந்த கல்வித் தத்துவம் கல்விப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வழி காட்டுகின்றது. வாழ்க்கையைச் சூழ்ந்துள்ள மாயை மறைந்தோட ஒளியூட்டு கின்றது. தத்துவ ஞானிகள் வழங்கியுள்ள உயரிய கருத்துக்க ளும், கோட்பாடுகளும் எமது அன்றாடக் கல்விப் பிரச்சி னைகளுக்கு பரிகாரங்களாக அமைந்துள்ளன. மனித உள்ளத்தின் பூரண வளர்ச்சி மூலமே மெய்ப் பொருளை அணுக முடியும் எனக் கூறிய தத்துவஞானி பிளேட்டோவின் கருத்தி யல் வாதம் (Idealism) ஞானிகளே ஆட்சியாளர்களாக இருக்க வேண்டும் என வலியுறுத்தியது. இயற்கையோடொட்டிய கல்வியே பிள்ளையின் சமநிலை விருத்திக்கு உதவும் எனக் கூறிய றூஸோவின் இயற்கைவாதம் (Naturalism) பிள்ளை மையக் கல்வியை வலியுறுத்தியது. செயன் முறை அனுபவம் மூலம் பெறும் கல்வியே உண்மையான கல்வி எனக்கூறிய டூயியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பாட்டு வாதம் (Pragmatism) கல்வியின் சமூகப் பயன் பாட்டை வலியுறுத்தியது. மேலும் தத்துவத்துறையில் சடப் பொருள் வாதம் (Materialism) மானுடவாதம் அல்லது மக்கள் நலக் கோட்பாடு (Humanism), அனைத்தறிவுக் கோட்பாடு (Pan-sophism) யதார்த்தவாதம் (Realism) போன்ற வேறும் பல கோட்பாடுகள் இருப்பினும் மேற்கூறப்பட்ட மூன்று தத்துவப் பிரிவுகளும் பிரதானமானவையாகும். பிற்கால தத்துவ ஞானிகள் இக்கருத்துக்களின் மீது தமது சிந்தனையைத் தொடர்புறுத்தி தத்தம் கோட்பாடுகளை முன்வைத்தனர்.

இறுதியாக, கல்வித் தத்துவம், சமகால சகல பிரச்சி னைகளையும் அணுகி அலசி தீர்வு வழங்க வேண்டும். தத்துவ நோக்கு கல்வியியல் நோக்காகப் பரிணமிக்க வேண்டும். 'அது மக்கள் நல கோட்பாட்டைப் பரப்புதல் வேண்டும். மக்கள் நலப் பண்பிலிருந்து அகில உலக நோக்கு (Universality) எனும் தத்துவம் பிறக்க வேண்டும். 'தனக்கென வாழாப் பிறர்க்கு ரித்தாளன்' என்றவாறு 'அனைத்துலக மனப்பாங்கு உலக நெறியாக பிரகாசிக்க வேண்டும்' என்றார் மறைந்த பேராசிரியர் ப.சந்திர சேகரம் அவர்கள். இன்றைய உலகு வேண்டி நிற்பது, சம தர்மத்தில் எழுந்த மக்களாட்சித் தத்துவம். இதற்காக வாணாள் முழுவதும் கல்வி (Life Long Education) ) யாவருக்கும் கல்வி (Universal Education) கட்டாயக் கல்வி (Compulsory Education) இலவசக் கல்வி (Free Education) தொடர் கல்வி (Continuing Education) திறந்த கல்வி (Open Learning) என்பன முக்கி யத்துவம் பெறுகின்றன. இன்றைய கற்கும் சமுதா யத்தில் (Learning Society) நிறை மனிதன் (Complete Man) உருவாக வேண்டும்.

## உசாத்துணைகள்

01. கல்வித் தத்துவம் - பேராசிரியர் ப. சந்திரசேகரம்

02. கல்வியலுக்கோர் அறிமுகம் - பேராசிரியர் எஸ். முத்துலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*03. கல்வியியற் சிந்ததனை - பேராசிரியர் ப. சந்திரசேகரம், சாவகச்சேரி, 1985*

*04. கல்விக் கோட்பாடுகளும் தத்துவங்களும் - எஸ். சந்தானம், சென்னை, 1969*

*05. இந்தியச் சிந்தனை மரபு - ர.சு. நல்லபெருமாள், சென்னை, 1990*

*06. கல்வியின் தத்துவ அடிப்படைகள் 1ம் பகுதி, தேசிய கல்வி நிறுவகம்.*

07. An Introduction to the Philosophy of Education - D.J.O. Conner, London, 1980

08. Educational Systems of the Ancient Tamils - J. Kothaipillai, 1972

09. Humanist Tradition in Indian Educational Thought - K.G. Saiyidain, London, 1966



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2
# முன்பள்ளிக் கல்வி - நோக்கும் போக்கும்

பொதுக்கல்வியை வழங்கும் பாடசாலைகளில் மாண வர்களை அனுமதிக்கும் ஆகக்குறைந்த வயது காலத்துக்குக் காலம் வேறுபட்டு வந்துள்ளது. நாட்டுக்கு நாடும் இது வேறுபட்டுக் காணப்படுகிறது. இலங்கையில் சில காலம் இவ்வயது ஆறாகவும் சிலகாலம் ஐந்தாகவும் மாறிவந்துள்ளது.

இவ்வயதுக்கு முன்னுள்ள சிறாரின் கல்வி பற்றி இக்காலத் தில் மிக முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்படுகின்றது. இது முன்பள்ளிக் கல்வி அல்லது பாலர் கல்வி என்று பொதுவாக அழைக்கப்படுகின்றது. இந்த முன்பள்ளிக் கல்வியை வழங் கும் நிறுவனங்கள் இன்று உலகளாவிய ரீதியில் பல்கிப் பெரு கியுள்ளன. முன்பு, மரபுரீதியாக ஒரு குழந்தை பொதுப் பாட சாலைக்கு அனுமதி பெறமுன்னர் தன் வீட்டில் அன்னை தந்தையரின் அல்லது மூத்த சகோதரர்களின் அரவணைப்பில் படிப்பினையூட்டும் நல்ல கதைகளையும், மனதுக்கினிய - உள வளர்ச்சிக்கு உரமூட்டும் பாட்டுக்களையும் கேட்டும் பாடியும் பரவசமடைந்தது. உடலுக்கும் உள்ளத்துக்கும் உவகைதரும் விளையாட்டுக்களையும் விளையாடி மகிழ்ந்தது. மூத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிடமிருந்து நல்ல விழுமியங்களையும் கற்றுக் கொண்டது. முன்னைய சமூக பொருளாதார அமைப்பில் இது சாத்தியமாகவே இருந்தது.

ஆனால் கைத்தொழிற் புரட்சியும் பொருளாதார அபிவிருத்தியும் இச்சூழ்நிலையை மாற்றியது. நவீன மாற்றங்கள் மனித முன்னேற்றத்துக்கொ அமைந்து பல வசதிகளையும் சௌகரியங்களையும் ஏற்படுத்தித் தந்துள்ள அதேவேளை பல நஷ்டங்களையும் விளைவித்துள்ளதையும் மறுக்க முடியாது. சமூக வாழ்க்கையும் குடும்ப வாழ்க்கையும் சின்னாபின்னமடைந்துள்ளதோடு சமூக மனவெழுச்சிச் சீரழிவுகளையும் ஏற்படுத்திவிட்டன. மனித விழுமியங்களையும் அவை மாசுபடுத்திவிட்டன. இச்சூழ்நிலை கல்வியையும் பாதித்துள்ளது. மனிதனின் நற்பண்புகளை உருவாக்க வேண்டிய கல்வி பதிலாக பௌதீக விருத்தியிலேயே அதிக கவனத்தைச் செலுத்தத் தொடங்கியது. ஒரு தனிமனிதனின் தரத்தினை அளவிடும் அளவுகோலாக இருக்க வேண்டிய கல்வி வாழ்க்கைக்கு உழைப்பதற்கான கடவுச் சீட்டாக மாறியது. கைத்தொழிற் புரட்சியினால் ஆண்களும் பெண்களும் இயந்திரமாக மாறியுள்ளனர். மானுடம் (Humanity) அதன் விழுமியங்களை இழந்துள்ளது. அதேபோல கல்வியும் அதன் யதார்த்தப் பொருளையும் நோக்கத்தையும் இழந்துள்ளது.

நவீன சமுதாய அமைப்பில் பெண்களின் சமபங்கு வலியுறுத்தப்படுகின்றது. இது பெண்களின் மனப்பாங்கிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. குடும்பப் பெண்ணாக இருந்த நிலையிலிருந்து விடுபட்டு ஆண்களைப்போன்று வெளியிடங்களில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொண்டமையும் நவீன சமுதாயத்திலேற்பட்டுள்ள ஒரு மாற்றமாகும். இவை குடும்ப உறவுகளிலும் பாரம்பரிய கடமைக்கூறுகளிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

மேற்படி நவீன மாற்றங்கள் ஒரு புறம் குழந்தைகளைப் பராமரிப்பதில் புதிய வழிகளுக்கான தேவைகளை வலியு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுத்தியுள்ளன. மறுபுறம் உளவியல் அடிப்படையிலும், சமூக வியல் அடிப்படையிலும் இளஞ்சிறாரின் எதிர்காலம் பற்றிய சிந்தனைகள் குழந்தைகளுக்கான நல்ல சுற்றாடலைத் தேவைப் படுத்தின. இன்றைய வேலைசெய்யும் தாய் அன்றைய குடும்பத் தாயைப் பார்க்கிலும் மிகக் குறைந்த அளவு நேரமே தன் குழந்தைகளுக்காக தியாகம் செய்யக்கூடியவளாக இருக்கின்றாள். இதனால் குழந்தை வீட்டில் சமூக உறவுக் கப்பால் தனிமைப்படுத்தப்படுவதோடு சமவயது அயலவப் பிள்ளைகளுடன் உறவாடவும் சந்தர்ப்பம் இல்லாத துர்ப் பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

**'புதிய உலகிற்கான புதுமனிதன் இன்று குழந்தையாகப் பிறந்துள்ளான். அவனை நாளைய உலகிற்கு மனிதப் பண்புள்ளவனாக மாற்றி அமைக்கும் பொறுப்பு மூத்த சந்ததிக்குரியது என்பதும், குழந்தை என்பது நாளைய மனிதனின் தந்தை என்பதும் உணரப்பட்டது.** 'எனவேதான் குழந்தைகள் பொதுப் பாடசாலைகளில் அனுமதிபெறும் வயதுவரை குழந்தைகளை நல்ல சுற்றாடலில் பராமரிப்பதும் உளவியல் அடிப்படையில் அவர்களின் தேவைகளை நிறைவு செய்வதும் அவர்களுக்கு ஏற்ற அடிப்படை சுகாதார, கல்வி வசதிகளை வழங்குவதும் கடந்த நான்கு, ஐந்து தசாப்தங்களாக நன்கு உணரப்பட்டு வந்துள்ளது. மேலும் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பலமிக்க சமூக, அரசியல் அமுக்கங்கள் (Pressures) சிறுவர்க்கும் கல்வி வசதிகள் விரிவாக்கப்பட வேண்டும் என்ற எழுச்சியை மேலும் வலுப்படுத்தின எனலாம்.

முன்பள்ளிக் கல்வி எழுச்சியைத் தூண்டியதில், உளவியல், சமூகவியல் ஆய்வுகளும் கணிசமான அளவு காரணமாக அமைந்தன எனலாம்.

அவை பின்வருமாறு

***01. இளம்பிராயத்தில் உள விருத்தியின் தன்மை பற்றிய புதிய எண்ணக் கரு (1963)***

Class No:
Acc No 1793
Arasady Public Library
Municipal Council



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. ஊக்கல் சம்பந்தமாக எழுந்த எண்ணக் கருக்கள். (1959)**

**03. பியாஜேயின் ஆக்க சிந்தனையும் சிறாரின் சிந்தனைத் தொழிற்பாடும் பற்றிய கருத்துக்கள்.(1961)**

**04. சமூக வகுப்பு வேறுபாடுகளுடன் தொடர்பான கற்றல், மொழி அடைவு பற்றிய விளக்கம். (1961)**

**05. அறிவு அமைப்பு, முன்னைய கற்றலுக்கும் பின்னைய கற்றலுக்கும் இடையேயுள்ள தொடர்பு பற்றிய புதிய வியாக்கியானம். (புறூனர் 1960)**

**06. மூளை அமைப்பிலும் இரசாயனத்திலும் முன்னைய தூண்டலின் விளைவுகள் (1969)**

**07. மனித நுண்மதி பற்றிய ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட புதிய தரவுகள். (1965)**

இவ்வாறான ஆய்வுகளும் கண்டு பிடிப்புக்களும் காரண மாக ஒரு குழந்தையின் சமூக, மனவெழுச்சி, உடலியல் அனுபவங்கள் அதன் ஆளுமை வளர்ச்சியில் மிகவும் பலமான செல்வாக்கைக் கொண்டுள்ளன என்பது நிறுவப்பட்டுள்ளது.

வேறுபட்ட சமூக, பொருளாதார, உளவியல் மட்டத்தைக் கொண்ட இரு வேறு குடும்பங்களில் வளர்க்கப்பட்ட ஒரே நுண்மதி ஆற்றல்களைக் கொண்ட இரு பிள்ளைகள் கல்விப் பேற்றில் - பெறுபேற்றில் சமனான சந்தர்ப்பங்களைப் பெற்றி ருக்காது. இதுவே சம சந்தர்ப்பம் வழங்கல் என்னும் ஜன நாயகக் கோட்பாடு பாலர் கல்வியின் எடுகோளாக அமைந்துள்ளமைக்குக் காரணமாகும். இந்த எண்ணக் கருவை மிக ஆழமாக நோக்கினால் ஜனநாயகக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ள அரசுகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ முன்பள்ளிக் கல்விக்கு பொறுப்பு எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும்.

முன்பள்ளிக் கல்வி என்பது சர்வதேச கல்வி ஸ்தாபனத்தின் விளக்கப்படி 'கட்டாயமாகப் பாடசாலை சென்று பெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கு முந்திய கல்வி' எனப் பொருள் படுகின்றது. அதாவது ஒரு பிள்ளை தன் வீட்டுச் சூழலில் பெற்ற கல்விக்கு மேலதிகமாக முழுமையான செயற்பாங்கான கல்வியை வழங்கி அடுத்துச் செல்லவுள்ள பொதுப் பாடசாலைக் கல்விக்கு அப்பிள்ளையை தயார் படுத்துவதாகும்.

தரமான முன்பள்ளிக் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு விளக்கப்படுகின்றது.

01. சுகநலனுக்கும் உடலியல் விருத்திக்கும் ஊட்டமாய் அமைவது

02. குழந்தைகளின் ஆர்வத்தினூடாக அறிவு ரீதியான தூண்டலை ஏற்படுத்துவது

03. குழந்தைகள் குறித்து சமூக விழிப்புணர்வை மேம்படுத்துவது

04. அன்பு, கருணை என்பவற்றினூடாக நேரிய சுய எண்ணக்கருவை மேம்படுத்தல்.

05. தரமான முன்பள்ளிக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்குரிய செயற்பாடுகளை மேம்படுத்தல்.

ஒரு குழந்தையின் பாடசாலை வாழ்க்கையின் ஆரம்பக் கட்டம் அதன் வாழ்க்கையின் மிக முக்கிய கட்டமாகும். அண்மைக்கால ஆய்வுகளின்படி ஆரம்ப பாடசாலையில் ஒரு பிள்ளையின் வெற்றி அல்லது தோல்வி அப்பிள்ளை சென்ற முன்பள்ளியின் தன்மையிலேயே பெரிதும் தங்கியுள்ளது. உயர்தரத்திலான முன்பள்ளிக் கல்வியை வழங்கும் நிறுவனங்கள் சிறந்த ஆக்கத்திறனையும் அறிவுப் பெறுமானங்களையும் கொண்ட பிள்ளைகளை உற்பத்தி செய்கின்றன.

முன்பள்ளிப் பாடவிதானத்தில் விளையாட்டு முக்கிய இடத்தை வகிக்கின்றது. மனவெழுச்சிச் சீராக்கமும், முதிர்ச்சியும் இதனூடாகவே வளர்ச்சியடைகின்றது. மொழியும், சமூக விருத்தியும் கூட விளையாட்டால் ஊட்டம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே முன்பள்ளிப் பாடவிதானத்தில், விளையாட்டு முதன்மையாகி தகவலை அடிப்படையாகக் கொண்ட அறிவுச் சுமை தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில் பிள்ளையின் ஆரம்ப வயதுகள் இயல்பாகவே விளையாட்டுத் தன்மை வாய்ந்தது.

ஒரு குழந்தை பிறந்தது முதலே பல்வேறு விருத்திகளையும் பெறத் தொடங்குகிறது. முதிர்ச்சியும் சூழலும் இதற்கு அடிப்படையாகும். முதிர்ச்சியைப் பயிற்சியினால் பெற முடியாது. அதேபோன்று சமூக நடத்தை என்பது குழந்தை வாழும் சூழலிலேயே விருத்தியடைகின்றது. ஒரு குழந்தை பெற்றோரினால் அளவுக்கதிகமான பாதுகாப்புப் பெறுவதனாலும், அல்லது பெற்றோரினால் கவனக்குறைவாக நடத்தப்படுவதனாலும் இயல்பாகவே அக்குழந்தைக்கு உளவியல் ரீதியில் பின்னடைவும் (Retarded ) தாமத விருத்தியும் (Slow Development) ஏற்படுகின்றது. இத்தகைய பின்தங்கிய அல்லது ஆரோக்கியமற்ற வீட்டுச் சூழலால் ஏற்படும் இடைவெளியைக் குறைக்க முன்பள்ளிகள் உதவுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரை பெண்கள் வேலைப்படையில் இணைந்து கொள்வதும், வேலை வாய்ப்புக்காக மத்திய கிழக்கு போன்ற தூர நாடுகளுக்கு வெளியேறுவதும் பெண்களின் தாய்மை உறவையும், தாய்மை உணர்வையும் வறிதாக்கியுள்ளது அல்லது அரிதாக்கியுள்ளது. இதனால் மறுபுறம் குழந்தைகளுக்கு அன்பும், பாதுகாப்பு உணர்வும் இல்லாது போய்விட்டன. இந்த அவல நிலைக்குரிய பரிகாரம் முன்பள்ளிகளுக்கே விடப்பட்டுள்ளன.

II

இதனால் முன்பள்ளிக் கல்வி அல்லது பாலர் கல்விக்கான தேவை இன்று உலகலாவிய ரீதியில் நன்கு உணரப்பட்டுள்ளது. ஆயின் பெருந்தொகையானோர் அதன் முக்கியத்துவத்தை இன்னும் பொருட்படுத்தாதவர்களாகவே உள்ளனர். மூன்றாம் உலக நாடுகளில் இக்கல்வி அதன் முழுமையான இலக்கை இன்னும் எய்தவில்லை. முன்பள்ளி வயதுக்குரிய சிறுவர்களில் 10 வீதத்துக்கும் குறைவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களே முன்பள்ளி செல்கிறார்கள். சகலருக்கும் ஆரம்பக் கல்வி (Universal Primary Education) என்ற இலக்கை எய்துவதிலேயே பெரும் பிரச்சினைகளை இந்நாடுகள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் போது முன்பள்ளிக் கல்வி முதன்மை இழப்பது ஆச்சரியமன்று. மேலும் போதிய அளவு பௌதீக வசதிகளும், உபகரணங்களும் இதற்கு இன்றியமையாதன எனக் கொள்ளும்போது முன்பள்ளிக் கல்வி என்பது செலவுடன் கூடியதொன்றாகக் கருதப்படுகின்றது. இந்நாடுகள் எதிர்நோக்கும் நிதி, வளப்பற்றாக்குறை என்பன இக்கல்வியின் வெற்றிக்கு சவாலாக அமைந்துள்ளமை கண்கூடு.

இந்தப் பின்னணியில் இலங்கையின் முன்பள்ளிக் கல்வி பற்றிக் கவனம் செலுத்துவது அவசியமாகும். இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் முதலாம் வருடத்தில் பயிலும் பிள்ளைகளில் அதிகமானோர் வருடம் முடிவதற்குள் பாடசாலையை விட்டு விலகிவிடுவது அவதானிக்கப்பட்டது. இதற்குப் பின்னணியாக அமைந்திருப்பன பிள்ளையின் மொழித்திறன்கள், சமூகவிருத்தி, போஷாக்கு என்பனவாகும். கொலம்பியாவில் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி பிள்ளையின் கல்விச் செயற்பாட்டுக்கும் போஷாக்கின்மைக்கும் இடையே நேரிய புள்ளியியல் தொடர்பு அவதானிக்கப்பட்டது. கலாநிதி தி. காரியவசம் நடத்திய ஆய்வுகளிலும் கொலம்பியா போன்ற முடிவுகளே பெறப்பட்டன. இடை விலகிய மாணவரில் பெரும்பாலானோர் எந்தவித முன்பள்ளிக்கும் சென்றவர்களில்லை. 1.5 வீதமானவர்கள் மட்டுமே முன்பள்ளி சென்றவர்களாவர்.

இலங்கையின் முன்பள்ளிக் கல்வி சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் காலத்தால் மிகப் பிந்தியவையாகும். இலங்கையில் மிக நீண்டகாலமாகவே பாடசாலை அமைப்பு வகையில் ஆரம்பப்பிரிவு, கனிஷ்ட இடைநிலை, சிரேஷ்ட இடைநிலை ஆகிய மூன்று பிரிவுகளே காலத்துக்குக் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு வகுப்பு மட்டங்களை எல்லையாகக் கொண்டு இயங்கி வந்தன. முதனிலை (Primary) வகுப்புகள் பொதுவாக முதலாந்தரம் முதல் ஐந்தாம் தரம் வரை இருந்தது. சில காலங்களில் 7ம் வகுப்புவரையும் அடக்கப்பட்டது.

1949ம் ஆண்டு கல்விப் பணிப்பாளர் நிர்வாக அறிக்கைப்படி இவ்வகுப்புக்களில் எண், எழுத்து, வாசிப்பு பாடங்கள் கூடியளவு நூல்சார் தன்மையிலேயே கற்பிக்கப்பட்டன. 1953ம் ஆண்டில் பாலர் பாடசாலைப் பாடத்திட்டம் வெளியிடப்பட்டது. ஆரம்ப பாடசாலையில் முதன் மூன்று ஆண்டுகளின் பாடத்திட்டம் இதனுள் அடங்கியது. இப்பாடத்திட்டம் செயல் நோக்கம் நிறைந்த, 'வேலைக்குகந்த மகிழ்விடங்களாக' அமைய இத்திட்டம் உதவுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும் ஆசிரியர்கள், மாணவர் ஆற்றலைக் கண்டறியும் செயல்முறைகள், பதிவுகள் பேணல் போன்ற அறிவுரைகளையும் வழங்கியது. 1956ம் ஆண்டின் சுற்றறிக்கைகளின்படி விரிவான பாடத்திட்டங்கள் வழங்கப்பட்டன. பாலர் கீழ்ப்பிரிவு (Lower Kindergarten) பாலர் மேற்பிரிவு (Upper Kindergarten) என வகுப்புகள் பிரிக்கப்பட்டன. மாணவர் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இவ்வாறு பாலர்க்கென வகுப்புக்கள் பிரிக்கப்பட்டிருந்த போதிலும் இவை ஆரம்பக் கல்வியின் ஆரம்ப வகுப்புக்களாகவே கணிக்கப்பட்டன. இந்த ஏற்பாடுகளின் மூலம் முன்பள்ளிக் கல்விக்குரிய கோட்பாட்டின் அடிப்படையிலான கல்விச் செயன்முறை இவ்வகுப்புக்களில் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1961ல் பேராசிரியர் ஜே.ஈ. ஜெயசூரியா தலைமையிலான தேசிய கல்வி ஆணைக்குழுவே இலங்கையில் முன்பள்ளிக் கல்வி சம்பந்தமாக கருத்துக்களைத் தெரிவித்த முதலாவது அரச ஆணைக்குழு என கருதப்படலாம். அக்காலப்பகுதியில் இலங்கையில் முன்பள்ளிக் கல்விமுறை கருத்திற் கொள்ளப் படத்தக்க அளவு வியாபித்திருக்கவில்லை. ஆனால் சர்வதேச மொண்டிசூரி இயக்கம் போன்ற தனிப்பட்ட நிறுவனங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரப் பிரதேசங்களில் பாலர் கல்வி நிலையங்கள் நடாத்தப்பட்டன. எந்த நிறுவனங்களும் கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

ஜயசூரிய குழுவின் சிபார்சுப்படி 4 வயதுக்கு மேற்பட்டவர்க்கு முன்பள்ளி நிலையங்கள் வீட்டுச் சூழலில் தாபிக்கப்பட வேண்டும். இங்கு பிள்ளைகளின் உடலியல், உளவியல் விருத்திகளில் விளக்கம் பெற்றுள்ள முதிய ஆசிரியர் ஒருவரின் கண்காணிப்புடன் கல்வி நடைபெற வேண்டும். உள்ளூராட்சித் தாபனங்கள், கல்வித் திணைக்களம் என்பவற்றின் அனுசரணையுடன் இவற்றை நடத்த வேண்டும். ஆசிரியர் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். கல்வித் திணைக்களம் கல்வித் தரம் பேணப்படுவதைக் கண்காணிக்க வேண்டும். இந்த சிபார்சுகள் நாட்டில் முன்பள்ளிக் கல்வியை ஒழுங்கமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகக் கொள்ளப்பட்டபோதிலும் அரசின் கண்காணிப்பு முறையாக நடைபெறவில்லை.

1972ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றி வெளியிடப்பட்ட 'கல்வியின் புதிய பாதை' என்னும் நூலில் முன்பள்ளிக் கல்வி பற்றி தெரிவிக்கப்பட்ட கருத்தும் இங்கு அவதானிக்கத்தக்கது. இக்கல்வி செலவு மிக்கதாக இருப்பதால் இதனை வழங்கும் பொறுப்பு கல்வியமைச்சுக்கு சுமத்தப்படாது விடுவித்துள்ளமை இதிலிருந்து தெளிவானது.

போகொட பிரேமரத்தினாவின் தலைமையிலான கல்விக் குழு (1979) தேசிய கல்வி ஆணைக்குழுவின் சிபார்சுகளை வலியுறுத்தியது. நாட்டிலுள்ள பாலர் பாடசாலைகள் பொதுக் கணிப்பீட்டுக்கு உட்பட வேண்டும் எனவும் அவை பதிவு செய்யப்பட்டு வழிகாட்டலும், உதவியும் வழங்கப்பட வேண்டும் எனவும் இக்குழு குறிப்பிட்டது. ஆனால் யார் இதற்குப் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பது பற்றித் தெளிவு படுத்தவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981ம் ஆண்டின் கல்வி வெள்ளையறிக்கை முன்பள்ளிக் கல்வி பற்றி சில கருத்துக்களை முன்வைத்தன. இக்கருத்துக்கள் பாலர் கல்வியின் முக்கியத்துவத்தைக் குறைத்ததாக கல்வி மான்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியதில் ஆச்சரிய மில்லை. **'பாடசாலைக்கு அனுமதி வயது 5 ஆக இருப்பதனால் பிள்ளையின் ஆரோக்கியமான விருத்திக்கு முன்பள்ளிக் கல்வி அவசியம் எனக் கருதப்படுவதற்கில்லை.'** 5 வயதில் ஆரம்பக் கல்விக்கு அனுமதி பெறும் குழந்தை முன்பள்ளிக் கல்விக்குரிய ஒரு வயதை ஆரம்பப்பள்ளியில் கழிப்பதால் இதற்கென தனியான முன்பள்ளிகள் தேவையற்றவை என குழுவினர் கருதினர் போலும். அதேவேளை நகரப் புறங்களில் இயங்கும் ஒரு சில முன்பள்ளிகளின் சேவையை குழுவினர் பாராட்டினர். மேலும் இத்தகைய முன்பள்ளிக் கல்வி பெறாதவர்க்கு ஆரம்ப பாடசாலை அனுமதி மறுக்கப்படாது எனவும் அதன் பலனை அனுபவிப்பதில் தடை ஏற்படாது எனவும் உத்தரவாதம் அளிக் கப்பட்டது. இவ்வாறு கூறப்பட்ட கருத்துக்களால் அதன் முக்கி யத்துவம் குறைவாக மதிப்பிடப்பட்டது எனக் கொள்ளலாம். இக்கருத்துக்கள் மறைமுகமாக அரசு முன்பள்ளிக் கல்வி பற்றி அக்கறையோ பொறுப்போ எடுக்கத் தேவையில்லை என்ற தலையிடாக் கொள்கையை வெளிப்படுத்துவதாக இருந்தது.

இத்தகைய சூழ்நிலையில் நாட்டில் முன்பள்ளிகள் - பாலர் கல்வி நிலையங்கள், நகரப்புறங்களில் மட்டுமன்றி கிராமப் புறங்களிலும் ஏதோ ஒரு வகையான கல்வியை வழங்கி வந்தன. யுனிசெப், சர்வோதய போன்ற சர்வதேச நிறுவ னங்களின் பெயர்களிலும், உள்ளூர் சமூகசேவை நிறுவனங்க ளின் பெயர்களிலும் நடாத்தப்பட்ட பாலர் பாடசாலைகளைப் பார்க்கிலும் தனியார் தொழில் நோக்கில் நடாத்தும் பாலர் பாடசாலைகளும் பெருகிச் செல்லும் நிலை அவதா னிக்கப்பட்டது.

இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசு அரசிய லமைப்பின் 13வது திருத்தச் சட்டம் 3 வது அனுபந்தத்தின்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல முன்பள்ளிகளினதும் மேற்பார்வையும் முகாமைத்து வமும் மற்றைய அரசாங்கப் பாடசாலைகளைப் போன்றே அரச கல்விக் கொள்கையின் கீழ் வருகின்றன. இதனைக் கல்விய மைச்சு நடைமுறைப்படுத்த வேண்டும். இதன் மூலம் முன்பள்ளிகளின் பெறுமானம் அங்கீகரிக்கப்பட்டு அவை அரசியலமைப்பு திருத்த சட்டத்தில் உள்ளடக்கப்பட்டது. எனி னும் இதுவரை ஒழுங்குபடுத்தப்பட்ட முறை ஏற்படுத்தப்பட வுமில்லை. அரசாங்கம் நேரடியாக பொறுப்பை ஏற்கவு மில்லை.

1990 இன் இளைஞர் அமைதியின்மைக்கான சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை முன்பள்ளிகள் பற்றி ஆக்கபூர்வ மான கருத்துக்களைத் தெரிவித்தது.

**இப்பாடசாலைகள் தொழில் புரியும் தாய்மாருக்கு மிகவும் தேவையான உதவியை வழங்குவதுடன் பாடசாலை வாழ்க் கைக்குத் தயார் செய்யும் பிள்ளைகளுக்குத் தேவையான அளப்பரிய சேவையையும் செய்து வருகின்றன'**

**'மாணவனின் வாழ்க்கையில் அதிகளவு தொடர்ச்சி இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் இப்படியான பாடசா லைகள் அப்பிரதேசத்திலுள்ள ஆரம்பப் பாடசாலைகளுடன் மிக நெருங்கிக் கருமமாற்ற வேண்டியது மிகவும் அவசிய மாகின்றது'**

**'முன்பள்ளிகளின் தரங்களைப் பேணுவதற்காக கல்வி மான்களினால் வழிகாட்டல் துணை பெறப்படுவது உடனடி யாகக் கவனிக்க வேண்டிய தேவையாகும்'**

இத்தகைய ஆக்கபூர்வமான கருத்துக்கள் செயலுருப்பெற முன்னதாகவே 1991ம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை சற்று வேறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கையை பாலர் கல்விபற்றி கருத்துக்களை வெளி யிட்ட அண்மைக்கால அறிக்கையாகக் கொள்ளலாம். பாலர் கல்வி நிலையங்களின் நிலை (பக்கம் 87–88) அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்போக்கான தன்மை, பெற்றாரின் அக்கறையின்மை (பக்கம் 105) என்பனவும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டதோடு இறுதியாக பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன. (பக்கம் 151)

அவையாவன

01. பாலர் பாடசாலைகள் தனியார் நிறுவனங்களாகவே இருத்தல் வேண்டும்.

02. அநேகமான பிள்ளைகள் வீட்டில் முறையாகப் பராமரிக்கப்படுகிறார்கள்.

03. இதனால் எல்லாப் பிள்ளைகளும் பாலர் பாடசாலைக்குச் செல்லுதல் அவசியமாக அமையாது.

04. தற்போதுள்ள பாலர் கல்வி நிலையங்கள் வேலைசெய்யும் தாய்மாருக்கு வேலை நேரம் முழுவதும் உதவ முடியாதுள்ளது.

05. பாலர் பாடசாலைகளில் சேர்க்கப்படும் பிள்ளைகளுக்கு அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுவது வேலைசெய்யும் தாய்மாருக்கு ஒரு மேலதிக சுமையாக இருக்கலாம்.

எனவே அறிக்கையில் பாலர் கல்வி மூலம் குழந்தைகளின் உளவியல், சமூகவியில், மனவெழுச்சி அடிப்படையிலான விருத்திக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதையிட்டும் அழுத்தம் கொடுக்கப்படவில்லை. பல்வேறு சுற்றாடலில் இருந்து நேரடியாக ஆரம்பக் கல்வி பெறச் செல்லும் பிள்ளைகள் அனுபவிக்கும் இடர்பாடுகளையிட்டும், திறன்களில் அவர்களிடையே காணப்படும் வேறுபாடுகளையிட்டும் கருத்துக்கள் கொண்டிருந்த போதிலும் அதற்குச் சாதகமான விதப்புரை வழங்கப்படாமை அரசின் தலையிடாக் கொள்கையை மீண்டும் உறுதிப்படுத்துவதாக உள்ளது.

எனவே அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று நடைமுறையிலுள்ள பாலர் பாடசாலைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, அவற்றின் குறிக்கோள்கள் இனங்காணப்பட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பள்ளி, குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் என்பவற்றுக்கான நியமங்களும், பாடவிதானங்களும் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமாயின் அவற்றின் தரத்தைப் பேணுவதற்கு வாய்ப்பாக அமையும். அரசு பாலர் கல்வி பற்றி திட்டவட்டமான கொள்கையை வகுத்துச் செயல்படுத்துவதன் மூலம் இது சாத்தியமாகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# ஆரம்பக் கல்வி ஆசிரியர் உயர் பண்புகள்

ஆரம்பக் கல்வி முறைசார் கல்வியின் அத்திவாரம் ஆகும். நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான நற்பிரஜைகளை உருவாக்கும் பொறுப்பு வாய்ந்த நற்பணி இங்குதான் ஆரம்பிக்கின்றது. இன்று உலக நாடுகள் அனைத்தும் குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தத்தம் நாட்டிலுள்ள சகல பிள்ளைகளும் குறைந்த பட்சம் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பினை வழங்குவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்றன. அதாவது சகலருக்கும் ஆரம்பக் கல்வி என்பது இன்று சர்வதேச கல்விக் கோட்பாடாக அமைந்துள்ளது. கட்டாயக் கல்விச் சட்டம் அமுலிலுள்ள நாடுகளில் கூட ஆரம்பக் கல்வி நிலையே கட்டாயக் கல்விக்குரிய மட்டமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த பல வருடங்களாக சர்வதேச ரீதியில் நடைபெற்ற கல்வி ஆய்வுகள், கருத்தரங்குகள் என்பவற்றில் ஆரம்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது, முன்னுரிமையும் வழங்கப்பட்டது. யுனிசெப், யுனெஸ்கோ போன்ற சர்வதேச நிறுவனங்களும் பல தனியார் நிறுவனங்களும் ஆரம்பக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியை மேம்படுத்துவதற்காக அதிக அளவில் செயல்பட்டு வருகின்றன. அதிகமான நாடுகளில் ஆரம்பக் கல்வி பற்றிய குறிக்கோளை எய்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஆரம்பக் கல்வியைப் பெறும் மாணவர் எண்ணிக்கையில் பெரும் அதிகரிப்பு காணப்பட்டது. இலங்கையிலும் ஆரம்பக் கல்வி அபிவிருத்தி குறித்து அண்மைக்காலங்களில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1974ல் ஆரம்பக்கல்விப் பாடவிதானத்தில் தொடங்கப்பட்ட மாற்றங்கள், 1981 வெள்ளையறிக்கையைத் தொடர்ந்து மேலும் பல திருத்தங்களைப் பெறலாயின. ஆரம்பக்கல்வியின் அபிவிருத்திக்கென அரசு அதிக அளவு நிதியைச் செலவிட்டு வருகின்றது. எனவே அரசின் குறிக்கோளை எய்துவதில் ஆரம்பக்கல்வி ஆசிரியரது பங்களிப்பின் இன்றியமையாமையும், முக்கியத்துவமும் உணரப்படல் வேண்டும்.

ஒரு குழந்தை பிறந்து, பெற்றாரினதும் உற்றார் உறவினரதும் அரவணைப்பிலும் அன்புத் தொடர்பிலும், சுதந்திரமாக வளர்ந்து சுமார் ஐந்து வருடங்கள் கழித்து தனக்கு முற்றிலும் பழக்கப்படாத, புதிய சூழலைக் கொண்ட பள்ளிக் கூடத்துக்குட் பிரவேசிக்கின்றது. இவ்வாறு பல்வேறு சூழல்களில் வாழ்ந்து பழக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட பிள்ளைகள் சுமுகமான திட்டமிடப்பட்ட ஒரு சூழலிலே ஒன்றிணைகின்றனர். பிற்காலத்தில் பரந்து விரிந்து அமையப்போகின்ற உலகில் வாழுவதற்குத் தயாராக இக்குழந்தைகள் இங்கு சமூகமயப்படுத்தப்படுகின்றனர். இத்தகைய சமூகமயப்படுத்தலின் வழிகாட்டிகள் ஆசிரியர்களாவர். தம்மிடம் ஒப்படைக்கப்படும் பச்சைக் களியைப் பயனுள்ள பாத்திரங்களாகப் படைப்பதும், மண்ணாங்கட்டியாக விட்டு விடுவதும் படைப்பாளியின் ஆற்றலைப் பொறுத்தது. பிள்ளைகளிடத்திலே மறைந்து கிடக்கின்ற உள்ளார்ந்த ஆற்றல்களை இனங்கண்டு அவற்றை வெளிக் கொணரவும், விருத்தி செய்யவும் வேண்டிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பது ஆசிரியரின் தலையாய கடமையாகும். இந்த வகையில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளை எதிர்காலத் தலைவர்களாக மாற்றி அமைக்கும் பொறுப்பு ஆசிரியருடையது.

இத்தகைய பொறுப்புவாய்ந்த ஆசிரியரிடம் சில நற் பண்புகள் அமைந்திருப்பது இன்றியமையாதது. கொலம்பியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எம்.ரீ. டானியல் என்பார் சிறந்த ஆசிரியருக்குரிய பண்புகளைப் பின்வருமாறு பட்டியல் படுத்துகின்றார். அவையாவன பரந்த அறிவு, ஒத்துழைப்பு, தன்னலமற்ற சேவை மனப்பான்மை, தலைமைத்துவம், ஆக்க முயற்சிகளை ஆரம்பிக்கும் திறன், தன்னம்பிக்கை, வசீகரிக்கும் தன்மை, சிநேகித மனப்பான்மை, முகமலர்ச்சி, சமூக இசைவு, வசீகரமான குரல், சுய கட்டுப்பாடு, நிபுணத்துவம், நல்லபி மானம், சரியான முடிவெடுத்தல், மனத்தைரியம், நடு நிலைமை, நலன் விரும்பும் மனப்பான்மை, சுறுசுறுப்பு, நேரத்துக்குத் தொழில் புரிதல் ஆகியனவாகும். இப்பண்புகள் பொதுவாக சகல ஆசிரியருக்கும் இன்றியமையாதனவாகும். இவற்றுள் சில பண்புகள், ஆரம்பக் கல்வி ஆசிரியரிடம் விசேடமாக அமைந்திருக்க வேண்டியவையாகும். அதாவது சில குறிப்பிட்ட அறிவு, திறன், மனப்பாங்கு, நடத்தை என்பன ஆரம்பக் கல்வி ஆசிரியரிடம் இருப்பது அவசியமாகும்.

முதலில் ஆரம்பக்கல்வி ஆசிரியரிடம் பரந்த, தெளிந்த அறிவு இருக்க வேண்டும். பாட அறிவுடன், சுற்றாடல் விளக்கம், உலகப் பொது அறிவையும் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் தொழில் சார்ந்த உளவியல் அறிவையும் பெற்றிருத்தல் வேண்டும். அதாவது மாணவர் நிலை, கற்றலுக்கு அவாகளைத் தூண்டல், அவர்களின் தேவைகள், அவாக்கள் - கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் கையா ளப்படும் நுட்பங்கள், அவர்களின் கல்வி வளர்ச்சியினை மதிப்பிடுதல் போன்ற தொழில் சார்ந்த அறிவினையும் ஆசி ரியர்கள் பெற்றிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் மாணவரைப் புரிந்து கொள்வதற்கும் முறையான வகுப்பறை ஒழுங்கமைப்புக்கும், சிறந்த வகுப்பறை நிர்வாகத்துக்கும், சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கும் வாய்ப்பாக அமையும்.

பாடத்தைத் திட்டமிடலும் தயாரித்தலும் பற்றிய அறிவும் திறனும் ஆசிரியருக்கு அமைந்திருக்க வேண்டியது அவசியமாகும். பொதுவாக ஆசிரியத் தொழிலைப் பற்றி இரு வேறுபட்ட மனப்பாங்குகள் நிலவுகின்றன. மிகக் குறைந்த சம்பளம், ஆசிரியரின் எதிர்கால முன்னேற்றத்துக்கு போதிய வாய்ப்பின்மை என்ற கருத்துக்கள் ஒரு சாராரிடம் நிலவும் அதேவேளை குறைந்த நேர வேலை, விடுமுறை நாட்களும் ஓய்வும் அதிகம் என்ற கருத்துக்கள் மற்றொரு சாராரிடம் நிலவுகின்றன. உண்மையில் குறைந்த சம்பளம் என்றிருந்த போதிலும் கூடிய விடுமுறையும் ஓய்வும் கிடைக்கின்றது என்பதற்காக ஆசிரியத் தொழிலை விரும்புபவர்களும் உள்ளனர். ஆனால் உண்மையான ஆசிரியன் வகுப்பறையில் பாடங்கள் தற்செயல் நிகழ்ச்சியாக நடைபெறுபவை என்பதை ஏற்றுக் கொள்ள மாட்டான். பாடத்தை முன்பதாகவே திட்டமிட்டுத் தயாரித்துக் கொள்ளாத ஆசிரியர் தமது தொழிலைச் செவ்வனே நிறைவேற்றுவார் எனக் கொள்ள முடியாது. பாடப்பரப்பு, மாணவரிடத்தில் எதிர்பார்க்கப்படும் இலக்குகள், ஆசிரியர் மாணவரின் வகுப்பறைச் செயற்பாடுகள், கற்பித்தல் சம்பந்தமாக மாணவரிடத்தில் காணப்பட்ட முன்னேற்றத்தை மதிப்பிடுதல், கற்பித்தலை மேம்படுத்துவதற்காக துணைக் கருவிகளையும் சாதனங்களையும் தயாரித்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் தம் ஓய்வு நேரங்களைப் பயன்படுத்துவதன் மூலமே ஆசிரியர் வெற்றிகரமான கற்பித்தலை மேற்கொள்ள முடியும். சுருக்கமாகக் கூறப்போனால் வழங்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தை குழந்தைகளுக்கு எப்படி எப்போது கற்பித்தல் என்பதை ஆசிரியர் தீர்மானிக்கிறார். இவ்வாறு பாட ஆயத்தம் திட்டமிடப்பட்ட போதிலும் எதிர்பாராதவகையில் எதிர்நோக்கக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளுக்கேற்ப செயல்படுத்தக்கூடிய விதத்திலும் பாடத்தயாரிப்பு நெகிழ்ச்சியுடையதாக இருத்தல் வேண்டும்.

ஆரம்பக் கல்வி ஆசிரியருக்கு இன்றியமையாத மற்றொரு பண்பு கவர்ச்சி அல்லது வசீகரத் தன்மை. குழந்தைகளைத் தன்பால் ஈர்க்கும் வசீகரத்தன்மையானது பிள்ளைகள் வகுப்பறைச் செயற்பாடுகளில் உற்சாகத்துடன் ஈடுபடத் துணை புரியும். நளினமான சுபாவம் கவர்ச்சியான கற்பித்தலுக்கு ஒரு காரணமாக அமையலாம். ஆசிரியரின் அன்பான வார்த்தைகளும், மகிழ்ச்சியூட்டக்கூடிய நடத்தைகளும் பிள்ளைகளைப் பெரிதும் வசீகரிக்கின்றன. உளவியல் ரீதியில் அவை பிள்ளைகளின் கணிப்புத் தேவை, அன்புத் தேவை, காப்புணர்வு போன்றவற்றை நிறைவு செய்வனவாக அமைகின்றன.

கலைத்திறன், படைப்பாற்றல், அழகுணர்வு போன்ற திறன்களும் ஆரம்பக்கல்வி ஆசிரியருக்கு இன்றியமையாதன. சில பயனுள்ள பொழுதுபோக்குகளையும் ஆர்வங்களையும் ஆசிரியர் கொண்டிருப்பதோடு அவற்றை மாணவர்களுக்கு அறிமுகம் செய்துவைப்பவராகவும், கற்பனை வளம், படைப்புத்திறன் என்பவற்றைக் கொண்டவராகவும், விநோதமான நுட்பங்களைத் தெரிந்தவராகவும் விளங்குதல் வேண்டும். வரைதல், பாடுதல், நடித்தல், ஆடுதல், வாத்தியக் கருவிகளை வாசித்தல், விளையாடுதல், விளையாட்டுப் பொருட்களைச் செய்தல் போன்ற கலைத்திறன்களைப் பெற்றுள்ள ஆரம்பக் கல்வி ஆசிரியரால் பிள்ளைகள் அதிக பயன்பெறுவார்கள். படைப்பாற்றல் பெற்றுள்ள ஆசிரியர் சுற்றாடலில் காணப்படும் வளங்களைக் கொண்டு பிள்ளைகளை பல்வேறு கைவினைகளில் ஈடுபடுத்தத்தக்க அளவு திறனைப் பெற்றிருப்பது அவசியமாகும்.

எப்போதும் சுறுசுறுப்பாகவும் இயக்கமுள்ளவராகவும் ஆசிரியர் இருத்தல் வேண்டும். நெடுகிலும் மேசையருகில் வீற்றிருக்கும் ஆசிரியர் மாணவர்களை ஆர்வமூட்டக் கூடியவராக இருக்க மாட்டார். பிள்ளைகள் தனித்தனியாகவோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்களாகவோ பாடப்பணிகளில் ஈடுபட்டிருக்கும்போது ஆசிரியர் தாமும் பிள்ளைகளுடன் சேர்ந்து செயல்பாடுகளில் ஒத்துழைப்பவராக இருத்தல் வேண்டும். மேலும் பிள்ளைகள் கற்பதற்குத் தேவையான கருவிகளையும், வளங்களையும் தேடிக்கொடுப்பதோடு புதிய அணுகுமுறைகளுடன் பிள்ளை களை ஆர்வமூட்டக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

இத்தகைய திறன்களுடன் சில குறிப்பிட்ட மனப்பாங்கு களும் ஆரம்ப ஆசிரியருக்கு அவசியமானவையாகும். முதற்கண் ஆசிரியத் தொழிலில் விருப்பு இருத்தல் வேண்டும். இது சம்பளத்துக்கும் சமூக அந்தஸ்துக்கும் அப்பால் அமைந்த ஒன்றாகும். வாழ்வதற்காகக் கிடைத்த ஏதோ ஒரு தொழில் என்ற நிலையில்தான் ஆசிரியத் தொழிலில் பிரவேசித்த போதிலும் இத்தொழில் பற்றிய நல்ல மனப்பாங்குகளை உருவாக்கிக் கொள்வது அவசியம். நாட்டின் எதிர்காலத் தலை வர்களை உருவாக்கும் உயரிய பணியில் தம்மை அர்ப்ப ணித்துக் கொள்ளும் இலட்சியத்தை ஆசிரியர் தம் மனத்தில் வரித்துக் கொள்ள வேண்டும். தன் இலட்சியத்திலும் பணிக ளிலும் தன்னம்பிக்கை உடையவராகவும் சுதந்திரமாகத் தீர்மானம் எடுக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.

தன்னலமறுப்பு, தியாகம் ஆகிய மனப்பாங்குகளையும் கொண்டிருத்தல் வேண்டும். தன்னலனைவிட தம்மிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ள பிள்ளைகளின் நலன்கள் உயர்வு எனக்கருதி முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். மற்றவர் கருத்துக்க ளுக்கு மதிப்பளித்தல், பொறுமை, சகிப்புத் தன்மை, புரிந்து ணர்வு, கருணை போன்ற பண்புகளும் ஆரம்பக் கல்வி ஆசிரி யருக்கு இன்றியமையாதவை. பல்வேறுபட்ட சமய, குல, இன, நிற நடத்தைக் கோலங்களைக் கொண்ட சூழல்க ளிலிருந்து பள்ளிக்கூடத்துக்கு வரும் பிள்ளைகளிடம் காணப்ப டும் விரும்பத்தகாத நடத்தைகளையிட்டு ஆசிரியர் சகிப்புத் தன்மை, உடையவராக இருத்தல் வேண்டும். தன் சொந்த விருப்பு வெறுப்புக்களை வெளிக்காட்டாது ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளிடத்தில் சகிப்புத்தன்மை நடுநிலைமை என்பவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். அத்துடன் அமைதி, பொறுமை, நிதானம் ஆகிய பண்புகளும் இன்றியமையாதன. உதாரணமாக கணிதத்தில் தசமதானங்களுக்கு மாற்றுதல் தொடர்பாக ஒரு மாணவனுக்கு 24 தடவைகள் விளக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். அப்படி நேரிடும்போது முதலாவது தடவை எவ்வாறு ஆர்வத்துடன் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதோ அதேபோன்று பொறுமையுடன் இருபத்து நான்காவது முயற்சியிலும் ஆசிரியர் விளக்குதல் வேண்டும். இத்தகைய பொறுமை ஆரம்பநிலை ஆசிரியருக்கு மிக இன்றியமையாதது. சடுதியாக ஏற்படும் சிக்கல், ஆபத்து, சங்கடம் ஆகிய நிலைமைகளில் பிரச்சினையை அமைதியாகவும் நிதானமாகவும் அணுகுபவராகவும், சமயோசிதமாகவும் விரைவாகவும் இயங்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பண்புகளுடன் நல்லொழுக்கம் முன்மாதிரியான நடத்தை, மாணவர்களுடனும் பெற்றோருடனும் சுமூகமான தொடர்புகளை வைத்திருத்தல் என்பனவும் இன்றியமையாதன. ஆசிரியரின் எண்ணம், சொல், செயல் என்பன எப்போதும் தூய்மையானதாகவும் ஒழுங்கானதாகவும் அமைந்திருப்பதன் மூலமே முன்மாதிரியான நடத்தை உருவாகும். வகுப்பறையில் ஆசிரியர் மாணவருடன் மகிழ்ச்சியான, ஆர்வமான, சுமூகமான தொடர்பை வைத்திருப்பது எவ்வாறு கற்பித்தல் செயல்பாட்டுக்குத் துணையாக அமைகின்றதோ அதே போன்று பெற்றோருடனும் ஆசிரியர் சுமூகமான தொடர்புகளை வைத்திருத்தல் வேண்டும். பெற்றோர் சில வேளை ஆசிரியரிடமிருந்து பல்வேறுபட்ட ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக் கொள்வதிலும் ஆர்வம் காட்டுவர். அதே போன்று ஆரம்பக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றி கரமாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களையும் ஆசிரியர் பெற்றோரி டமிருந்து பெற்றுக் கொள்ள அதிகமான வாய்ப்புக்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய கூட்டாளுமைப் பண்புகளைக் கொண்ட ஆசிரியராலேயே தமது பணியைச் சிறப்பாக ஆற்ற முடியும். தமது கையில் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளை அவர்களின் தற்காலத் தேவைகளை அர்ப்பணிக்காத வகையில் எதிர்காலச் சமுதாயத்துக்காகச் சிறப்பான மட்டும் தயார் செய்யும் பாரிய பொறுப்பு இன்று ஆசிரியருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனால் நம்முன்னோர் செய்ததைப் பார்க்கிலும் அதிகமான புதிய அணுகுமுறைகளுடன் சாதிக்க வேண்டிய நிலைக்கு ஆசிரியன் தள்ளப்பட்டுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4
# நேர முகாமைத்துவம்

நேரம் பொன்னானதுஎன்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. உண்மையில் பொன்னைவிடவும் பெறுமதியானது. உலகில் ஒரு வினாடி நேரத்தைக் கூட ஒருவராலும் உருவாக்கவோ உழைக்கவோ முடியாது. இழந்த நேரத்தை மீளப் பெற்றுக் கொள்ளவும் முடியாது. இதனாலேயே முகாமையாளர்களும் அலுவலக ஊழியர்களும் உரிய வேளைக்குச் செயற்படுதல் அல்லது நேரந்தவறாமை (Punctuality) பற்றி அதிக அளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

எந்தத் தொழிலையும் போதிய திட்டம் இல்லாமல் வெற்றி கொள்ள முடியாது. திட்டமிடல் என்பதன் பொருள் எண்ணத்தைச் செயலாக மாற்றுதல் என்பதாகும். இன்று காலம்/நேரம் என்பது அபிவிருத்திக்கான ஒரு வளம் என அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அபிவிருத்தித் திட்டங்களில் காலவரையறை (Time Target) என்பது முக்கியத்துவம் பெறுகிறது. உள்ள காலத்தை உச்சமாகப் பயன்படுத்துவது முகாமைத்துவத்துறையில் வினைத்திறன் (Efficiency) சார்ந்த செயற்பாடாகும்.

பாகின்ஸன் என்பவரின் கோட்பாட்டின்படி (Parkinson's Law) ''ஒரு வேலையைச் செய்து முடிப்பதற்கு உனக்கு அதிக நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கத்தக்கதாக இருப்பின் அக்காரியம் முடிய நீண்ட காலம் எடுக்கும். அதாவது கிடைக்கத்தக்க நேரம் முழுவதையும் நிரப்புவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு அக்காரியம் விரிவடையும்'' ஆயின் நவீன முகாமையாளர்கள் இவ்விதியை ஏற்க மாட்டார்கள். கடின உழைப்பை மேற்கொள்பவர்கள் கூட வேலைகளை முடிக்க தமக்கு போதிய நேரம் கிடைக்கவில்லை எனக் கூறுவர். அதேவேளை இவ்வாறு வேலைப்பழுவுடன் கூடிய சிலரும் தத்தம் வேலைகளுடன் மேலதிக நேரம் ஒதுக்கி வேறு சில அவசர வேலைகளைச் செய்து முடிப்பதையும் காண்கிறோம். அவர்கள் நேரத்தைத் திட்டமிடுவதால் இது சாத்தியமாகின்றது.

அறிவு, திறன், அனுபவம், பொருள் போன்றவற்றை விருத்தி செய்து கொள்ளலாம். ஆயின் நேரம் அபிவிருத்தி செய்ய முடியாத ஒரு வளமாகும். மேலும் இது மட்டுப்படுத்தப்பட்டது. ஒரே அளவு நேரத்தைப் பெற்றுள்ள சிலர் ஏனையவரைப் பார்க்கிலும் அதிகம் சாதனை புரிகிறார்கள். இதற்கு பலவற்றைக் காரணமாகக் கூறலாம்.

1. ஒருவரைப் பார்க்கிலும் மற்றவர் அதிக சக்தியைப் பெற்றுள்ளார்கள்.

2. சிலர் அதிக வேலைப்பழுவுடன் கூடியவர்களாக உள்ளனர். இதனால் சாதிக்க முடியாதவர்களாக உள்ளனர். இருப்பினும் அதிகமானோர் தமக்கு கிடைத்துள்ள நேரத்தை அதியுச்ச பயன்பாட்டுக்காக திட்டமிட்டு செயற்படுத்துகிறார்கள். தம்வேலைப்பழுவை கிடைக்கின்ற நேரத்திற்குள் வினைத்திறனுடன் முகாமை செய்கிறார்கள். எனவே, அருந்தலானது எனக் குறைகூறுவதைப் பார்க்கிலும் வேலைகளை நேர ஒதுக்கீட்டுடன் முன்கூட்டியே ஒழுங்கமைக்கும் முயற்சியில் ஈடுபடுவது மிகப் பெறுமதிவாய்ந்ததாகும். இதனால் நேரம் விரிவடைவது போற் தோன்றும்.

தனிப்பட்ட மனிதர்கள் மட்டுமன்றி இன்று பல்வேறு நிறுவனங்களின் செயற்பாடுகளிலும் நேர முகாமைத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்தப்படுகிறது. பிறிட்டோவின் தத்துவத்தின்படி 20 வீத முயற்சி மூலம் 80 வீத விளைவைப் பெற்றுக் கொள்ள முயற்சி எடுக்கப்படல் வேண்டும். நேரப்பயன்பாட்டின் முக்கியத்துவத்தை இந்த விதி விளக்குகின்றது.

அருமையான நேரத்தை விரயமாக்குபவை யாவை? இவ்வினாவுக்குப் பல விடையங்கள் பெறலாம். இன்று பெரும்பாலானவர்களின் நேரத்தை விரயமாக்கும் பிரதான காரணி டெலிவிசன் எனலாம். அலுவலக வேலைச் சூழலில் நேரத்தை விரயமாக்கும் பிரதான காரணி தாபனத்தின் தலைவர் என்றும் கருதப்படுகின்றது.

தாபனத்தின் தலைவர் இவ்விதம் கருதப்படுவதற்குக் காரணம் அவர் திட்டமற்ற முறையில் நடத்தும் கூட்டங்களும் டெலிபோன் அழைப்புக்களுக்கு முகம் கொடுப்பதுமாகும். தவிர அடிக்கடி பயணங்கள் மேற்கொள்ளல், தீர்மானம் மேற்கொள்வதில் காலதாமதம் செய்தல். வேலைகளை ஒழுங்கு படுத்தி கீழுத்தியோகத்தருக்கு பங்கிட்டுக் கொடுக்காது தாமே செய்தல். முற்றிலும் ஆவணங்களிலும் அறிக்கைகளிலும் தங்கியிருத்தல், அளவுக்கதிகமாக கலந்துரையாடுதலும் திட்டமிடப்படாத தொடர்பாடலும், முன்னுரிமைப் பட்டியல் அடிப்படையில் வேலைகளை முடிப்பதற்கு திட்டமில்லாமை, ஊழியர்களின் தேவைகளை அறியாமை, நெருக்கடிகளின் போது தடுமாறுதல் போன்ற பலவற்றைக் கூறலாம்.

அடிக்கடி பயணங்கள் தவிர்க்கப்படல் வேண்டும். தவிர்க்க முடியாத பயணங்களின் போது கூட பயணத்தில் கழியும் நேரங்களை வேறு பணிகளுக்கும் பயன்படுத்தலாம். அறிக்கைகளை வாசித்தல், தாபன அபிவிருத்திக்காக சிந்தித்து ஆக்கபூர்வமான திட்டங்களுக்கு கால்கோளிடல் போன்றவற்றிற்கு இந்த நேரத்தைப் பயன்படுத்தலாம்.

இக்காலத்தில் உத்தியோகத்தர்களும் தொழிலாளர்களும் சாதாரண மக்களும் அதிகமாகப் பயணஞ் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியவர்களாக உள்ளனர். வேலைப்பழக்கமுடைய - வேலைக்கு அடிமையானவர்கள் கூட பயணத்தின்போதே முக்கிய திட்டங்களைத் தீட்டுபவர்களாகவும் குறிப்புக்கள் எடுப்பவர்களாகவும் அறிக்கைகளை மீளாய்வு செய்ப வர்களாகவும் இருக்கின்றார்கள். பகல் வேளையை மிகப் பெறுமதியானதாகக் கருதுதல் வேண்டும். பகலில் ஒரு மணித்தியாலம் படிப்பது இரவில் ஒன்றரை மணித்தியாலம் படிப்பதற்கு சமனாகும்.

காரைச் செலுத்திக் கொண்டிருக்கும் ஒரு பயணி கூட அதனை ஒரு கல்வி நிலையத்தைப் போன்று பயன்படுத்த முடியும் எனக் கருதப்படுகின்றது. கெஸட் றெக்கோடர் ஒன்றைப் பயன்படுத்துவதன் மூலம் தேவையான கல்வி சம்பந்தமான விரிவுரைகளைக் கேட்டுக் கொள்ளலாம். ஒலிப்பதிவு நாடாவில் பதியப்பட்ட வேறு அறிக்கைகளையும் கிரகிக்க முடியும். எனினும் சிக்கலான சிந்தனைத் தொழிற் பாட்டுக்குரிய விடயங்களைத் தவிர்த்துக் கொள்ளவது நல்லது.

அமெரிக்க எழுத்தாளர் ஜெப்றி பி. டேவிட்சன் என்பவரின் குறிப்பின்படி அமெரிக்கர் ஒருவர் தொழிலின் பொருட்டு தனது ஆயுளில் 1,57,589 மைல் தூரம் பிரயாணம் செய்கின்றார். காரைச் செலுத்தும் வேகம் மணிக்கு 40 மைல் எனக் கொண்டாலும் இத்தூரம் 3940 மணித்தியாலம் அல்லது 491 வேலை நாட்களுக்குச் சமனாகும்.

கல்வி முகாமைத்துவம் நேரப்பயன்பாட்டை அதிகம் வலியுறுத்துகிறது. பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் வரு டாந்த அமுலாக்கல் திட்டம், வருடாந்த அபிவிருத்தித் திட்டம் என்பன பாடசாலை மட்டத்தில் குறிப்பிட்ட கால எல்லைக்குள் மட்டுப்படுத்தி வரையப்பட்ட திட்டங்களாகும்.

வகுப்புக்களுக்கான கால அட்டவணை, பாடசாலை வருடாந்த செயற்றிட்டங்களை உள்ளடக்கிய கலண்டர், ஆசி ரியர்கள் பயன்படுத்தும் பாடத்திட்டம், பாடக்குறிப்பு, அதிப ரின் முகாமைத்துவ மேற்பார்வைத் திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியனவெல்லாம் குறிப்பிட்ட காலத்திற்குள் அடைய வேண்டிய இலக்குகளை மையமாகக் கொண்டு வரையப்பட்ட சில திட்டங்களாகும். ஒவ்வொரு துறையிலும் இத்தகைய திட்டங்கள் நிறுவனத்தின் அபிவிருத்திக்கு இன்றியமையா தனவாக அமைந்துள்ளன.

பொதுவாக முகாமையாளர்கள், நிருவாகிகள், பொறுப் புள்ள அதிகாரிகள், ஊழியர்கள், ஆசிரியர்கள் தினக்குறிப்பேடு (டயறி) பயன்படுத்துவது பற்றி வலியுறுத்தப்படுகிஃறது. டயறி எதிர்கால செயற்பாடுகளை முன்னதாகவே திட்டமிட்டு மேற்கொள்ள மிகப்பயனுள்ள ஒரு சாதனமாகும். இதனால் நாளும் பொழுதும் வீணேகழியாது தவிர்த்துக் கொள்ள முடியும்.

சுருங்கக் கூறின் நேரத்தை திட்டமிட்டுக் கொள்வது நாளாந்தம் பெருகிவரும் மனித தேவைகளையும் வேலைப்ப ழுவினையும் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்திற்குள் நிறை வேற்றிக் கொள்ள மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சி எனக்கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# இஸ்லாமிய தத்துவ நோக்கில் ஆசிரிய நெறி

இஸ்லாமியக் கல்வியின் மூலாதாரங்கள் அல்குர்ஆன், அல் ஹதீஸ் என்பனவாகும். அல்குர்ஆன் அறிவுத் துறைகளுக்கெல்லாம் மூலாதாரமாகவும், மனித குலத்தின் இவ்வுலக, மறுவுலக வாழ்க்கையின் வெற்றிக்கான ஆதாரமாகவும் இறைவனால் வழங்கப்பட்ட ஞானமாகவும் விளங்குகின்றது. (அல்குர்ஆன் 17:39) அல்குர்ஆனிலே சுமார் 850 இடங்களில் அறிவு இறைவனுடனும் இறை தூதர்களுடனும், மனித வர்க்கத்துடனும் தொடர்புறுத்திக் கூறப்பட்டுள்ளது. மேலும் இறைவன் ஞானத்தையும், வேதத்தையும் இறை தூதர் (ஸல்) மூலமே மனித வர்க்கத்துக்குக் கற்பிக்கின்றான். (அல்குர்ஆன் 3:164, 2:151) எனவே அல்குர்ஆன் அறிவின் மூல ஊற்றாகவும் இறை தூதர் (ஸல்) அவர்களின் அல் ஹதீஸ் அதன் தெளிவான விளக்கமாகவும் கருதப்படுகின்றன.

இஸ்லாம் மனித வர்க்கத்துக்கு விடுத்த முதலாவது கட்டளையே கல்வி பற்றியதாக அமைந்துள்ளது. இக்ரஃ (ஓதுவீராக) என்ற வார்த்தையின் மூலம் இஸ்லாம் கல்வியை இன்றியமையாத சொத்தாக கருதுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'(நபியே) யாவையும் படைத்த உமது இறைவனின் திருநாமத்தால் (எனது கட்டளைகளங்கிய திருக்குர்ஆனை) நீர் ஓதுவீராக. அவனே மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து படைத்தான். (நபியே பின்னும்) நீர் ஓதும். உமது இறைவன் மாபெரும் கொடையாளி. அவன்தான் எழுதுகோலைக் கொண்டு எழுதக் கற்றுக் கொடுத்தான்; அன்றி (அதன் மூலம்) மனிதன் அறியாதவைகளை யெல்லாம் அவனுக்குக் கற்றுக் கொடுக்கிறான். (அல்குர்ஆன் 96:1-5)**

எனவே, இறைவனே அறிவின் மூலமாகவும் வாசிப்பும் எழுத்தும் இஸ்லாமிய நாகரீகத்தின் பிரதான அம்சங்களாகவும் கருதப்படுகின்றன. மேலும் அல்குர்ஆன், 'கல்வியைப் பெற்ற வர்களும் கல்வியறிவு பெறாத மற்றவர்களும் சமமாக மாட்டார்கள்' என வரையறைசெய்து அறிவு பெற்ற மனிதர்க ளின் மேலாண்மையைத் தெளிவுபடுத்துகின்றது. *(39:3)* மேலும் கல்வியைப் பெற்றுக் கொள்வதை இஸ்லாம் ஒவ்வொரு மனிதர் மீதும் கட்டாயப்படுத்துகின்றது. அன்னையின் கருவ றையிலிருந்து மண்ணறைவரை ஒவ்வொருவரும் கல்வியைப் பெற்றுக் கொள்ளுமாறு இஸ்லாம் போதிக்கின்றது. இவற்றின் மூலம் சகலருக்கும் கல்வி (Universal Education) வாணாள் முழுவதும் கல்வி (Life Long Education) கட்டாயக் கல்வி (Compulsory Education) ஆகிய உயர் தத்துவங்களுக்கு இஸ்லாம் வித்திட்டுள்ளது. சுருங்கக் கூறின் மக்கள் மயப்படுத்தப்பட்ட கல்வியை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

அறிவைப் பெறுவதில் வயது வேறுபாடோ, பால் வேறு பாடோ, நிற வேறுபாடோ, வர்க்க வேறுபாடோ, இன வேறு பாடோ தடையாக இருக்கக்கூடாது என்ற நவீன கல்விக் கோட்பாடுகளுக்கும், சமூக நீதிக்கும் ஏற்றதாக இஸ்லாமியக் கல்வி நெறி அமைந்துள்ளது.

இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் கற்றல் (Learning) கற்பித்தல் (Teaching) செயற்பாடு இறைபணியின்பாற்பட்ட தாகும். கல்வியைப் பெற்றவர் அதனைப் பிறருக்கு ஊட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதும் கல்வியை வேண்டி நிற்பவர் கற்றோரை அணுகிக் கற்றுக் கொள்வதும் இன்றியமையாத செயற்பாடுகளாகக் கொள்ளப்ப டுகின்றன. இதுவே மனித அறிவு என்ற செல்வம் காலங்கா லமாக வளர்ந்து வருவதற்கும், பாதுகாக்கப்படுவதற்குமான உத்தரவாதமாக உள்ளது. ஒருவர் தான் பெற்ற அறிவைப் பிறருக்குக் கற்பிப்பது மனித நல நோக்கில் கடமை எனக் கொள்ளலாம். 'என்னைக் குறித்து ஒரு வசனம் தெரிந்தி ருந்தாலும் அதனைப் பிறருக்குக் கற்பியுங்கள்' என்று இறை தூதர் (ஸல்) கூறினார்கள்.

எனவே, கல்வியைப் பெற்றவர்கள் - அறிஞர் - ஆசிரியப் பணிபுரிவதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இந்தியக் கல்வி நெறியாளர் இரவீந்திரநாத் தாகூர், கூறியவாறு 'தன் சுடர் கொண்டு பிறசுடர் பிரகாசிக்கச் செய்வதே' கற்றோருக்குரிய பண்பாகும். இவ்வாறான ஓர் அறிவியல் சமுதாயமே தன் நிலையை முன்னேற்ற முடியும். தான் பெற்ற கல்வியைப் பிறருக்க வழங்காது மறுப்பதும் மறைப்பதும் பாரிய குற்ற மெனக் கொள்ள முடியும். எனவே இத்தகைய பிறர் சுடரைப் பிரகாசிக்கச் செய்கின்ற கற்றோர்க்கு சமுதாயத்தில் உயர்ந்த இடம் கொடுக்கப்படுவதை இஸ்லாம் வலியுறுத்து கின்றது. கற்றவர்க்கே சமுதாயத் தலைமைத்துவம் வழங்கப்பட வேண் டும் என்ற கருத்தையும் அல்குர்ஆன் (2:247) தருகின்றது. கிரேக்கத் தத்துவஞானி பிளேட்டோ, தமது இலட்சியக் குடி யரசில் கல்விமான்களே நாட்டின் தலைமைப் பொறுப்பை வகிக்க வேண்டும் எனக் கொண்ட கருத்து இங்கு ஒப்புநோக்கத் தக்கதாகும். மக்களாட்சி நடைபெறுகின்ற நாடுகளில் இக் கருத்து நடைமுறை விளக்கம் பெற்றுள்ளதையும் காணலாம். இந்த மரபில் முஸ்லிம் சமுதாயத்தில் 'உலமாக்கள்' எனப் பட்ட அறிஞர்கள் எப்போதும் உயர்வாகவே மதிக்கப்பட்டு வந்துள்ளனர்.

கற்றோர் அனைவரும் ஆசிரியர்க்குரிய பணியினை புரிதல் வேண்டும் என அறிவுறுத்தும் இஸ்லாம், ஆசிரியர்க்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்க நெறிகளையும் தெளிவாகத் வரையறுத்துத் தருகின்றது. இஸ்லாமியக் கல்வி நெறியின்படி கற்பிக்கும் ஆசிரியர் அறநெறித் தூய்மையுடையோராக விளங்குவதோடு கற்பிக்கும் விடயங்களை தாமும் எடுத்து நடப்பவராக விளங்குவதும் அவசியமாகும். ஆசிரியர்கள் தன்னல மறுப்பை அணிகலனாகக் கொள்வதோடு மாணவர்க்கு முன்மாதிரியாகவும் விளங்க வேண்டும். இஸ்லாமிய நெறியின்படி முன்மாதிரியான ஆசிரியர், இறை தூதர் முஹம்மது (ஸல்) ஆவார்.

ஆசிரியர்கள் அனைவரும் இறைதூதரின் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டுமென இஸ்லாம் கூறுகின்றது. ஆசிரியர் கல்வி அறிவுடையோராக மட்டுமன்றி அறவொழுக்கம், தெய்வ பக்தி ஆகியவற்றையும் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. தத்துவக் கலாமேதை டாக்டர் எஸ். இராதா கிருஷ்ணன் ஆசிரியர் ஒழுக்கம் பற்றிக் கூறுகையில், ஆசிரியர் அறிவு புகட்டுவதோடு மட்டுமன்றி தாம் எடுத்துக் காட்டின் மூலம் வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும் என்றார். இமாம் கஸ்ஸாலி (ரஹ்) கூறுகையில் 'ஆசிரியர் தான் கற்பிப்பதைத் தமது வாழ்க்கையில் எடுத்து நடப்பவராக இருக்க வேண்டும். செயல் அவரது சொல்லுக்கு முரணாக அமையக் கூடாது ' என்றார். இவ்வாறு சொல்லும் செயலும் ஒன்றாக இருப்பதனாலேயே கற்பித்தல், மாணவரின் நடத்தைக் கோலங்களில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களுக்குக் காரணமாக அமைகிறது. கல்வியின் ஒரு நோக்கம் மாணவனின் ஒழுக்கப் பண்பை விருத்தி செய்வதாகையால் ஆசிரியரின் ஒழுக்கப் பண்பு முக்கியமாக வலியுறுத்தப்பட்டது.

அறிவு (இல்ம்) செயலுடன் (அமல்) இணைந்துள்ளது. அறிவு அறிவுக்காக மட்டுமன்று; அது செயல்படுவதற்குமாகும். செயன்முறைச் சாத்தியமற்ற காரியங்களைப் பிறர் செய்யுமாறு கற்பிப்பதை அல்குர்ஆன் கண்டிக்கின்றது. 'விசுவாசிகளே நீங்கள் செய்யாத காரியங்களை (பிறர் செய்யுமாறு) ஏன் கூறுகின்றீர்கள். (61:2) என இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறான். ஓர் ஆசிரியன் தன்னால் ஆற்ற முடியாத கருமத்தை மாணவர்கள் ஆற்ற வேண்டுமென்று போதித்தல் கூடாது என்ற கூற்று, மகாத்மா காந்தி 1897ல் தென்னாபிரிக்காவில் நிறுவிய, 'டால்ஸ்டாய் பண்ணை' யின் மேற் கோள் வாசகமாக இருந்தது. இக்கருத்து அல்குர்ஆனின் கருத்தை தெளிவு படுத்துவதாக உள்ளது. நடைமுறைச் சாத்தியமான விடயங்களே கல்விப் பொருளாக அமைய வேண்டும். தாம் செயற்படுத்திய பின்னரே பிறருக்குப் போதிக்க வேண்டும். கல்வியைப் பெற்ற ஒருவர் அதனைத் தம் வாழ்க்கையில் பிரயோகிக்கத் தெரியாதவராக இருப்பது புத்தகங்களைச் சுமக்கும் கழுதைக்கு ஒப்பாகும் எனத் திருமறை கூறுகின்றது. (62:5)

ஆசிரியர்கள் 'தக்வா' (இறையச்சம்) உடையவர்களாக இருக்க வேண்டும். 'தக்வா' உடையவர்களுக்கே இறைவன் தனது ஞான இரகசியங்களை வெளிப்படுத்துகிறான். (2:2) என்ற இறைவசனம் அறிவுக்கும் தக்வாவுக்கும் இடையேயுள்ள தொடர்பினை விளக்குவதாகும். ஒரு மனிதன் தன் அறிவாற்றலினால் அல்லது கல்வியினால் மேலும் மேலும் இறையச்சத்தைப் பெறாதவனாயின் அவன் உண்மையில் அறிவுத்திறனோ கல்வித் திறனோ உடையவன் எனக் கருதப்படமாட்டான் என இறைதூதர் (ஸல்) வலியுறுத்தினார்கள். எனவே ஆசிரியர்கள் இறையச்சம் உடையவர்களாக விளங்குவது இன்றியமையாததாகும்.

ஆசிரிய நெறியின் அடிப்படையான பண்பு, ஆசிரியர்கள் மாணவர்கள் மீது அன்பு, இரக்கம், அவர் உயர்வில் அக்கறை ஆகிய நற்குணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இமாம் கஸ்ஸாலி (ரஹ்) கூறுவதுபோல ஆசிரியர் மாணவர்களை தம் சொந்தப் பிள்ளைகள் போன்று கருத வேண்டும். இக்கருத்து புரோபல், பெஸ்டலோஸ்ஸி, மொண்டிசூரி அம்மையார் ஆகிய உளவியலாளர்களாலும் எடுத்துக் கூறப்பட்டன. எமது முன்மாதிரி ஆசிரியரான இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறுகையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பெற்றார், தன் பிள்ளைகளை உலக நெருப்பிலிருந்து பாதுகாப்பதற்காக எத்தகைய பொறுப்பைக் கொண்டிருக்கி றாரோ அதைவிட முக்கியமாக தன் பிள்ளையை நரக நெருப்பிலிருந்து பாதுகாக்க விரும்பும் ஒரு தகப்பனைப் போல நான் உங்களுக்கு இருக்கின்றேன்'' என நவின்றார்கள் (அபூதாவூத்).

இந்த வகையில் ஓர் ஆசிரியரின் உரிமைகள் பெற்றாரின் உரிமைகளைப் பார்க்கிலும் உயர்ந்தது. பெற்றார் பிள்ளையின் இவ்வுலக வாழ்க்கைக்கு பொறுப்பாக இருக்கின்றனர். ஆனால் ஆசிரியர் பிள்ளையின் நிரந்தர மறுமை வாழ்க்கைக்கு பொறுப்பாக உள்ளார். எனவே ஆசிரியர் தன்னல மறுப்பு, தியாக சிந்தை ஆகிய அணிகலன்களைப் பூண்டிருக்க வேண்டும்.

எவ்வகைக் கல்வியைப் போதிக்கும் ஆசிரியராயினும் அவருடைய கற்பித்தல் இலக்கு இவ்வுலக வெற்றியையன்றி மறுவுலக வெற்றியையே முதன்மைப் படுத்துவதாக இருக்கும். எனவே கல்வியின் நோக்கம் அல்லாஹ்வை நெருங்குவதைத் தவிர தனியே புகழ், தலைமை வாழ்க்கை வசதிகள் போன்ற லோகாயுத நோக்கம் அல்ல என்று கொள்ளப்பட்டது. ஒருமுறை சுப்யானீ தவ்ரீ (றஹ்) என்ற அறிஞர் 'இந்த உலக நோக்குடைய பிள்ளைகளுக்கு நாங்கள் ஒரு வியாபாரமாக அமைந்து விட்டோம். ஏனெனில் அவர்கள் தாம் குறிப்பிட்ட அளவு அறிவைப் பெற்றுக் கொள்ளும்வரை தான் நம்மை அண்டிக் கொள்கிறார்கள். அதன் பின்னர் ஒரு நீதிபதியாகவோ அல்லது ஆளுநராகவோ, நகர முதல்வராகவோ நியமனம் பெற்றுக் கொள்கின்றனர்' என்று லோகாயத நோக்கில் கல்வி பெறுபவர்கள் பற்றி ஆழ்ந்த கவலையுடன் கூறினார்.

கல்வி புகட்டும் சேவைக்காக ஆசிரியர் எதுவித வெகுமதி களையோ, நன்றிகளையோ ஏற்பவராகவோ கூலியை வேண்டி நிற்பவராகவோ இருக்கக் கூடாது என இமாம் கஸ்ஸாலி கூறுகிறார்கள். ஆசிரியரது சேவை இறைவனுக்காகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைகிறது. இறைவனின் நெருக்கத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இலவசமாகவே தொண்டாற்ற வேண்டும். மேலும் தன் மாணவர் தமக்குக் கடமைப்பட்டவர்கள் என்று கூடக் கருதக் கூடாது. இறைவன் தன் திருமறையில்,

'என்னுடைய மக்களே, இதற்காக நான் உங்களிடம் யாதொரு பொருளையும் (கூலியாக) கேட்கவில்லை. என்னுடைய கூலி அல்லாஹ்விடமேயன்றி (உங்களிடம்) இல்லை' *(11:29)* எனக் கூறுகின்றான்.

மாணவர்க்குப் பல்வேறு கலைகளையும் கற்பித்தல் என்னும் தொழிற்பாட்டோடு மட்டும் நின்று விடாது ஓர் ஆசிரியர் மாணவரின் நடத்தை தொடர்பாக ஆலோசனை வழங்குபவராகவும், சீர்திருத்தம் வேண்டி நிற்பவராகவும் அமைய வேண்டும். இது ஆசிரியருக்கு இருக்க வேண்டிய முக்கியமான பண்புக் கூறாகும். மாணவப் பருவம் நல்லவை கெட்டவை உணராத பருவமாதலால் இவ்விடயத்தில் ஆசிரியர் அக்கறை செலுத்துவது அவசியமாகும். பிள்ளைகளிடம் காணப்படும் விரும்பத்தகாத நடத்தைகளையும் பண்புகளையும் நுணுக்கமாக ஆலோசனைகள் மூலம் அன்பாகச் சுட்டிக்காட்ட வேண்டுமென இமாம் கஸ்ஸாலி (ரஹ்) கூறுகிறார்கள்.

வெளிப்படையாகச் சுட்டிக் காட்டுவதன் மூலம் ஆசிரியர் மீது மாணவர் கொண்டுள்ள கௌரவம் என்னும் திரை கிழிந்து விடாத முறையிலும், அதே தவறை மாணவர் தொடர்ந்து செய்வதற்கு தூண்டப்படாத வகையிலும் நுணுக்கமாக ஆசிரியர் இயங்க வேண்டும்.

இது தவிர மாணவரை கல்வித் துறையில் அல்லது தொழிற்றுறையில் நெறிப்படுத்துவதும் ஆசிரியர் பணியாகும். இது பற்றி இப்னு சீனா, அல்ஸர்னூஜி ஆகியோர் வழங்கிய கருத்துப்படி மாணவரை நெறிப்படுத்தும்போது மாணவரின் மனோபக்குவம், இயற்கையாற்றல், பாரம்பரியம், பின்னணி என்பன கருத்திற் கொள்ளப்பட வேண்டும். அஃதன்றி மாணவரின் சொந்த விருப்புக்கு கண்மூடித்தனமாக அனுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யளிக்கக்கூடாது. இமாம் புகாரி (ரஹ்) மாணவராக இருந்த போது, ஆசிரியர் முகம்மது பின் அல் ஹசன் மாணவரின் திறமைக்கேற்ப அவரை ஹதீஸ் கலையில் நெறிப்படுத்தினார்.

ஆசிரிய நெறியில் கற்றல் கற்பித்தல் தொடர்பான உளவியல் சார் பண்புக் கூறுகளும் அடங்குகின்றன. மாணவரின் இயற்கை ஆற்றலுக்கும் கற்பிக்கும் பாடப் பொருளுக்கும் இடையே உள்ள தொடர்பு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக மாணவர் நிலை - பக்குவம் - முதிர்ச்சி பற்றிய அறிவை ஆசிரியர் பெற்றிருத்தல் வேண்டும். மாணவரின் சிந்தனை ஆற்றலுக்கும், அனுபவத்துக்கும் அப்பாற்பட்ட விடயங்களைக் கற்பிப்பது பாடத்தில் வெறுப்பை அல்லது மயக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமையும். இறைதூதர் (ஸல்),

> 'நாங்கள் நபிமார்கள்: மனிதர்களுக்கு அவரவர் அந்தஸ்தைக் கொடுக்க வேண்டும் என்றும் அவர்களின் சிந்தனை ஆற்றல் - விளங்கும் தன்மை என்பவற்றுக்கு ஏற்பவே அவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளோம். (அல்ஹதீஸ் - அபூதாவூத்)

எனக் கூறினார்கள். எனவே மாணவர் சிந்தனை ஆற்றலுக்கு ஏற்ற அளவிலேயே கற்பிக்கப்படும் விடயமும் மட்டுப்படுத்தப்படுகின்றது. மேலும் மாணவர் தாம் குறிப்பிட்ட விடயத்தைக் கற்பதற்கு ஏற்ற பக்குவத்தை அடைவதற்கு முன்பதாக அதனைக் கற்க விடாது மாணவரைத் தடுப்பதும் ஆசிரியர் கடமையாகும். ஒரு விடயம் தொடர்பாக விளங்கிக் கொண்ட பின்னரே அடுத்த நுட்பமான விடயங்களைக் கற்க வேண்டும். நவீன கல்வியி யில் றூஸோ, பியாஜே போன்றவர்கள் இத்துறையில் கவனம் செலுத்தியுள்ளமை இங்கு நோக்கத்தக்கதாகும்.

'நபியே நீர் (மனிதர்களை) நளினமாகவும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டும் உம் இறைவனின் வழியின்பால் அழைப்பீராக... (16:125) என்ற இறைவசனம் கற்பிக்கும் முறையை இரத்தினச் சுருக்கமாகக் குறிக்கின்றது. கற்பிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களைக் கவர்ச்சியான முறையில் எடுத்துச் சொல்வது அவசியமாகும். மேலும் இறைதூதர் (ஸல்) அவர்கள் 'கேட்போர் ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருக்கும் வரை தான் கற்பித்தல் நிகழ வேண்டும்' என வரையறுத்துள்ளார்கள்.

மாணவர்களின் அவதானம் எந்த அளவு கற்பித்தலில் குவிந்திருக்குமோ அந்தளவு கற்பித்தல் வெற்றிகரமாக அமையும். மாணவர் உள்ளம் அலுப்படையும்போது அவர்களின் சிந்தனை ஒருமைப்பாடும் கலைந்து விடுகிறது.

இறைதூதர் (ஸல்) ஒரு முறை சிறந்த ஆசிரியரின் பண்பைக் கூறுகையில், 'சிறந்த ஆசிரியர் கடினமான விடயங்களைத் தொடுவதற்கு முன்னால் இலகுவான விடயங்களைக் கற்பிப்பவராவார்' எனக் குறிப்பிட்டார்கள்.

இலகுவானதிலிருந்து கடினமானதற்குச் செல்வதும், தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்வதும் நவீன கல்வி யியலில் நன்கு அறியப்பட்ட கற்பித்தல் நுட்பமாகும். மேலும் இறைதூதர் (ஸல்) முக்கியமான விடயங்களை எடுத்துக் கூறும் போது மக்கள் அதனை நன்கு கிரகித்துக் கொள்ளும் வகையில் மூன்று தடவைகள் மீட்டுக் கூறுவார்கள். இந்த மரபு இன்னும் கற்பித்தல் தொழிற்பாட்டில் பின்பற்றப்படுகின்றதைக் காண லாம்.

இத்தகைய சிறந்த பண்புகளைக் கொண்ட ஆசிரியர்கள், இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே சமூக அந்தஸ்தைப் பெற்று வந்துள்ளனர். அதேவேளை அவர்களின் பொருளாதார நிலை கருத்திற் கொள்ளப்படவில்லை. ஆசிரியர்கள் தமக்குச் சம்பளம் ஒதுக்கப்பட்டும் அதனைப் பெறாது வந்துள்ளனர். இதற்கு மாறாக ஆசிரியர்கள் தம்முடைய அறிவைப் பெருக்கிக் கொள்வதற்காக அதிக அளவு பணத்தைச் செலவிட்டுள்ளனர். நைஷாப்பூரைச் சேர்ந்த அபூபக்கர் அல்ஜாவ்சாகி தாம் ஹதீஸ் கலையைக் கற்றுக் கொள்ள ஓர் இலட்சம் திர்ஹம் செல விட்டுள்ள போதிலும் அதன்மூலம் ஒரு திர்ஹம் கூட வருமானம் பெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக அறிவைத் தேடுவதற்கான பயணங்களை மேற்கொள்வது இஸ்லாம் கூறும் ஆசிரிய நெறியில் ஓர் அம்சமாகும். 'சீனா சென்றேனும் ஞானம் பெறுக' என்ற நபிமொழிக்கிணங்க இஸ்லாமியப் பெரியார்கள் பல அற்புத மான அறிவுப் பயணங்களை மேற்கொண்ட வரலாறுகள் அதிகம் காணப்படுகின்றன. இமாம் புகாரி அவர்கள் அறிவைத் தேடும் அவாவினால் துருக்கியிலிருந்து, ஈராக், அராபியா, எகிப்து, சிரியா ஆகிய நாடுகளுக்கு 16 வருட நீண்ட பயணத்தை மேற்கொண்டார். உலகெங்கும் சுற்றித் திரிந்து இறைவனது படைப்பினங்களையும் அவற்றிலிருந்து படிப்பினைகளையும் பெறுமாறு அல்குர்ஆன் மனித வர்க்கத்துக்கு விடுத்த வேண்டுகோள் *(3:137, 29:20)* ஆசிரியர்களின் - கற்றோரின் அறிவுப் பயணங்களுக்கு வித்திட்டன. நவீன கல்வி இயலிலும் கல்விச் சுற்றுலாக்கள் கல்வியின் ஒரு செயற்பாடாக உள்ளமை நோக்கத்தக்கதாகும்.

**உசாத்துணை**


01. R.B. Serjeant (ed) The Islamic City, UNESCO, Paris, 1980

02. மிஸ்காத்துல் மஸாபீஹ் (அரபு மூலம்) பம்பாய், 1862

03. Muhamed Hamidullah - 'SAHIFA HAMMAM IBN MUNABBIH' Hyderabad 10th ed 1979

04. இஹ்யாஉ உலூமுத்தீன் (அரபு மூலம்) முதலாம் பாகம்

05. Dr. A.S.Tritton 'ARAB THEORIES ON EDUCATION' The Crescent, Zahira College Colombo, 1946

06. எம்.ஆர்.எம். அப்துர் ரஹீம், அல்ஹதீஸ்

07. Dr Muhammed Muhshin Khan, SAHIH AL BUHARI, Vol:1 Pakistan 1973

08. Ahamed Shallaby, History of Muslim Education, Beiruth - 1954

09. S. Khuda Buksh - The Educational System of the Muslims in the Middle Ages - Islamic Culture - Hyderabad, July-1927




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# பகற் கனவு
# - ஓர் உளவியல் சீராக்கம்

மனிதர்கள் கனவு காண்பது இயற்கை. இரவு உறக்கத்தின் போது கனவு காண்பது போல் பகல் உறக்கத்தின்போதும் கனவு காண்பர். பகற்கனவு என்னும் தொடர் நேர் பொருளில் பகல் உறக்கத்தின் போது காணப்படும் கனவைக் குறிக்கின்ற போதிலும் மரபு ரீதியாக வேறொரு பொருளையே குறிப்பால் உணர்த்துகின்றது. இரவு நேரமாயினும் பகல் நேரமாயினும் சரி, உறக்க நிலையில் தோன்றுவது கனவு, விழிப்பு நிலையில் தோன்றுவது பகற் கனவு. அதாவது கற்பனைத் திட்டங்களையும், மனக் கோட்டைகளையும் பகற் கனவு எனக் குறிப்பிடுவர். இத்தொடர் உளவியலிலும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

வாழ்க்கையில் சில இலட்சியங்களைக் கைக்கொண்டவர்கள் அல்லது ஒன்றை அடையவேண்டும் என்ற அதித ஆசை கொண்டவர்கள் அவை நிறைவேறாதபோது மனவிரக்தி அடைகின்றனர். இவ்வாறு மனமுறிவடைகின்றவர்கள் இத்தாக்கத்தினின்றும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சில சீராக்க முறைகளைக் கைக்கொள்கின்றனர். சிலர் தமது தோல்விக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் காரணமில்லை எனக்கொண்டு வேறு நியாயம் கூறித் தம்மைத் தேற்றிக் கொள்வர். இது மனிதரிடம் இயல்பாகவே அமைந்திருக்கும் சீராக்க முறையாகும். ஒருவர் மனமுறிவுக்குள்ளாகி தீய நடத்தையில் ஈடுபடுவதைவிடவும், பிறருக்குத் தீங்குசெய்து சாதிப்பதை விடவும், பின்னடைந்து வாழ்க்கையையே வெறுத்து தற்கொலை செய்து கொள்வதை விடவும் இது ஆபத்தில்லை எனக் கொள்ளலாம். இது போன்றதொரு சீராக்க முறையே பகற் கனவு காணலாகும். அதாவது நிஜ வாழ்க்கையில் நிறைவுபெறாத தமது திட்டங்களையும், தேவைகளையும் மனக்கோட்டை கட்டிப் பூர்த்தி செய்கின்றனர். அதாவது தாம் சாதனை புரிவதாகவோ வெற்றி பெறுவதாகவோ சமூக மதிப்புப் பெறுவதாகவோ கற்பனை பண்ணி இன்பம் அடைகின்றார்கள். உளப்பிணி மருத்துவ நிபுணரான சிக்மன்ட் பிராய்ட் கருதுவதுபோல ஒடுக்கப்பட்ட இச்சைகளும் பகற் கனவுகளுக்கு அடிப்படையகின்றன. வகுப்பறைகளில் கூட மாணவர்கள் கற்றற்பணிகளில் ஈடுபடாது பகற்கனவுகளில் தம் சிந்தனையைச் செலுத்த விட்டுக் கொண்டிருப்பர்.

பகற்கனவு என்பது நனவு நிலை (Consciousness) மாறுவதால் ஏற்படுவது. பூரணை நிலவு அடிவானத்திலிருந்து வெளிக்கிளம்புதல், ஒரு கோடி ரூபா பணம் பரிசாகக் கிடைத்தல், இத்தகைய விடயங்களைக் கற்பனை பண்ணும்போது எமது மனக்கண்களில் சில படங்கள் உருவாகின்றன. இவைதான் பகற்கனவுக்குரிய விடயங்களாகும். எங்கள் மனமானது வெளித் தூண்டல்களுக்கு (Stimulus) ஏற்ப துலங்குவதை விடுத்து, சில உள்ளகத் தூண்டிகளுக்குத் துலங்குவதற்கான (Response) கவன மாற்றத்தையே பகற்கனவு குறிக்கின்றது. அதாவது மனம் - கவனம் உடனடியான பணிகளில் இருந்து விடுபட்டு கற்பனைப் பணிகளுக்குத் திரும்புகிறது.

அமெரிக்காவில் 18-50 வயதுக்கிடைப்பட்ட கல்லூரி மாணவர்கள் 240 பேரில் செய்யப்பட்ட ஓர் ஆய்வில், 96



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதவீதமானோர் தினமும் பகற்கனவு காண்பது அறியப்பட்டது. இவர்களில் 18-29 வயதுக்கிடைப்பட்டவர்கள் அதிகமாகப் பகற்கனவு காண்கின்றனர். கலாநிதி ஜெறோம் சிங்கர் என்பவ ரின் கருத்துப்படி, பகற்கனவு காண்பது மனிதர்கள் தனித்தி ருக்கும்போதும் ஓய்வு (Relax ) எடுக்கும் போதும் சாதாரணமாக ஏற்படும் செயற்பாடாகும். அண்மைக் காலம்வரை பகற்கனவு என்பது பொதுவாக நேரத்தை வீணாக்குவது என்றோ அல்லது நரம்புத் தளர்ச்சியின் அறிகுறி என்றோ கருதப்பட்டது. அனேக உள மருத்துவவியலாளரும் (Psychiatrists) உளவியலாளரும் பகற்கனவு காணும் வழக்கத்தினை பிழை முறைச் சீராக்கம் (Mal-adjustment) என்றோ வாழ்க்கையின் யதார்த்த நிலையிலி ருந்தும் - பொறுப்புவாய்ந்த நிலையிலிருந்தும் தப்பித்துக் கொள்ளும் ஒரு சாதனம் என்றோதான் இனங் கண்டனர். மேலும் பகற் கனவு படிப்படியாக மக்களை சமுதாயத்தி லிருந்து அன்னியப்படுத்தி உண்மைப் பிரச்சினைகளுடன் ஊடாடி அணுகும் அவர்களின் ஆக்கபூர்வமான ஆற்றலைக் குறைத்து விடுகின்றது என்றும் கருத்துக் கொண்டனர். மேலும் பகற்கனவு, வாழ்க்கையின் யதார்த்த நிலைக்கு ஈடுசெய்யக் கூடிய ஒரு பிரதியீடு என்றும் கருதப்பட்டது.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதற்கொப்ப பகற்கனவு, தீவிரமாகி உண்மை உலக விவகாரங்களிலிருந்து ஒருவரைத் துண்டித்து விடும் அளவு முற்றிவிடுவது தீங்கி ழைக்கக் கூடியதாகும். உண்மையான செயற்பாடுகளின் வெற்றிக்குப் பதிலாக, மகிழ்ச்சியான வாழ்க்கையை விரும்பு பவர்கள் பகற்கனவு காண்கிறார்கள். மகிழ்ச்சியான வாழ்க் கைக்கு தம்மை ஆட்படுத்திக் கொண்டவர்கள் சமுதாயத்திலி ருந்து தம்மை விடுவித்துக் கொள்வதோடு உண்மை நிலை யுடன் ஒன்றுபடவும் மாட்டார்கள். இதனால் இவர்களின் உளநலம் கெட்டுவிடுகின்றது. ஆனால் அத்தகைய தீவிர நிலை மிக அரிதாகவே காணப்படுகின்றது. எவ்வாறாகினும் அனேக மான மக்கள் அதிக அளவு பகற்கனவு காண்பதைப் பார்க்கிலும் குறைந்த அளவு பகற்கனவு காண்பதனால் அதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்துகிறார்கள் என்பதற்குரிய சான்றுகள் கிடைத்துள்ளன. இதன்மூலம் பகற்கனவு காண்பது எவ்வளவு பெறுமதியானது என்பது உணரப்படுகின்றது. தனிநபர்கள் பகற்கனவுகளி லிருந்து தம்மைப் பூரணமாகத் தற்காத்துக் கொள்ளும்போது அவர்களின் உணர்ச்சிச் சமநிலை நிச்சயமற்றதாகின்றது. மேலும் நாளாந்த வேலை அமுக்கத்துடன் (Pressures) மிகக் குறைந்த அளவாகவே அவர்கள் ஈடுபட முடிவதுமல்லாமல் அவர்களிடம் இயல்பாகவே உள்ள சுய கட்டுப்பாடு (Self Control) தன் ஆதிக்கம் (Self -Direction) என்பனவும் ஆபத்துக்குள் ளாக்கப்படுகின்றன.

பகற்கனவு தொடர்பான மனப்பாங்குகள், நித்திரையின் போது காணப்படும் கனவு தொடர்பான மனப்பாங்குகள் போன்று அமைகின்றன. இரவுக் கனவுகள், மனிதர்கள் நித்திரை மூலம் பெறவேண்டிய ஓய்வினை இடையீடு செய்யும் ஒன்றாகவே நீண்ட காலமாக எண்ணப்பட்டு வந்தது. ஆனால் இரவுக் கனவுகள் நித்திரைத் தொழிற்பாடுகளின் ஒரு சாதாரண பகுதியாக மட்டுமன்றி உள நலனுக்கு உயிராகவும் அமைந்துள்ளது என பரிசோதனைகள் குறிப்பிட்டுள்ளன. கலாநிதி வில்லியம் டெமண்ட் என்பவர் நியூயோர்க் ஆஸ்பத்தி ரியொன்றில் நித்திரை நிலையத்தைச் சேர்ந்த வைத்திய நிபுணர். இவர் கனவுகளின் சிறப்பான அம்சங்கள் பற்றி விரிவான பரிசோதனைகள் செய்தவர். இவரது கருத்துப்படி, இரவுக் கனவுகளுக்கு ஒருவரின் உச்ச உணர்ச்சிநிலை (Hypertension) தீவிர அவா நிலை (Anxiety ) கோபமூட்டும் செயல் ( Irritablity) உள நெருக்கடி (Stress) வெளிப்படையான பீதி என்பனவும் காரணமாகின்றன. நீண்ட காலத்துக்கு கனவுகள் ஒடுக்கப்படுமானால் அது ஆளுமையில் பாரதூரமான விளைவு களை ஏற்படுத்தும். அதேபோன்று பகற்கனவு பற்றிய ஆய் வொன்றின்படி பெரும்பாலான பகல் நேர பகற்கனவுகள் நடை முறை ரீதியானதும் உடனடியான விடயங்களுடன் குறிப் பாக எதிர்கால உளரீதியான நடத்தைகளுடன் தொடர்புள்ள தாகவும் உள்ளன. அவை பாலியல் திருப்தி (இன்பம்) பிறர் நலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணல் (தியாகம்) வழமைக்கு மாற்றமாக பெரும் அதிர்ஷ்டம் (செல்வந்தனாதல்) எதிர்கால நிகழ்ச்சிகள் குறித்து திட்டமிடல் (விடுமுறை காலம்) என்பவற்றுடன் தொடர்புள் ளனவாகும்.

பகற் கனவுகள் உள நெருக்கடி நேரத்தில், உண்மை நிலையின் உராய்சலிலிருந்து எமது நரம்பு மண்டலத்தை தற்காலிகமாகப் பாதுகாக்கின்றது. புத்தி சுவாதீனமுள்ள எந்த மனிதனும் தன் வாழ்க்கையை நிம்மதி தராத போரில் ஈடுபடுத்த விரும்பமாட்டான். எனவே பகற் கனவுகள் மனிதனின் நாளாந்த வாழ்க்கையில் கணிசமான பகுதியை எடுக்கின்றன. இது ஆக்கபூர்வமான ஒய்வு வழி என விஞ்ஞானம் கூறுகின்றது.

நியூயோர்க் உளப்பிணி நிபுணர் டாக்டர் ஜே.ரி. பிறீபேர்க் என்பவர் பகற்கனவு பற்றிக் குறிப்பிடுகையில், அது ஒருவரின் உளவிருத்தி, மன ஒருமைப்பாடு, கவனக்குவியல், மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் திறன் ஆகியவற்றுக்குச் சிறப்பான பங்களிக்கின்றது என்றார். பாடசாலை மாணவர்களிடையே அவர் நடாத்திய பரிசோதனை ஒன்றில் அவர் முன்னேற்றமான கவனக் குவிப்பை அவதானித்தார். மிகக் குறைந்த தொகையினரே சுற்றித் திரிந்தார்கள். அதிகமானோர் சந்தோஷமான மனநிலையுடன் காணப்பட்டனர். அதிகமானோர் குழுக்களில் கதைத்து விளையாடிக் கொண்டிருந்தனர். மேலும் அதிகமானோர் ஆழமான விடயங்களில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தனர். மற்றோர் பரிசோதனையில் டாக்டர் சாறா சிமிலன்ஸ்கி, பகற்கனவு காண்பது சம்பந்தமாகக் கற்றுக் கொண்ட சிலர் தம் மொழித் திறன்களை விருத்தி செய்து கொண்டதாக கண்டுபிடித்தார். யேல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஜெறோம் சிங்கர், பகற்கனவு காண்பதன் மூலம் சுய கட்டுப்பாடு, ஆக்க சிந்தனைத் திறன் ஆகியன வளர்கின்றன எனக் கண்டுபிடித்தார். மேலும் பகற்கனவு நிஜவாழ்க்கையின் நிகழ்வுகளை உறுதிப்படுத்த உதவுகின்றது எனவும் மனித சாதனைகளுக்கு இது ஒரு சக்திமிக்க ஊக்கியாக உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு நுண்ணாய்வுப் பரிசோதனை முடிவுகளின்படி, பகற்கனவு காணல், சொந்த நடத்தைமீது நாம் நல்ல விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் அதன் மூலம் எங்கள் உள்ளார்ந்த உணர்வு - மனச்சாட்சியுடன் ஒத்துப் போகக் கூடிய தன்மையை அடைந்து கொள்ளவும் உதவுகின்றது. இது மற்றொருபுறம் எமது சுற்றாடலில் வாழும் மக்களுடன் நல்ல தொடர்புகளை வைத்துக் கொள்ளவும் உதவுகிறது. எனவே பகற்கனவுகள் நேரத்தை வீணாக்குதல் என்ற கருத்திலிருந்து வாழ்க்கையை வளமாக்குவதற்கான ஒரு சாதனம் என்ற கருத்து மாற்றத்தினை ஏற்படுத்தி வருகின்றது.

## II

அமெரிக்காவில் மின்னணுவியல் கம்பனியொன்றின் முக்கிய நிர்வாகியொருவர் நாளாந்தம் ஒரு சில நிமிடங்கள் பகற்கனவு காணும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். அது அவரது மனோசக்தியை குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கச் செய்தது. கடினமான பணிகளை இலகுவாகச் செய்வதற்கு ஏற்ற புத்தூக்கத்தை அது அளித்தது. பெரும்பாலான வர்த்தக அறிக்கைகளின்படி பகற்கனவு, அவர்களுக்குப் பல பணிகளை யும், கடமைப்பாடுகளையும் இலக்குகளையும் நினைவூட்ட உதவுவதாகவும் நாளாந்த நடவடிக்கைகளின் போது ஏற்படும் அமுக்கத்தை அது மறக்கடிக்கச் செய்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரே பாங்கான நாளாந்தக் கடமைகளால் மன விரக்திக்குள்ளான தொழிலாளர்களைப் பொறுத்தவரை பகற் கனவுகள் அவர்கள் மிக உற்சாகத்துடன் நீண்ட நேரத்திற்கு தொழில் புரிய உதவுவதோடு ஒரே பாங்கான வேலைத் தன்மை யினால் ஏற்பட்டுள்ள அலுப்பு, விரக்தி என்பனவற்றையும் குறைக்கின்றது.

வழக்கமாக பகற்கனவு காண்பவர்களின் அறிக்கைப்படி அவர்களின் மனத்தில் ஏற்படும் வெற்றிடம் (Vacation) காரணமாக அவர்கள் உற்சாகம் பெறுகிறார்கள். அதிகளவு புத்தூக்கமும் மாற்றமும் பெறுவது மட்டுமன்றி அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குடையவர்களாகவும் ஆகின்றார்கள். மேலும் அவர்கள் உடற்பாரம் குறைந்தவர்களாகவும் உயர் விவேகம் உடைய வர்களாகவும், பிரகாசமான பார்வையுடையவர்களாகவும் ஆகி றார்கள். அவர்களைப் பொறுத்தவரை பொருட்கள் எல்லாம் அர்த்தமுள்ளவையாகவும் அமைகின்றன. பகற்கனவு பற்றிய இத்தகைய நன்மைகளைப் பொறுத்தவரையில் மேலும் அவை மனநல உணர்வுகளைச் சீர்படுத்துவதாகவும் மனோதிடம் என்னும் நீர்த்தேக்கத்தை கட்டியெழுப்புவதாகவும் அமை கின்றது. இவ்வகையில் பகற்கனவு காண்பது ஆபத்தான காலங்களில் உதவக்கூடிய வளங்களைக் கொண்ட 'விசேட சக்தி' என்னும் வங்கிக் கணக்கைத் திறப்பது போலமைந்தி ருக்கின்றது. மேலும் இது ஒரு மனிதன் நாளாந்த பிரச்சினை களைத் தீர்ப்பதற்கும் உடனடியாக நடைமுறைப்படுத்துவ தற்கும் பயன்படக்கூடிய ஆற்றலை அதிகரிக்கச் செய்வதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்பாளர்களும் மன ஓய்வினால் அதிக அனுகூலங்க ளைப் பெற்றுள்ளார்கள். அவர்களின் சிறந்த கருத்துக்களும் கண்டுபிடிப்புக்களும் அவர்கள் மன ஓய்வு பெறும்போதும் பகற் கனவு காணும் போதும் ஏற்பட்டவையாக உள்ளன. எடுத்துக்காட்டாக நியூட்டன், பெரும்பாலான கடின பிரச்சி னைகளையெல்லாம் தான் தனியாக ஆழ்ந்த சிந்தனையில் கவனம் குவிக்கப்பட்டிருந்த வேளையில்தான் தீர்த்துக் கொண்டான். தோமஸ் அல்வா எடிசன் கூட இதன் பெறு மதியை நன்கறிந்தான். ஓவியர், கவிஞர், எழுத்தாளர்கூட, தம் உணர்ச்சிகளை உள்ளார்ந்த கற்பனைக்கும் (Fantasy) மனோ ரம்மிய நிலைக்கும் (Reverie) ஆட்படுத்தியுள்ளார்கள். சில்லர் என்பவர், தம் மேசை லாச்சியில் அழுகிய ஆப்பில் பழங்களை வைத்து அதன் பரிமள வாசனையில் மனோரம்ய நிலையினைப் பெற்றார். சீசர் பிராங்க் என்பவர் தாம் கவிதை புனையும் போது சூழ்நிலைபற்றி எதுவும் அக்கறைப்படாது கனவு போன்றதான விறைத்த பார்வையுடன் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோன் டுயி, ஆக்கத்தொழிற்பாடுகளில் பகற்கனவின் முக்கியத்துவத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஓவியம் போன்ற கலை ஆக்கம் பற்றிய திறன்கள் பகற்கனவு நிலைக்குத் தம் மனத்தை ஒய்வுபெறச் செய்யும் நபர்களுக்கே கைவரக் கூடியதாகும். உலகில் 'சாதனைகள் நிலைநாட்டியவர்கள் உண்மையில் தாம் வெற்றியடைவதற்கு அதிக காலத்துக்கு முன்பாகவே அவற்றை பகற்கனவு மூலம் அடைந்திருக்கி றார்கள். கோலூன்றிப் பாயும் வீரர் ஜோன் யூல்சஸ், பகற்கனவு காண்பதை வழமையாகக் கொண்டிருந்தார். அவர் ஒவ்வொரு விளையாட்டுப் போட்டிக்கு முன்பும் தாம் குறிப்பிட்ட உய ரத்தைத் தாண்டுவதையும் வெற்றி பெறுவதையும் மனக் கண்ணால் கண்டார். புளோறன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் ஒரு தாதியாக வருவதுபற்றிக் கனவு கண்டார். எடிசன் தம்மை ஒரு கண்டுபிடிப்பாளராகவே படம் பிடித்திருந்தார்.

எச்.ஜே. கைசர் 'நீங்களே உங்கள் எதிர்காலத்தைப் பற்றிக் கற்பனை பண்ணுங்கள்' எனக் கூறுகிறார். அவரது வாழ்க்கை வெற்றிகளில் பெரும்பகுதி பகற்கனவுகளின் சாதகமான பயன்பாடாகும் என நம்பினார். எச்.எஸ்.ட்றூமன் என்பவர் ஓய்வுக்காகவும் புதுத் தெம்பு பெறுவதற்காகவும் பகற்கன வைப் பயன்படுத்தினார். 'எனது மனத்திலே ஆபத்துக்க ளிலிருந்து தற்காத்துக் கொள்ளும் ஒரு மறைவிடம் உள்ளது' என அவர் கூறுவார். கொன்றாட் ஹில்டன் என்பவர் தம் இளமைக்காலத்தில் தான் ஒரு ஹோட்டலை வைத்து நடத்தப் போவதாக பகற்கனவு கண்டார். அவரது சகல வெற்றிகளும் அவர் தம் இளமைக்காலத்தில் கற்பனை பண்ணியவையே என அவர் கூறினார்.

வெற்றி பற்றிய உற்சாகமான முற்கணிப்பு ஏன் வெற்றியைப் பெற்றுத் தருகிறது? 'உங்கள் நரம்பு மண்டலம், கற்பனை அனுபவத்துக்கும் உண்மை அனுபவத்துக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைச் சொல்ல முடியாதிருக்கின்றதா? டாக்டர் மாக்ஸ் வல் மோல்ட்ஸ் விளக்குகிறார். 'இரண்டு விடயங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிலும் உங்கள் முன் மூளையிலிருந்து நீங்கள் கொடுக்கும் தகவல்களுக்கு ஏற்ப தாமாகவே உங்கள் நரம்பு மண்டலம் மறுவினை புரிகின்றது. நீங்கள் என்ன நினைக்கின்றீர்களோ அல்லது எது உண்மையாக நடைபெற வேண்டுமென்று கற்பனை பண்ணுகிறீர்களோ அதற்கேற்ப சரியாக அது செயல்படுகிறது. பகற் கனவு காணும் பயிற்சியானது புதிய ஞாபகங்களை கட்டியெழுப்புகின்றது. அல்லது தகவல்களை உங்கள் மத்திய மூளைப்பகுதியிலும் மத்திய நரம்பு மண்ட லத்திலும் அது களஞ்சியப்படுத்துகின்றது. இந்த ஞாபகங்கள் சுய கற்பனையை வளர்க்கின்றது. விருத்திடையந்த சுய கற்பனையானது, ஒரு மனிதனின் நடத்தையிலும், சாதனை யிலும் குறிப்பிடத்தக்க அளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இதன் பெறுபேற்றை அறிய வேண்டுமாக இருந்தால் உங்கள் மனதில் நீங்கள் விரும்பியவாறு ஒரு படத்தை அமைத்துக் கொள்ளுங்கள். அப்படியான படம் ஏற்கனவே நீங்கள் விரும்பிய - அறிமுகமான பொருளின் படமாக இருக்க வேண்டும். இந்தப் படங்களைப் பற்றிய விபரங்களை பல தடவைகளில் சிந்திக்க வேண்டும். இது உங்கள் ஞாபகத்தில் அழிக்க முடியாத பதிவுகளை ஏற்படுத்தும். இந்த ஞாபகத் தடயங்கள் அல்லது வரைகோடுகள் அவை எப்போது நினைவுபடுத்தப்படுமோ அப்போதெல்லாம் உங்கள் இலக்கினை எய்தும் வகையில் நாளாந்த நடத்தையில் மிக விரைவாகவே செல்வாக்குச் செலுத்தத் தொடங்கும்.

பகற்கனவுக்கு முதற்படி, மன ஒருமைப்பாடு அல்லது தியானம் ஆகும். இதற்குப் பயிற்சி அவசியம். தனித்திருக்க வேண்டும். சூழ்நிலைத் தடைகள் ஏதும் இல்லாதிருக்க வேண்டும். கண்களை மூடிக் கொள்ள வேண்டும். மனதை ஒரு நிலைப்படுத்தும்போது சூழ்நிலையின் புற ஓசைகள் எல்லாம் அடங்கி அவை பற்றிய உணர்வே இல்லாமற் போகும். கற்பனையில் மிதப்பதற்காக சிலர் பெரிய வெற்றுத் திரைமுன் வீற்றிருந்து தாம் விரும்பியவாறு கற்பனை செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையுடன் தொடர்பான கற்பனை, பகற்கனவுக்கு ஆதிக்கமுள்ள ஒரு மாதிரியாகும். மேலும் கற்பனை தெளிவானதாகவும் கூர்மையானதாகவும் இருப்பதை நிச்சயப் படுத்திக் கொள்ள வேண்டும்.

சிலர் பகற் கனவுக்கு இயைபான ஒரு மனநிலையைப் பெறுவதற்காக முதலில் உள்ளத்தில் கடந்த காலத்தின் சிறந்த அனுபவங்களைக் காண்பார்கள். தன்னம்பிக்கைமிக்க ஒரு மனோநிலையை அவர்கள் பெற்றுள்ளபோது அவர்கள் எதனை அடைய விரும்புகிறார்களோ அதனைச் சுற்றி சிந்தனையை கட்டியெழுப்புகிறார்கள். எனினும் ஏற்கனவே அடையப் பெற்ற விடயமாக இருந்தால் மட்டுமே கனவு காணப்படுகின்றது. இவ்வாறு பகற் கனவை வளர்ப்பது உள்ளாற்றலை விருத்தி செய்வதற்கும், இலக்குகளை அடைவதற்கும் பிரதான முதற்படியாகும்.

பகற் கனவு ஆழமாக இருக்கையில் நேரம் தோன்றாத ஓர் பேரின்பத்தை அனுபவிக்க முடியும். அப்போது முன்னும், பின்னும், சூழவும் வெளியேயும் இருக்கும் பொருட்கள் பற்றிய உணர்ச்சி முற்றாகவே மறைந்துவிடும். சிலர் சத்தம் சந்தடி மிக்க சன நெரிசலின் மத்தியிலும் தம் சொந்த விடயங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்ளும் சக்தியைப் பெற்றிருக்கிறார்கள். அப்படியான மக்களின் உள்ளக தனிமைப்பாடு (Inward Isolation) புற தனிமைப்பாட்டில் (Outward Isolation) தங்கியிருக்காது. ஆனால் எங்களில் அனேகர், அனுபவங்கள் புதிதாக இருக்கையில் விசேடமாக வெளியுலகத் தடைகள் இல்லாத சுதந்திரமான சுற்றாடலை வேண்டுகிறோம்.

பகற் கனவு அனேகமாக நித்திரைக்கு சற்று முன்பாக இயல்பாகவே ஏற்படுவதாக கூறப்படுகின்றது. மிகக் குறைவாக ஏற்படும் சந்தர்ப்பங்களாவன விழித்திருக்கும் போதும், உணவு உட்கொள்ளும் போதும், பாலியல் நடத்தையில் ஈடுபட்டிருக்கும் போதுமேயாகும். பெரும்பாலான மக்கள் பகற்கனவு மூலம் தாம் மகிழ்ச்சியடைவதாகவும், இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண நிகழ்வு என்பதால் குழப்பம் அடையாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

கற்பனையும், பகற்கனவும் இல்லாது வாழும் வாழ்க்கை ஒரு பாரதூரமான தரித்திர வாழ்க்கையாகும்.நாளாந்தம்ஒரு சில நிமிடங்களாவது (10 அல்லது 15) மன ஓய்வுக்காக ஒதுக்கி வைத்துக் கொள்ள வேண்டும். பகற்கனவுகள் உடல் நல னுக்கும் உள நலனுக்கும் நன்மை பயக்கக்கூடியது. இந்த செல வில்லாத முதலீடு ஆக்கத் திறனுக்கும் கற்பனை வளத்துக்கும் சிறந்த உரமாகவும் அமைவதோடு உள நிறைவையும் வழங்கு கிறது. மேலும் வாழ்க்கைக்கு முழுமையான உணர்வையும் சுவையையும் ஊட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7
# பாடசாலைகளில் கட்டொழுங்கு பேணல்

இன்று Discipline என்ற பதம் படித்தவர்கள் பலராலும் பல சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது. 'அவன் ஒரு Disciplinarian' 'அந்த ஊழியருக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.' மத்திய கல்லூரியில் டிசிப்பிளின் நன்றாக அமுல் நடத்தப்படுகின்றது. என்றவாறு இப்பதம், 'ஒழுங்கு முறை' அல்லது 'கட்டொழுங்கு' என்ற பொருளைப் பெற்று விளங்குகின்றது.

கட்டொழுங்கு என்பது எந்த ஒரு சமூக அமைப்புக்கும் இன்றியமையாதது. அது அலுவலமாக இருப்பினும் சரி, ஒரு வர்த்தக நிறுவனமாக இருப்பினும் சரி, கல்விக் கூடமாக இருப்பினும் சரி, குடும்பமாயினும் சரியே. ஒரு நிறுவனத்தின் இலட்சியங்கள், அதன் தொழிற்பாடுகள் என்பன செவ்வனே நிறைவேற்றுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவது அதன் நிர்வாக முறைமை ஆயினும் அதன் முக்கிய கூறாக கட்டொழுங்கு அமைந்துள்ளது. இதனாலேயே நிறுவனத்தின் கட்டொழுங்கை மீறுபவர்களுக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது ஒரு நடைமுறையாக வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கல்வி நிறுவனத்தைப் பொறுத்தவரையில் கட்டொழுங்கு மிக இன்றியமையாதது. ஏனெனில் கட்டொழுங்கு பேணப்படாமல் சிறந்த கற்பித்தல், கற்றல் அமைய முடியாது. ஒருவன் தான் வாழும் சமூகத்தோடு இயைந்து வாழும் பயிற்சியையே கட்டொழுங்கு வழங்கு கின்றது. பல்வேறுபட்ட வீட்டுச் சூழல்களிலிருந்து வரும் பிள்ளைகளினதும் பல்வேறு வகைப்பட்ட பழக்க வழக்கங்கள் சங்கமமாகும் இடம் பாடசாலையாகும். எனவே சமூக இணக்கம் பெறுகின்ற நியமமான பழக்க வழக்கங்களை உரு வாக்கும் பொறுப்பும் நுட்பமும் கல்விக் கூடங்களைச் சார்ந்த தாகும். இந்த வகையில் ஒழுக்கமும், கட்டுப்பாடும், உறுதிப் பாடும் கொண்ட எதிர்கால சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பணியும் கல்விக் கூடங்களைச் சார்ந்துள்ளது எனலாம்.

ஒரு பாடசாலையில் கட்டொழுங்கைப் பேணும்போது அங்கு பணியாற்றும் பல்வேறு பிரிவினரும் அதற்குப் பொறுப்பாளிகளாவர். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றுமுள்ள ஊழியர்கள் அனைவரும் கட்டொழுங்கிற்கு கட்டுப்பட்டவர்களேயாவர். இவர்கள் விரும்பினாலும், விரும்பாவிடினும் நிறுவனத்தின் பொது ஒழுங்கு முறைகளுக்கும் விதிகளுக்கும் கட்டுப்பட்டு ஒழுகுவது கட்டொழுங்கு எனச் சுருக்கமாகக் கூறலாம். ஒவ்வொரு நிறுவனமும் தமக்கென ஒழுக்கக்கோவையை (Code of Conduct) கொண்டிருக்கும்.

ஒரு வகுப்பில் சத்தமோ, குழப்பமோ இன்றி மாணவர்கள் அமைதியாக இருந்து, ஆசிரியர் சொல்லுவதை மாணவர்கள் எதுவித கேள்வியும் கேட்காமல் அப்படியே ஏற்றுக் கொண்டு நடப்பார்களாயின் அதுவே கட்டொழுக்கம் என மரபு ரீதியாகக் கருதப்பட்டு வந்தது. இத்தகைய கட்டொழுங்கை நிலைநாட்டு வதற்கு தண்டனைகள் முக்கிய இடம்பெற்றிருந்தன. ஆயின் கட்டொழுக்கம் என்பது மாணவர்கள், நற்பழக்கம், சரியான மனப்போக்கு, சீரிய ஒழுக்கம் என்பவற்றைக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையான ஆளுமை பெற உதவுவதாக இருக்க வேண்டும் என்ற நவீன கருத்தே இன்று செல்வாக்குப் பெற்று வருகின்றது. அதாவது குறித்த நேரத்தில் கருமமாற்றல், தன்னடக்கம், பணிவு, பிறர்க்குத் தொல்லை தராமை, பிறரை மதித்தல், பரஸ்பரம் உதவி, தலைமைக்குக் கட்டுப்படுதல், ஊக்கத்துடன் செயலாற்றுதல், கடமையுணர்வு போன்ற பிரதான பண்புகளை ஒருவன் பெறுவதற்கான பயிற்சியைக் கட்டொழுங்கு வழங்குதல் வேண்டும்.

மாணவர்களைப் பொறுத்தவரையில் கட்டொழுங்கு எனப்படும் பொது ஒழுங்கு முறைக்குக் கட்டுப்படுதல் என்பது இருவகை நிலைகளைக் கொண்டுள்ளது. ஒன்று, தண்டனைக்குப் பயந்தோ, மனதுக்கு இசைவின்றியோ பொது ஒழுங்கு முறைக்குக் கட்டுப்பட்டொழுகுதல், மற்றது பொது ஒழுங்குமுறையின் நலன்களையும், முக்கியத்துவத்தையும் கருதி மனதைப் பக்குவமாக்கி இசைந்து ஒழுகுதல். முதலாவது நிலை வரவேற்கத் தக்கதன்று. கட்டுப்பாடுகள் பலாத்காரமாகத் திணிக்கப்படுவதாக மாணவர்கள் கருதுவார்களானால் அங்கு மீறல்களும் ஏற்படுவது இயல்பானதே. உள்ளத்தில் எழுகின்ற உண்மையான ஒழுங்குநிலை, வகுப்பறையிலோ, விளையாட்டு மைதானத்திலோ, பூஞ்சோலையிலோ, ஆசிரியருக்கு முன்பாகவோ, இல்லாத வேளையிலோ ஒரே விதமாகவே அமைந்திருக்கும்.

இளஞ்சிறார்களைப் பொறுத்தவரையில் ஆரம்பப் பாடசாலைகளில் முதலாம் நிலையிலான கட்டொழுங்கே அமைந்து விடுகின்றது. பெரும்பாலும் சிறுவர்கள் தண்டனைக்குப் பயந்து ஒழுகுவதில் இயல்பான தன்மையுடையவர்கள். அவர்கள் இயல்பாகவே அடிக்கடி மனவெழுச்சிப் போராட்டங்களுக்கு உள்ளாகின்றார்கள். உள்ளமும் உணர்ச்சிகளும் பண்படாத நிலையில் அவர்கள் இத்தன்மையைப் பெற்றுள்ளார்கள். கூட்டாளியுடன் அன்பு கொள்ளும் மறுகணமே ஏதோ அற்ப காரணங்களுக்காக திடீரெனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபங்கொள்கின்றனர். அழுத மறுகணமே சிரிக்கின்றார்கள். இந்த நிலையில் ஆசிரியர் வகுப்பில் இல்லாதவேளைகளில் கட்டொழுங்கை மீறுகின்றபோதிலும் இளஞ்சிறார், தண்டனைக்குப் பயந்து ஒழுகுவதில் அக்கறை கொள்ளுவதும் இயல்பே. மேலும் அவர்களைப் பொறுத்தவரையில் கிரம மான வழக்கங்களையும் பயிற்சிகளையும் கடைப்பிடிப்பதில் இயல்பாகவே விருப்புடையவர்களாக இருக்கின்றனர். இத னால் இளமையில் மாணவர் பெறும் கட்டொழுங்குப் பயிற்சி யானது அவர்கள், பிற்காலத்தில் அதன் நல்ல பேறுகளை உணர்ந்து கடைப்பிடிப்பதற்கும் நல்ல சமூகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் காரணமாக அமைகிறது.

இரண்டாவது நிலையைக் கருத்திற் கொள்ளும்போது கட்டொழுங்கு சிறப்பாக அமைவதனை இந்நிலை சாத்தி யப்படுத்துகின்றது. அதாவது மாணவர்கள் பொது ஒழுங்கின் முக்கியத்துவத்தை உணர்ந்து உள்ளத்தை அதற்கு இசைவாக்கி தமது பிரத்தியேக அபிலாசைகளை அகற்றி ஒழுங்கு முறை யினை ஏற்று ஒழுகுவதாகும். குறிப்பிட்ட ஒழுங்கு முறைப்படி நடப்பதே தமக்கும் சமூகத்துக்கும் பயனை விளைவிக்கும் என்பதை மாணவர் நன்கு உணர்ந்து நடப்பதால் சிறந்த கட்டொழுங்கு பேணப்படுகின்றது. வளர்ந்த மாணவரிடத்தில் (கட்டிளைஞர் 12-21 வயதுவரை) இந்த நிலையிலான கட்டொழுங்கைப் பேணுவதே மிகப் பயனுள்ளதாகும். ஏனெ னில் வளர்ந்த மாணவரிடையே நெறி பிறழ்வுக்கான (Delinquency) வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன.

வளர்ந்த மாணவரிடையே கட்டொழுங்கு மீறப்படுவ தற்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம்.

**(அ) கட்டிளமைப் பருவத்தினர் அக்கறைகள், தேவைகள் என்பன:** இப்பருவத்தினர் பொதுவாக சுதந்திரமாகவே நடந்துகொள்ள விரும்புகின்றனர். மூத்தவர்களின் கட்டுப் பாடுகளை இவர்கள் வெறுக்கின்றனர். வீண் கேளிக்கை களில் ஈடுபடுகின்றனர், தமது எண்ணப்படி வாழ்க்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்துக் கொள்வதற்கும் அதற்கான தேவைகளுக்கு மிடையே இவர்கள் பல்வேறு முரண்பாடுகளுக்குள்ளா கின்றனர். இதனால் இவர்கள் பிறழ்வான நடத்தைக ளுக்குட்படுவதோடு சமூக விரோத செயல்களிலும் நாட்டம் கொள்கின்ற னர்.

**(ஆ) வீட்டில் ஒழுங்கு முறையான கட்டுப்பாடுகளின்மை:** பெற்றோர் பிள்ளை தொடர்புகளும், பெற்றார் சமூகத் தொடர்புகளும் திருப்பியற்றவையாக இருக்கும்போது அத்தகைய பிழையான நடத்தைகளின் தாக்கம் பிள்ளைக ளின் நடத்தையிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

**(இ) ஆசிரியரையும், சக மாணவர்களையும் விமர்சனம் செய்யும் மனப்பாங்கு:** இதனால் ஆசிரியர்களது நடத்தை களையும் கொள்கைகளையும் குறைகளையும் விமர்சனம் செய்யும்போது அவர்களைக் கேலி செய்யவும் அகெளர வப்படுத்தவும் தூண்டப்படுகின்றனர். சக மாணவரிடையே இத்தன்மை காணப்படும்போது ஒற்றுமை குலைந்து ஒழுக்கம் மீறப்படுகின்றது.

**(ஈ) மாணவர் பிரத்தியேக போதனைகளில்** (Private Tuition) **மட்டுமே நம்பிக்கை கொண்டிருத்தல்** : மாணவர்கள் பாடசாலைக் கல்விக்குப் புறம்பாக பிரத்தியேக போதனை களில் அதிக நம்பிக்கை கொண்டிருக்கும் போது பாடசா லைக் கல்வியில் அக்கறையற்றவர்களாகவும் அதனைப் புறக்கணிப்பவர்களாகவும் ஆகின்றனர். இதன் விளைவாக மாணவர்கள் பாடசாலைக்குச் சமூகந்தராமை, வகுப்புக்க ளைக் குழப்புதல், ஆசிரியரை மதியாமை போன்ற ஒழுங்கீனங்கள் ஏற்படுகின்றன.

**(உ) சமயப்பற்றின்மை:** சமயத்தில் நம்பிக்கை இன்மை, சமய வழிமுறைகளில் ஈடுபாடு இன்மை போன்றனவும் மாணவரிடையே ஒழுக்கச் சீர்கேட்டைத் தோற்று விக்கின்றன. சமயக் கோட்பாடுகளும், நடைமுறை களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறி சார்ந்தவையாகையால், சமய ரீதியான ஒழுக்கக் கட்டுப்பாடுகளைப் பேணாத குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் உறுதிப்பாடான நல்லொழுக்கங்க ளைப் பெற்றவராதல் கடினம்.

இவ்விடயத்தில் கட்டொழுங்கிற்கும் அற ஒழுக்கத்திற்கும் (Morals) இடையேயுள்ள தொடர்பைக் கருத்திற் கொள்ள வேண்டும். கட்டொழுங்கு என்பது அற ஒழுக்கத்தின் சிறந்த பண்புகளைப் பிரதிபலிப்பனவாக அமையும்போது அது அர்த்தமுள்ளதாகவும் வலுவுள்ளதாகவும் அமையும் எனலாம். சமய, கலாசார, நம்பிக்கைகளையும், நியமங்களையும், ஆன்மீக விழுமியங்களையும் அடியொற்றியவையாக ஒழுக்கக் கோவை அமையும்போது இது மாணவரிடையே அதிகம் ஆதிக்கம் செலுத்துவதை உணரலாம். அதேவேளை ஒழுக்கக் கோவைக்கும், சமூக, சமய, கலாசார வாழ்க்கை நெறிகளுக்கும் இடையே முரண்பாடுகள் இருப்பின் அவை மாணவர் நடத்தையிலும் பல முரண்பாடுகளைத் தோற்றுவிக்கலாம்.

சமயத்தோடியைந்த அறநெறித் தீர்ப்புக்கள் (Moral Judgement) மனிதனைத் தமக்கும் சமூகத்துக்கும் நல்லவனாக மாற்றிய மைக்கின்றன. எனவே சமயம் கூறும் ஒழுக்க நெறிகளை ஒட்டியதாக கட்டொழுங்கினை வகுத்துக் கொள்வதன் மூலம் மாணவரின் ஒத்துழைப்புக்கு வழிவகுக்கலாம். எடுத்துக் காட்டாக, முஸ்லிம் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் இஸ்லாமிய சமயக் கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் ஒட்டியதான ஒழுக்கக் கோவை மிகப் பயனுள்ளதாக அமை யும். தலைமைக்குக் கட்டுப்படுதல், ஆசிரியருக்கு கண்ணியம் செலுத்துதல், முதியோரை மதித்தல், சிறியவர்களிடம் அன்பு கொள்ளுதல், பிறர்க்கு உதவுதல், நேரம் தவறாமை, இறை யச்சம், நேர்மை, கடமையுணர்வு, சுத்தம் பேணல், வீண் வேடிக்கைகளைத் தவிர்த்தல், கல்வியைக் கரிசனையாகக் கொள்ளல், இடாம்பீகம் தவிர்த்தல், தற்பெருமை கொள்ளாமை, பிறர் குற்றம் பொறுத்தல், ஆன்மீக நோக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த வாழ்க்கை இலட்சியம் போன்ற சிறந்த ஒழுக்கப் பண்புகளை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. எனவே கல்வி நிறுவனங்கள் மாணவரிடையே சமய நம்பிக்கையை வளர்க்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுப்ப தன் மூலம் இத்தகைய சிறந்த ஒழுக்கப் பண்புகளை மாணவரிடம் வளர்க்க முடியும்.

கல்விக் கூடங்களில் கடைப்பிடிக்கப்படும் எத்தகைய கட்டொழுங்கும் மாணவர் நலனுக்கே கூடிய அழுத்தம் கொடுத்தல் வேண்டும். அது மாணவரின் முழுமையான ஆளுமை வளர்சிக்குத் துணைபுரிவதாக அமைதல் வேண்டும். கட்டொழுங்கு, மாணவரை இயந்திரமாகக் கருதாது, அவர்களது சூழலுக்கும், பருவத்துக்கும், இயைந்ததாக வகுக்கப்படல் வேண்டும். கட்டொழுங்கை மனதாரப் பின்பற்றுவதற்கேற்ற சூழலும், வாய்ப்புக்களும் வழங்கப்பட வேண்டும். எனவே பாடசாலை கட்டொழுங்கைப் பேணுவதில் ஆசிரியர்க்கும் முக்கியமான பொறுப்பு உள்ளது.

(அ) மாணவர்களது ஆர்வம், அக்கறை, தேவைகளை இனங்கண்டு அவற்றை நிறைவு செய்வதிலும், பொருத்தப்பாடுறச் செய்வதிலும் ஆசிரியர் அவர்களுக்கு உதவுதல் வேண்டும். மேலும் மாணவரின் குடும்பநிலை, மன வெழுச்சிக் குறைபாடுகள் போன்றவற்றையும் தனித்தனியே அறிந்து வைத்திருப்பதன் மூலம் அவர்களின் முன்னேற்றத்துக்கு உதவ முடியும்.

(ஆ) பிரதானமாக ஆசிரியர் மாணவரைக் கவரக்கூடிய சிறந்த ஆளுமை உடையவராக (Personality) இருத்தல் வேண்டும். ஆளுமை என்பது அறிவு, அன்பு, கடமை, நேர்மை, கற்பித்தலில் ஆர்வம் போன்ற நற்பண்புகளின் கூட்டுச் சேர்க்கையாகும். இத்தகைய பண்புகள் மாணவர்களை இலகுவில் கவர்வதோடு ஆசிரியரை நன்கு மதிக்கத் தூண்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) ஆசிரியர் முன்மாதிரி ஒழுக்கமுள்ளவராக விளங்குதல் வேண்டும். ஒழுக்க வளர்ச்சியில் பார்த்துச் செய்தல்(Imitation) என்பது பெரும்பங்கு வகிக்கின்றது. எனவே சிறந்த ஒழுக்கப் பண்புகளை ஆசிரியர் பெற்றிருத்தல் வேண்டும். தத்துவமேதை இராதாகிருஷ்ணன் ஆசிரியர் பற்றிக் கூறும்போது, ஆசிரியர் அறிவு புகட்டுவதோடு மட்டுமன்றி தான் எடுத்துக்காட்டின் மூலம் வழிகாட்டியாகவும் திகழ வேண்டும் என்பார். தாம் செய்யாத காரியங்களையும் பிறர் செய்யுமாறு போதித்தல் கூடாது என இஸ்லாம் வலியுறுத்துகின்றது. மேலும் ஆசிரியரின் கொள்கைகள், நடத்தைகள் என்பன மாணவரிடத்தில் நனவிலிச் செல்வாக்கை (Unconscious Influence) ஏற்படுத்தி நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

(ஈ) ஆசிரியர் மாணவரது முன்னேற்றத்தில் இதயபூர்வமான அக்கறை கொண்டிருத்தல் வேண்டும். இந்த அக்கறை பாடம், வகுப்பு என்ற அளவில் மட்டுமன்றி முழு வாழ்க்கையிலுமே பிரதிபலிக்க வேண்டும். வகுப்புக்கு புறம்பான இத்தகைய நல்ல தொடர்புகள் ஆசிரியர் மீது மாணவர்கள் பற்றுக் கொள்வதற்கும் கல்விக் கூடத்தின் ஒழுங்குமுறையைப் பின்பற்றியொழுகுவதற்கும் காரண மாக அமையும்.

(உ) ஆசிரியர் வெளிப்பகட்டின்றி யதார்த்தமாக நடத்தல் வேண்டும். தன் உண்மை நிலையை மறைக்கக் கூடாது. ஆசிரியர் தமக்கு வழிகாட்ட வந்தவரேயன்றி தன் மேதா விலாசத்தை விளம்பரப்படுத்த வந்தவரல்ல என்பதை மாணவர் தெளிவாக விளங்கும் வகையில் ஆசிரியர் நடத்தை எளிமையாக அமைதல் வேண்டும். தன் அறியா மையை மறைக்காதவராகவும் தாமும் புதிதாகக் கற்பதில் ஆர்வமுடையவராகவும் தொழில்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஊ) ஆசிரியர் கட்டொழுங்கை நிலைநாட்டும்போது அங்கீகரித்தல், நன்மதிப்பு, வெகுமதி போன்ற நற்பண்புகளைப் பயன்படுத்தல் வேண்டும். தண்டனை, குறைகூறுதல் முறைகளைப் பார்க்கிலும் இவற்றால் அதிக பயன் விளையும் எனக்கூறப்படுகின்றது.

பொதுவாக பாடசாலை பின்வரும் வழிவகைகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் மாணவரிடையே சிறந்த கட்டொழுங்கை பேண முடியும்.

01. வகுப்புத்தலைவர் முறை (Monitor)

02. பாடசாலைத் தலைவர் முறை (Prefects)

03. இல்ல அமைப்பு (House Division)

04. விளையாட்டுப் போட்டிகள்

05. கலைப் போட்டிகள்

06. மாணவ மன்ற அமைப்பு

07. சிரமதான அமைப்புகள்

08. பயனுள்ள ஓய்வு / பொழுது போக்குகள்

09. சமய அறநெறிப் போதனைகள்/சமய ரீதியான வாழ்க்கைப் பயிற்சி வழங்குதல்.

10. கல்விச் சுற்றுலாக்கள்.

இவைபோன்ற முறைகளில் மாணவரைப் பங்கு கொள்ளச் செய்வதன் மூலம் மாணவரிடம் சிறந்த ஒழுக்கப் பண்புகள் வளரவும் கட்டொழுக்கம் பேணவும் போதிய வாய்ப்புக்கள் வழங்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# கல்வி வழிகாட்டலும் ஆலோசனைச் சேவையும்

வழிகாட்டல் ஆலோசனைச் சேவை என்பது இக்காலத்தில் ஒரு தொழில் சார்ந்த நிபுணத்துவ சேவையாகக் கருதப்ப டுகின்றது. பல்வேறு வகைப்பட்ட பிரச்சினைகளுக்கு ஆட்பட்டு சொந்த வாழ்க்கையை மட்டுமன்றி சமூகத்தில் ஏனையோரின் வாழ்க்கைக்கும் இடைஞ்சலாக அமையும் இளைஞர்களின் எதிர்காலத்தை வளமாக்கும் பொறுப்பு கற்றோரைச் சார்ந்ததாகும்.

முன்னொருபோது பாரம்பரிய கல்வி நிறுவனங்களும், சமய குரவர்களும், முதியோரும் பிள்ளைகளுக்கும் பிரச்சி னைக்குரியவர்க்கும் ஏற்ற அறிவுரையும் ஆலோசனையும் வழங்கி அவர்களுக்கு வழிகாட்டினர். பாரம்பரிய சமுதா யத்தில் இது சாத்தியமானதாகவே இருந்தது. அன்றைய சமு தாயத்தில் குருவானவர் பெற்றிருந்த நன்மதிப்பும், இறுக்க மான உறவும் வழிகாட்டல் ஆலோசனை வழங்கலில் ஓர் உறுதிப்பாட்டையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருந்தது.

ஆனால் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றம் இந்த உறுதிப்பாட்டையும் நம்பிக்கையையும் சிதைத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் ஏற்பட்ட விரைவான சமூக பொருளாதார கலாசார மாற்றங்கள், மக்கள் வாழ்க்கைப் பாங்கில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தின. தனி மனித சுதந்திரத்துக்கு அளிக்கப்பட்ட கட்டுப்பாடற்ற விளக்கங்கள், முழுக்குடும்ப மும் வேலைக் கலாசாரத்திற்கு அடிமைப்பட்டமை, சமூகத்தில் பெண்களின் சமத்துவம் பற்றி நிறுவப்பட்ட கருத்துக்கள், தாய் - சேய் நல்லுறவு குறைந்தமை, சமய பீடமும் இளைஞர் நம்பிக்கையைப் பெறத் தவறியமை, மூத்தோரை மதித்தல், பிறர்க்குதவல் போன்ற உயர் விழுமியங்கள் மேற்கத்தைய துய்த்தல் கலாசாரத்தால் அழிக்கப்பட்டமை, அகதிமுகாம் வாழ்க்கை, உயர்ந்த வாழ்க்கைச் செலவு, தொழில் வாய்ப்பின்மை, ஊழல் நிறைந்த சுற்றாடல் போன்றன இளை ஞரிடையே விரும்பத்தகாத பழக்க வழக்கங்களுக்கும் மன வெழுச்சி சார்ந்த பிரச்சினைகளுக்கும் காரணங்களாக அமைந்துள்ளன.

இந்த மாற்றங்களின் வெளிப்படைப் பண்புகளாக இன்று சமுதாயத்தில் நாம் அறிந்துள்ள விரும்பத்தகாத அம்சங்கள் அமைந்துள்ளன. அவை மாணவர் அமைதியின்மை, 'றாக்கிங்' கொடுமைகள், போதைப் பொருளுக்கு அடிமையாதல், வன்செயல் நடவடிக்கைககள், துப்பாக்கிக் கலாசாரம், பாலி யல் துர்நடத்தைகள், மூத்தோரை அவமதித்தல், குரு நிந்தனை, ஆர்ப்பாட்டம், மறியல் போராட்டம், தாழ்வு மனப்பான்மை, கல்வியில் பின்னடைவு, பாடசாலைக்கு வரவொழுங்கீனம், பாடசாலைகளில் ஒழுக்கச் சீர்கேடு, பொதுச் சொத்துக்களை அழித்தல், சமூக விரோத செயல்களிலும் அரச விரோத செயல்களிலும் ஈடுபடல் போன்றன.

இளைஞர் அமைதியின்மைக்கான சனாதிபதி ஆணைக்குழு அறிக்கை (1990) இவ்வாறு கூறுகிறது.

**'கட்டுக்கோப்பான ஒரு சமுதாயத்தில் உறுப்பினராக வாழ்வதற்கு தனி மனிதர்களை அனுமதித்த விழுமியங்கள், நவீன மாற்றங்களால் இழக்கப்பட்டுள்ளன.......**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முக்கிய மனிதப் பண்புகளாக மதிக்கப்பட வேண்டுமென ஒரு காலத்தில் கருதப்பட்ட சிக்கனம், எளிமை, நேர்மை ஆகியனவும், சமூகத்தில் ஏற்பட்ட விரைவான மாற்றங்களால் அழிக்கப்பட்டுள்ளன...

'கல்வியும் சமயமும் இன்னும் விழுமியங்களின் பிரதான மூலகங்களாக விளங்கும் ஒரு சமூகத்தில் இந்த மாற்றங்கள் சமூகத்தின் தார்மீக அத்திவாரங்களை உடைத்தெறியும் சக்தி வாய்ந்தனவாக உள்ளன.''

இத்தகைய நவீன - மாறுபட்ட சூழலில் வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் மிக இன்றியமையாத சேவையாகக் கருதப்படுகின்றது. ஆலோசனை வழங்கல், முன்னர் சுகாதார சேவைகளுக்கு மட்டும் உரியதாக இருந்தது. பின்னர் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், பயிற்சி நிறுவனங்கள், தொழில் அமைப்புக்கள், பாடசாலை இடை விலகுவோர், பாடசாலையை விட்டு நீங்கியோர், தொழில் வாய்ப்பற்றோர், பல்கலைக்கழகப் பட்டதாரிகள், பயிற்சி குறைந்த தொழிலாளர், ஊக்கல், மனப்பாங்கு, தீர்மானம் மேற்கொள்ளல், உளநெருக்கடி தொடர்பான பிரச்சினைகளையுடையோர் ஆகிய சகல மட்டத்திலும் இச்சேவை வியாபிக்கப்படல் வேண்டும் எனக் கொள்ளப்பட்டது.

ஆலோசனை வழங்கும் உளவியலாளர் (Counselling Psychologist) உதவுகின்ற நிபுணர் என்ற வகையில் கல்வி - தொழில்சார் பிரச்சினைகள், விரைவாக மாறிச் செல்லும் சூழல் தொடர்பான தனிப்பட்ட பிரச்சினைகள், சுற்றாடல் பிரச்சினைகள், நடத்தைசார் பிரச்சினைகள், மனவெழுச்சிசார் பிரச்சினைகள் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். சிகிச்சை உளவியலாளர்கள் (Clinical Psychologist) நோயாளரின் நோயியல் தொடர்பான மனவெழுச்சிப் பிரச்சினைகளைக் கண்டறிவதில் கவனம் செலுத்துகிறார்கள். ஆனால் ஆலோசனைச் சேவையிலுள்ளவர்கள் 'இங்கே இப்போதே' என்பதற்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தைத் தோண்டிப் பார்ப்பதில்லை. தேவையான தக வல்களை ஆலோசனை வழங்குபவர் கலந்துரையாடல் மூலம் நேர்முகமாகப் பெற்றுக் கொள்வதோடு சோதனை, சோதனை யல்லாத மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி துணையான தகவல்களையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

இத்தகைய செயற்பாடுகள் மூலம் அவர்கள் ஆலோசனை நாடி தன்னைப்பற்றியும், தன் பிரச்சினைகள் பற்றியும் விளங்கிக் கொள்வதற்கு உதவியளிக்கிறார்கள். ஆலோசனை வழங்குபவரும் ஆலோசனை நாடியும் பிரச்சினைகளைப் பொறுத்தவரை ஒருமித்துச் செயற்படுகிறார்கள்.

ஆலோசனை வழங்கல் என்பது ஒரு தொழில்சார் நிபு ணத்துவ சேவை. ஒரு தனிநபர் கூட வேறுபட்ட அமைப்புக்க ளில் ஆலோசகராகப் பணியாற்ற முடியும். அதாவது, மாணவர் ஆலோசனை, கல்வி வழிகாட்டல், தொழில் வழிகாட்டல், தொழிலாளர் ஆலோசனை வழங்கல், திருமண ஆலோசனை வழங்கல், குடும்ப ஆலோசனை வழங்கல் போன்றன. எனினும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பின்வருவோர்க்கே ஆலோசனைச் சேவை மிகப் பொருத்தமெனக் கொள்ளப்படு கின்றது. அவர்கள் ஆசிரியர்கள், பொலிஸ் உத்தியோகத்தர், சிறைச்சாலை அதிகாரிகள், வைத்தியத் தொழில் சார்ந்தவர்கள் ஆகியோராவர். அதாவது இந்த சேவை பிரதானமாக மனித நன்னடத்தைக்கு உதவும் மக்கள்மைய (People Centred) தொழில் சார்ந்தோருக்கே மிகப் பொருத்தமாகும்.

பென்ஸில்வேனியா பல்கலைக்கழக ஆலோசனை வழங்கல் துறைப் பேராசிரியர் எட்வின் எல்.ஹெர் என்பவரின் கூற்றுப்படி, 'ஆலோசனை வழங்கல் என்பது இரண்டு அல்லது அதிகமான நபர்களிடையே செயற்பாடு மிக்கதும் நோக்கமு டையதுமான ஒரு பணி. இதில் பின்பற்றப்படும் நடை முறைகள் ஆலோசனை நாடியின் தேவைகளின் தன்மையைப் பொறுத்து வேறு படுகின்றது. எனினும் ஆலோசனை நாடியால் மேற்கொள்ளப்படும் சுய தீர்மானத்தின் மீதும் செயற்பாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதும் கவனத்தைச் செலுத்துகின்றதும் எப்போதும் ஆலோசகர் - ஆலோசனை நாடிக்கிடையிலான பரஸ்பர பங்குபற்றுதலைக் கொண்டுள்ளதுமான ஒரு தொழிற்பாடாகும்'

இலங்கையில் ஆலோசனை வழங்கல் சேவை முன்னோடியான திருமதி டொறதி அபேவிக்கிரம தரும் விளக்கத்தின்படி, 'ஆலோசனை வழங்கல் என்பது ஒரு தொழில்பாடு. இது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் முடிவடைந்துவிடுகின்ற ஒரு சம்பவமல்ல. ஆலோசனை வழங்குபவருக்கும் ஆலோசனை நாடிக்குமிடையே நிகழும் ஓர் இடைவினைச் செயற்பாடாகும். ஒருவர் தன்னைப்பற்றியும் தான் தொடர்புடைய சுற்றாடலைப் பற்றியும் கருத்துடைய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள சாத்தியமான செயற்பாடாகும்.'

ஆலோசனை வழங்கலில் பயனுகரிகள் (Recipients) பிரதானமாக வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க முடியாதவர்கள், சுயமாக தீர்மானம் மேற்கொள்ள முடியாதவர்கள், வாழ்க்கையில் முன்னோக்கிச் செல்ல முடியாதவர்கள், தன் சக்திக்கேற்ற அளவில் இயங்க முடியாதவர்கள் ஆவர். இவர்களுக்கு நிபுணத்துவ உதவி வழங்கப்பட வேண்டும். இவர்கள்தான் ஆலோசனை நாடிகள்.

ஆலோசனை வழங்கலின் இலக்கு (Goal) பொதுவாக ஆலோசனை நாடியின் நடத்தையில் மாற்றத்தை (Behavioral Change) ஏற்படுத்துவதாகும். அதாவது ஆலோசனை நாடி வாழுகின்ற சமுதாயத்தின் கட்டுப்பாடுகள், மட்டுப்பாடுகள் என்பவற்றுக்கு அமைவாக அவனை மேலும் ஆக்கத்திறன் மிக்கவனாகவும், வாழ்க்கையை நிறைவு செய்வனவாகவும் அவனை முன்னோக்கிச் செல்வதற்கு உதவுவதாகும். அவசியமானதும் விரும்பத்தக்கதுமான அப்படியான மாற்றம், குடும்பம், கல்விச் சூழல் - பாடசாலை, பல்கலைக்கழகம், அல்லது தொழில்நுட்ப நிறுவனம், தொழில் சூழல் போன்றவற்றில் தனிநபர்களுக்கிடையிலான தொடர்புகளிலும் ஏற்பட வேண்டும். எனவே ஆலோசனை வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பாட்டை மற்றொருவகையாக நோக்கினால் ஆலோசனை வழங்குபவனைப் பொறுத்தவரை அது உதவும் தொழிற்பாடாகவும், ஆலோசனை நாடியைப் பொறுத்தவரை ஒரு கற்றல் தொழிற்பாடாகவும் இருக்கின்றது.

இன்று வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் எண்ணக்கரு நன்கு வளர்ச்சியடைந்து ஓர் அபிவிருத்திச் செயன்முறையாகவும், தனியாள் விருத்திச் செயற்பாடாகவும், ஓர் உளவியற் கல்வியாகவும் முதன்மை பெற்று விளங்குகின்றது. விசேடமாக கல்வித்துறையில் இதன் அத்தியாவசியம் உணரப்பட்டுள்ளது. இன்றைய சமுதாய அமைப்பில் பெற்றார் தம் பிள்ளையின் எதிர்காலம் பற்றியோ, அவனிடம் காணப்படும் அசாதாரண நடத்தை பற்றியோ ஆலோசனை கூறவோ வழிகாட்டவோ சந்தர்ப்பம் குறைந்தவராகவே காணப்படுகின்றனர். வாழ்க்கை நெருக்கடி, இயந்திரமயப்போக்கு, சமூகத்தில் புதிய நடிபங்குகள் (Roles) என்பன வீட்டுச் சூழல் பற்றியோ, பிள்ளைகளின் எதிர்காலம் பற்றியோ சிந்திப்பதற்கு அவர்களுக்கு நேரம் தருவதில்லை. பிள்ளைகளைப் பொறுத்தவரை தாய் - தந்தையிடம் பெறமுடியாத ஆலோசனையையும் வழிகாட்டலையும் வேறு எங்கேயோ பெறுவதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இந்த வெற்றிடத்தை பாடசாலை நிறைவு செய்வதற்கு கடமைப்பட்டுள்ளது.

வழிகாட்டலுக்கும் ஆலோசனை வழங்கலுக்கும் பொருத்தமான இடம் கல்விக் கூடங்களேயாகும். ஆசிரியர்களின் பணி கற்பித்தல் மட்டுமல்ல. உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிப்படுத்துவது மட்டுமல்ல, நல்ல மனப்பாங்குகளை உருவாக்குவதும் நடத்தையில் விரும்பத்தகு மாற்றங்களை ஏற்படுத்துவதுமாகும். இந்த வகையில் கல்வியையும், ஆலோசனை - வழிகாட்டலையும் பிரிக்க முடியாது. ஆசிரியரின் உரிய பணிகளுள் ஆலோசனை - வழிகாட்டல் இணைந்துள்ளது. அவர்கள் பிள்ளைக்கும் பெற்றோர்க்கும் சமுதாயத்துக்குமிடையே பாலமாக இருக்கிறார்கள். எனவே மாணவப் பருவத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழும் பல்வேறுபட்ட கோளாறுகளையும், அசாதாரண நடத்தைகளையும், மாணவர் கொண்டுள்ள தவறான எண்ணக் கருக்களையும், எதிர்காலம் பற்றிய பிழையான தொழில் எதிர் பார்ப்புக்களையும், கற்றலில் பின்னிற்றலையும், வெளிப்ப டுத்த முடியாதவாறு மறைத்து வைத்துள்ள உடற்குறைபாடு களையும் மனவெழுச்சிச் சிக்கல்களையும், பிள்ளையிடம் காணப்படும் அதீத ஆற்றல்களையும் இனங் கண்டு அவர்க ளுக்கு ஏற்ற வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்கப்படுவது மிக அவசியமாகும். இப்பருவத்தில் பொருத்தமான ஆலோச னை வழங்கல் சேவை மூலம் ஒரு பிள்ளை பெறும் தனியாள் அபிவிருத்தியினூடாக முழுச்சமுதாயமும் அபிவிருத்தியடை கின்றது.

அத்தகைய கைங்கரியத்தில் ஈடுபடும் ஆசிரியர், கல்வி வழிகாட்டல் ஆலோசனைச் சேவை துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி பற்றியும், அவற்றில் பின்பற்றப்படும் கோட்பாடு கள் பற்றியும், அணுகுமுறைகள் பற்றியும், செயற்பாட்டு நுட்பங்கள் பற்றியும் தெளிவான அறிவும் பயிற்சியும் பெற்றி ருத்தல் இன்றியமையாததாகும். மனித நடத்தையோடு தொடர்புடைய ஒரு விஞ்ஞானக் கற்கையாக இருப்பதால் இத்துறையில் ஈடுபடும் ஒருவர் தன்னிச்சையாக ஆலோசனை வழங்குவதால் ஏற்படும் விபரீதங்களைத் தவிர்க்க இத்துறையிலான பயிற்சியும் அறிவும் அவசியமென ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஒரு தனியாளின் பிரச்சினை என்பது சிக்கல் வாய்ந்தது. அது கல்வி, உளவியல், குடும்பம், பாலி யல், தொழில் என்பவற்றுடன் தொடர்புபட்டிருக்கலாம். எனவேதான் உளவியல், உடலியல், சமூகவியல், உளமருத்துவ வியல் சார்ந்த அடிப்படை அறிவும் பயிற்சியும் ஆலோசகருக்கு வழங்கப்படுகிறது.

இந்த வகையில் பிரச்சினைக்குட்பட்ட - ஆலோசனை நாடி ஒருவர் தானே தன் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளவும், தன்னம்பிக்கையை கட்டியெழுப்பவும், வாழ்க்கைக்கு ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தத்தைப் புரிந்து கொள்ளவும், சமூகத்தில் தமக்குள்ள சுதந்திரத்தின் மட்டுப்பாடுகளை விளங்கிக் கொள்ளவும் மறைந்து கிடக்கும் உள்ளாற்றலைத் துலங்கச் செய்யவும் தமது சக்தியைப் புரிந்து கொள்ளவும், பிரச்சினைக்குரிய தீர்வை தாமே தேர்ந்தெடுக்கவும் தீர்மானங்களை தாமே மேற்கொள்ளவும் அவருக்கு உதவிசெய்வதே ஆலோசகரின் பணியாகும்.

இலங்கையில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை குறுகியகால வரலாற்றைக் கொண்டது. 1960ம் ஆண்டில் கல்வியமைச்சு மேற்கொண்ட வழிகாட்டல் சேவையுடன் இது ஆரம்பிக்கப்பட்டது எனலாம். கல்வியமைச்சும் தேசிய இளைஞர் சேவை மன்றமும் இணைந்த 'யொவுன்மித்துரோ' ஆலோசனை வழங்கல் சேவை நாடளாவிய ரீதியில் செயல்படுத்தப்படுகின்றது. இதன் நிலையங்கள் கல்வி ஆலோசனையுடன் குடும்ப ஆலோசனையும் வழங்குகிறது. 1981ஆம் ஆண்டில் கல்வி வெள்ளையறிக்கையில் (பந்திகள் 34-38) வழிகாட்டல் ஆலோசனை சேவை பற்றிய பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன. 1986ல் கல்வியமைச்சு நேரடியாக சில குறிப்பிட்ட பிரதேசங்களில் பாடசாலை ஆலோசனைச் சேவையை ஆரம்பித்தது. ஆனால் இச் சேவை போதிய அளவு விஸ்தரிக்கப்படவில்லை. 1990 இல் இளைஞர் அமைதியின்மைக்கான சனாதிபதி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கையில் 'சிறப்பாக வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவது தொடர்பாக பாடசாலைகளிலேயே ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் கிடையாமை' பற்றிய பொது மக்களின் முறைப்பாடு குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 'பிள்ளைகளுக்கு அறிவுரை வழங்குவோர் வருடாந்தம் வாழ்க்கைத் தொழில் கண்காட்சி ஒழுங்கு செய்வதன் மூலம் கிடைக்கத்தக்க தொழில் வாய்ப்புக்கள், தமக்குப் பொருத்தமான தொழில்வாய்ப்பு என்பதனை மாணவர் அறிந்து கொள்ளச் செய்யலாம்' எனவும் இவ்வறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. 1992 ஆம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையிலும் கல்வி வழிகாட்டல், தொழில் வழிகாட்டல், சீலமேம்பாடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் உள உடலாரோக்கியம், அறவொழுக்கம் பற்றிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

கல்வி வழிகாட்டல், ஆலோசனை வழங்கல் துறையில் மக்களின் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் கல்வி யமைச்சின் வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் பிரிவு, சுகா தார அமைச்சு, மதுபான போதைப் பொருள் தகவல் நிலையம் போன்றனவும் மற்றும் சமய, சமூகசேவை தொண்டர் தாப னங்களும் விசேட செயற்றிட்டங்களை நடை முறைப்படுத்தி வருகின்றன. கல்வியமைச்சின் வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் பிரிவு மாகாணக் கல்வியமைச்சுக்க ளினூடாக ஆசிரி யர்க்கு கருத்தரங்குகளையும், குறுகிய காலப் பயிற்சிகளையும் வழங்குகின்றது. கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் என்பவற்றில் ஆலோசனை சேவை தொடர்பான பாடநெறிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. தேசிய கல்வி நிறுவகம் நடாத்தும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நெறியில் இதனை ஒரு கட்டாய பாடமாக ஏற்பாடு செய்துள்ளது.

பாடசாலை கல்வி வழிகாட்டல் ஆலோசனைச் சேவை சகல கல்வி நிறுவனங்களிலும், ஆரம்ப இடைநிலை மட்டங்க ளிலும் நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். குறிப்பாக இடைநிலைப் பாடசாலைகளில் இச்சேவை ஒழுங்கமைக்கப்ப டுவது மிக மிக அவசியமாகும். சேவை நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது அதிபர், ஆசிரியர், பெற்றார், நலன்விரும்பிகள், மாணவர்கள் சகல தரப்பினரதும் ஒத்து ழைப்பு பெறப்படுவது அவசியமாகும். அத்தோடு இதனை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வளங்களும், வாய்ப் புக்களும், ஆதரவும் வழங்கப்படுமானால் பல்வேறு பிரச்சி னைகளால் சிக்குண்டு சீரழியும் ஆயிரக்கணக்கான இளைஞர் களை நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மைதரும் நற்பிர சைகளாக வும், தலைவர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், நிபுணர்களா கவும் உருவாக்க முடியும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9
# பாடசாலை நூலகங்கள்

தமிழில் நூலகம் எனும் சொல் ஆங்கிலச் சொல்லாகிய Library என்பதன் மொழிபெயர்ப்பாகும். இச்சொல் லத்தீன் மொழியில் Libraria எனும் சொல்லிலிருந்து உருவானது. புத்தகங்கள், மற்றும் எழுத்தாவணங்கள் ஒழுங்கான முறையில் திரட்டி வைக்கப்பட்டுள்ள ஓரிடத்தைக் குறிக்க இச்சொல் பயன்பட்டது. நூலகம் பற்றிய எண்ணக்கரு பழமை வாய்ந்தது. மக்கள் எழுத வாசிக்கத் தெரிந்த காலத்திலிருந்து நூலகங்களை அமைத்துப் பயன் படுத்தி வந்துள்ளனர். கி.மு. 4000ம் ஆண்டளவில் பாபிலோனியர் அசைறியர் ஆகியோர் Cunciform எனப்படும் எழுத்து முறையைப் பயன்படுத்திய களிமண் தட்டுக்களைக் கொண்ட பிரமாண்டமான நூலகத்தை அமைத்திருந்தனர் என்பதை புதைபொருள் ஆராய்ச்சி வாயிலாக அறிய முடிகிறது. உரோமர்கள் கூட தோற்காகிதங்களிலான நூலகங்களை அமைத்திருந்தனர். சீனர் கி.பி. 105 அளவில் காகிதத்தைக் கண்டுபிடித்த பின்பும் கி.பி. 1440ல் குட்டன் பார்க் அச்சடிக்கும் முறையைக் கண்டுபிடித்த பின்னரும்தான் புத்தகங்களின் பெருக்கத்துடன் நூலகங்களும் அதிகரிக்கத் தொடங்கின.

நூலகம் என்பது ஒரு சுய கற்றல் சாதனமாகும். இது இடையறாது மக்களுக்குக் கல்வியூட்டுகின்றது. அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமமான கல்விக் கூடங்களில் ஆசிரியர்கள், மாணவர்க்கு குறிப்பிட்ட பருவம்வரை கல்வியூட்டுகிறார்கள். ஆனால் ஒரு நூலகம் ஒருவர் தாமே சுயமாகக் கற்றுக் கொள்ளவும் குறிப்பிட்ட காலவரையறையின்றி எக்காலமும் கல்வியைப் பெற்றுக்கொள்ளவும் துணை புரிகின்றது. உண்மையில் சாந்துணையுங்கல்வி, வாணாள் முழுவதும் கல்வி, மேற்றொடர் கல்வி ஆகிய எண்ணக் கருக்களுக்கு உயிரையும் உணர்வையுங் கொடுப்பது நூலகம் எனில் அது மிகையன்று. பள்ளிக் காலத்தில் பிள்ளைகள் தமது தலைமீது சுமத்தப்பட்டிருக்கும் எதிர்காலப் பிரச்சினைகள் குறித்து பொறுப்புணர்ச்சியற்றவர்களாகவும், வாழ்க்கைப் பிரச்சினைகளை அணுகாதவர்களாகவும் இருக்கின்றனர். இதனாற்றான் சான்றோர், ஒருவனின் உண்மையான கல்வி பிற்காலத்தில் தொடர்ந்து செல்வதாகும் என்றனர். எனவே நூலகம் சமுதாயத்துக்கு கல்வி வழங்கும் ஒரு முக்கிய நிறுவனமாக விளங்குகின்றது. ஆண்-பெண், இருப்பவர்-இல்லாதவர், இளைஞர்-முதியோர், நல்லவர்-கெட்டவர், வெள்ளையர்-கறுப்பர், சாதாரணமானவர்-அசாதாரணமானவர் என்ற எத்தகைய வேறுபாடுமின்றி சகலருக்கும் இது கல்வியூட்டுகிறது. 'வாசிப்பு ஒருவனை முழு மனிதனாக்கும்' என்பது ஆன்றோர் வாக்கு. அது அவனது முழு ஆளுமையிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இத்தாக்கம் அவனது நண்பர், உறவினர், பாடசாலை, சமுதாயம் மற்றும் முழு வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

இன்றைய தொழில் நுட்ப (Technical) தொழில் நுணுக்க (Technological ) சமுதாயத்தில் அறிவுப் பெருக்கம் (Explosion of Knowledge ) என்பது வினாடிக் கணக்கில் வேகமாகச் செல்கிறது. இந்த வேகத்துக்கு ஏற்ப கல்வி முறைகள் - குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளின் கல்வி முறைகள் ஒன்றித்துச் செல்லாமை பொதுவான தன்மையாகும். ஆயின் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதில் நூலகங்கள் பெரும் பங்காற்ற முடியும். சாதாரண எழுத்தறிவு பெற்ற ஒருவர் கூட பல்துறை அறிவுகளைப் பெற சம வாய்ப்பினை வழங்குவதில் நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மையாக உள்ளது. இதனாலேயே இக்காலத்தில் நூலகங்களுக்கு அதிக அளவு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

ஒரு நாட்டின் அந்தஸ்து முழுமையாக சமூக, வகுப்பு, சமய, பால் வேறுபாடின்றி நாட்டு மக்களின் சாதனைகளிலும், பொது நலனிலுமே தங்கியுள்ளது. மக்களின் நலன், சாதனைகள் என்பன அவர்களின் கல்வி, வாழ்க்கைமுறை, சிந்தனாமுறை என்பவற்றில் தங்கியுள்ளன. மக்களின் வாழ்க்கை முறையிலும், சிந்தனையிலும் சிறந்த அபிவிருத்திகளை ஏற்படுத்துவதில் பாடசாலை நூலக சேவையின் தொழிற்பாட்டை விட வேறு எந்த சிறந்த வழியும் இருக்க முடியாது என அறிஞர் கருதுகின்றனர். எழுத்தறிவின்மைக்கு (Illiteracy) எதிராக நடைபெறும் போராட்டத்தின் ஒரு பகுதியாக நூலகங்கள் பெரும்பங்கு கொள்கின்றன.

பள்ளிக்கூட நூலகம் என்பது, பாடவிதானத்துடன் இணைந்ததாக அதன் முக்கியத்துவமும், பயன்பாடும் வலியுறுத்தப்பட்டுள்ளது. நூலகப் பழக்கத்தை ஏற்படுத்துதல், அகல வாசிப்பு (Extensive Reading) ஆழ வாசிப்பு (Intensive Reading) என்பவற்றில் ஆர்வத்தை ஊட்டுதல், பொழுதுபோக்கு வாசிப்பைத் தூண்டல் ஆகியவற்றில் பள்ளிக் கூட நூலகங்கள் மாணவர்க்குத் துணைபுரிகின்றன. இன்று பாடசாலை நேரசூசியிலும் நூலகப் பயன்பாட்டுக்காகப் பாடவேளைகள் ஒதுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பள்ளிக்கூட நூலகங்கள் பொது நூலகங்களைப் பார்க்கிலும் சற்று வேறுபட்டன. அவை பொறுப்பு மிக்க பங்கினை ஆற்றுகின்றன. பள்ளி நூலகங்களை கற்றல் வள நிலையங்கள் (Resource Centre for Learning) என்று கூட அழைக்கலாம். நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றுடன் நூல்களல்லாத சாதனங்களையும் இது கொண்டிருக்கலாம். மாணவரின் கற்றலுக்குப் பயன்படும் சாதனங்களைக் கொண்டிருப்பது இதன் விசேட பண்பாகும். கட்புல (Visual) சாதனங்களான சலனப்படங்கள் (Films) படப் பெருக்கிக் கருவிகள் (Over Head Projectors) படச் சுருள்கள் (Film



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

strips) படச் சட்டங்கள் (Slides) படங்கள் (Pictures) தேசப் படங்கள் (Maps) சுவரொட்டிகள் (Posters) அட்டவணைகள் (Charts) வரைபடங்கள் (Graphs) சிறு பிரசுரங்கள் (Booklets) ஆகியவற்றுடன் கற்பித்தலுக்குதவும் மாதிரிப் பொருட்கள் (Models) சாத்தியமான உண்மைப் பொருட்கள், போன்றவற்றையும் நூலகங்கள்/ வள நிலையங்கள் கொண்டிருக்கலாம். இதே போன்று செவிப்புல (Audio) சாதனங்களான ஒலிப்பதிவு கருவியும், ஒலிப்பதிவு நாடாக்களும், வானொலி, தொலைக் காட்சிக் கருவி என்பவற்றையும் கொண்டிருக்கலாம். இக்காலத்தில் கல்விச் சேவை நிகழ்ச்சிகள் மூலம் பாடசாலை இவற்றின் பயன்பாடு நன்கு உணரப்படுகின்றது. மின்சார தொழில் நுணுக்கத்துடன் இணைந்ததான இவற்றின் பயன் பாட்டைப் பொறுத்தவரையில் இன்று சாதாரண வீடுகள் கூட வள நிலையங்களாக மாறியுள்ளன. நவீன தொழில் நுட்ப அறிவினைப் பெற்றிராத முதியவர்கள் மட்டுமன்றி சரியாக வாசிக்கத் தெரிந்த தெரியாத சிறுவர் கூட கெஸட் ரேடியோ, டி.வி. போன்றவைகளை இயக்கவும் நிறுத்தவும் தெரிந்துள்ளார்கள். நூல்களைப் புரட்டி வாசித்து அறிந்து கொள்வதை விடவும் இவை இவர்களுக்கு இலகுவாக அமைந்துள்ளன. எனவே கல்வித் தொழில் நுணுக்கவியல் (Educational Technology) இன்று கற்றல் - கற்பித்தல் தொழிற்பாட்டில் புதுமைகளைத் (Innovations) தோற்றுவித்துள்ளது.

பள்ளிக்கூட நூலகங்களைப் பயன்படுத்துவதில் ஆசிரியர்கள் நல்ல வழிகாட்டலை வழங்க வேண்டும். இப்பணி நன்கு திட்டமிட்டுச் செய்யப்பட வேண்டும். பரீட்சையை வலியுறுத்தும் இடைநிலை, கல்லூரி நிலைப் பாடத் திட்டங்களைப் பொறுத்தவரையில் இக்காலை மாணவர்கள் ஆசிரியர்களின் குறிப்புக்களிலேயே நம்பிக்கை வைத்துள்ளனர். இந்நிலை அவர்களின் அறிவு வளர்ச்சியை மட்டுப்படுத்தி விடுகிறது. எனவே மாணவர்கள் அறிவைத் தேடிக் கற்கக் கூடிய விதத்தில் பயிற்சியையும் வழிகாட்டலையும் அவர்களுக்கு வழங்க வேண்டும். வகுப்பறைக் கற்பித்தலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது துணை வாசிப்புக்களையிட்டு ஆசிரியர், மாணவர்களுக்குப் பொறுப்புக்களை வழங்க வேண்டும். உதாரணமாக பாரதியார் பாடலைக் கற்கையில், பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை வாசிப்பதற்கு அறிவுறுத்தலாம். மின்குமிழ் பற்றிக் கற்பிக்கையில் அதனைக் கண்டுபிடித்த விஞ்ஞானி பற்றி வாசிக்கத் தூண்டலாம். இலங்கையின் நெல் உற்பத்தி பற்றிக் கற்பிக்கையில் ஏனைய உற்பத்திப் பயிர்களைப் பற்றி வாசித்தறியத் தூண்டலாம். மேலும் ஒப்படைகள் வழங்கும் போது அதற்குரிய துணை வாசிப்புக்கள், பின்னணிக் குறிப்புக்கள் ஆகிய வழிகாட்டுக் குறிப்புக்களை வழங்க வேண்டும். இதன் மூலம் அவர்கள் தேடிக் கற்பதற்கும், ஆராய்ந்து கற்பதற்கும், கண்டுபிடித்தலில் இன்பங்காண்பதற்கும் சந்தர்ப்பம் ஏற்படும். மேலும் சமாந்தர வாசிப்புக்கும் (Parallel Reading) இடமளிக்க வேண்டும். சில வேளை வகுப்பில் காணப்படும் இத்திறன் மாணவரின் அறிவுக்கும், ஆற்றலுக்கும் ஈடுகொடுக்கும் விதத்தில் மேலதிக வேலை, பின்தொடர் வேலை (Follow up work) என்பவற்றைக் கருத்திற் கொண்டும் நூலகத்தைப் பயன்படுத்தலாம்.

இன்று கல்லூரிகள் இடைநிலைப் பாடசாலைகளைப் பொறுத்தவரை நூலகங்கள் முழுமையானதாகவோ, சில குறைபாடுகளுடனோ இயங்கி வருகின்றன. இவற்றில் நூலகங்களைக் கவனிப்பதற்கென நூலகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், நூலக உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனினும் ஆரம்பப் பாடசாலைகள், கனிஷ்ட இடைநிலைப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் நூலக வாய்ப்புக்கள் அரிது. குறிப்பாக கிராமப்புற பாடசாலைகளில் இதற்கான வாய்ப் புக்கள் பற்றி சிந்திக்கபடுவதில்லை. எனவே பயிற்றப்பட்ட இளம் ஆசிரியர்கள் தாம் சேவையாற்றும் கிராமப்புறப் பாடசாலைகளில் நூலகங்களை அமைப்பதில் முன்னிற்க வேண்டும். இவ்வாறு நூலகத்தை ஆரம்பிக்கையில் அதற்குப் பொறுப்பான ஆசிரியர், நூல்களையும், தேவையான ஏனைய வளங்களையும் பெற்றுக் கொள்ளல், பயன்படுத்தல், பராமரித்தல் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களை நன்கு திட்டமிடுவதன் மூலம் இதனைச் சாத்தியமாக்கலாம். பொதுவாக இடத்தட்டுப்பாடு, ஆசிரியர் பற்றாக் குறை என்பன கிராமப்புறப் பாடசாலைகளில் காணப்படும் குறைபாடுகளாகும். இடத்தட்டுப்பாடு நிலவும் பாடசாலைகளில் நூலகத்துக்கென அடைக்கப்பட்ட ஓர் அறை தான் வேண்டும் என்பதில்லை. அதிபர் அறையில் அல்லது வகுப்பறையின் ஒரு மருங்கில் அல்லது மூலையில் கூட இதனை அமைக்கலாம். மேலும் முழுநேர ஆசிரியர் ஒருவர் இதனைக் கண்காணிக்க வேண்டுமென்பதில்லை. பாட வேளையில் கூட இதனைக் கவனிக்க முடியும். நூல்களையும் வளங்களையும் திரட்டும்போது சூழவுள்ள சமுதாயத்தின் ஒத்துழைப்பைப் பெறலாம். பெற்றார், பழைய மாணவர், நலன்விரும்பிகள், படித்தவர்கள், உத்தியோகத்தர் ஆகியோரது துணையை நாடும்போது சில வேளைகளில் நூலகத்துக்கெனத் தனியான அறையைக் கூடப் பெற்றுக் கொள்ள வாய்ப்புள்ளது. தேசிய நூலக சேவைச் சபை பாடசாலை நூலகங்களுக்கு நூல்களை இலவசமாக வழங்குகின்றது. இது தவிர பிரித்தானிய கவுன்ஸில், ஆசியா பவுன்டேசன் தாபனம் என்பன நன்கொடையாக நூலகங்களுக்கு நூல்களை வழங்கி வரு கின்றன. கொழும்பில் அலுவலகங்களைக் கொண்டுள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் தத்தம் நாடுகள் பற்றிய நூல்கள், விவரணங்கள், சஞ்சிகைகள், படங்கள் என்பவற்றை வழங்குகின்றன. இத்தகைய அன்பளிப்புக்களுடன் பல்வேறு காட்சிப் பொருட்கள், சித்திர ஆசிரியர் உதவியுடன் சிறுவர் சித்திரக் காட்சிகள், மிருகங்கள், பறவைகள், கட்டிடங்கள் போன்றவற்றின் மாதிரிகள், பிரதேசத்தில் கிடைக்கத்தக்க அருங்கலைப் பொருட்கள் என்பவற்றையும் திரட்டிக் கொள்வதன் மூலம் சிறந்த நூலகம் - கற்றல் வளநிலையமொன்றை உருவாக்க முடியும். இதற்கென ஆர்வமுள்ள இளம் ஆசிரியர்களை தேர்ந்து நியமிப்பது அதிபரின் பொறுப்பாகும்.

மேலும் இத்தகைய நூலகம் ஒன்றை அமைக்கும் போது அண்மையிலுள்ள பொது நூலகம் ஒன்றின் நூலகர் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகவியல் பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வது நல்லது. நூல்களையும், வளங்களையும் திரட்டும்போது குறிப்பிட்ட பள்ளி மாணவரின் தேவை, கல்வி நிலை, மொழி நிலை, ஆர்வம் என்பவற்றுக்குப் பொருத்தமானவையாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக ஆரம்பப் பள்ளி சிறுவர்க்கு சிறுவர் நூல்களாகவும், படங்களுடனான கதை நூல்களாகவும், அறிவுரைக் கதை நூல்களாகவும், பரபரப்பூட்டும் துணிகரக் கதை நூல்களாகவும் (Adventure Stories) விவரணக் கட்டுரைகள், குழந்தைப் பாடல்கள், அம்புலிமாமா போன்ற சிறுவர் சஞ்சிகைகளாகவும் இருத்தல் நன்று. நூலகத்திற்கெனத் தனியான அறை அல்லது கட்டிடம் கிடைக்கும்போது இரவல் வழங்கும் பிரிவு (Lending Section), உசாத்துணைப்பிரிவு ( Reference Section) சஞ்சிகை, பத்திரிகைப் பிரிவு (Periodical/Reading Section) என்பவற்றை அமைத்துக் கொள்ளலாம். இவ்வாறு ஒழுங்கு படுத்துகையில் அட்டை ஒழுங்குமுறை (Card Catalogue System) எண்ணிடல் முறை (Decimal System) ஆகியவற்றையும் நூலகர் ஒருவரின் உதவியுடன் நடைமுறைப் படுத்த முடியும்.

நூலகம் மாணவரின் கல்வியுடன் தொடர்புபட்டிருப்பது முக்கியமானது. அதாவது அவர்களின் கற்றல் நடவடிக்கைகளுடன் நூலகம் இரண்டறப் பிணைந்திருக்க வேண்டும். ஏலவே குறிப்பிடப்பட்டது போல பாடவிதானச் செயற்பாடுகளுடன் நூலகத்தை ஈடுபடுத்துவதுடன், நூலகப் பழக்கத்தை முன்னேற்றுவதற்கும், பொழுது போக்கு வாசிப்பைத் தூண்டுவதற்கும் தகவல்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் ஆர்வத்தை வளர்ப்பதற்கும் ஏற்ற வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். உதாரணமாக பொது அறிவுப் போட்டி, கட்டுரைப் போட்டி போன்றவற்றை நடாத்துவதால் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்த முனைவர். மாணவர்களை நூலகத்துடன் ஈடுபடுத்துவதற்கு மற்றோர் சிறந்த உபாயம், கையெழுத்துச் சஞ்சிகைகளை வெளியிடுவதாகும். மாணவர்களின் பல்வேறு ஆக்கங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கும் சஞ்சிகையில் இடமளிப்பதால் இது மாணவரின் கலை இலக்கியத்துறை ஆர்வத்தையும் வளர்ப்பதாக அமையும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, அதிபர், ஆசிரியர்கள் நூலகத்தைப் பயன்படுத்துவதில் அல்லது அதனை வளர்ப்பதில் காட்டும் அக்கறையிலும் முன்மாதிரியிலுமே மாணவர்களின் ஈடுபாடு பயனுறுதி வாய்ந்ததாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. அதேபோன்று நூலகங்கள் நன்கு பராமரிக்கப்படும் போதுதான் மாணவரின் அறிவு விரிவடைந்து செல்வதற்குரிய வாய்ப்புக்களும் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10
# பாடசாலைக் கொத்தணி முறை

இந்த நாட்டின் கல்வி வரலாற்றில் இலவசக் கல்வி, அன்னை மொழிப் போதனை, மத்திய கல்லூரிகள் தாபிக்கப்பட்டமை, இலவசப் பாடநூல் வினியோகம் என்றித்தகைய அம்சங்களெல்லாம் கலங்கரை விளக்கங்களாக விளங்குகின்றன. இவற்றுடன் மன்றொரு முக்கிய மாற்றமாகக் கொத்தணி முறையினைக் கொள்ள முடியும்.

பாடசாலைக் கொத்தணி அமைப்பு முறை 1979 இன் கல்வி அறிக்கைக் குழுவின் சிபார்சில் முன்மொழியப்பட்டு 1981 ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தங்களுக்கான ஆலோசனைகளுள் (கல்வி வெள்ளையறிக்கை) ஒன்றாக முன்வைக்கப்பட்ட ஒரு புதிய எண்ணக்கருவாகும். இது முன்னோடித் திட்டமாக குறிப்பிட்ட சில மாவட்டங்களில் 20 கொத்தணிகளாக வெள்ளோட்டம் விடப்பட்டதுடன் இலங்கையில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இலங்கைக்கு முற்றிலும் புதிய திட்டமாக இது அமைந்தமையால் சூழ்நிலைக்கு ஏற்ப இதன் பொருத்தப்பாடும் செயற்பாடும் 1983 ஜூன் மாதத்துக்கும் செப்டம்பர் மாதத்துக்கும் இடையில் ஒரு மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டது. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தணி முறையின் வடிவமைப்பு சில புதிய நெகிழ்வு களைப் பெற்றுச் செயல் படத் தொடங்கியது. 1985 இல் அது வரையிலுள்ள அனுபவங்களை வழிகாட்டல்களாகக் கொண்டு மேலும் 37 கொத்தணிகளை ஆரம்பித்துச் செயல்ப டுத்தப் பட்டது. 1986 இல் மேலும் 146 கொத்தணிகள் ஆரம்பிக் கப்பட்டன. 1987 இல் இது மேலும் விரி வாக்கப்பட்டது. 1988ல் இலங்கையின் சகல மாவட்டங்க விலும் ஒற்றை நிலை, தனி யார் பாடசாலைகளைத் தவிர சகல பாடசாலைகளும் கொத் தணி அமைப்புக்குள் கொண்டு வரப்படல் வேண்டும் என்பது கல்வி அமைச்சின் இலட்சி யமாகும். 1981 - 1985 க்குள் கொத் தணி சார்பாகச் செய்யப்பட்ட பரீட்சார்த்த முயற்சிகள், மதிப் பீடுகள், திருத்தங்கள், ஆளணி பயிற்சிகள் போன்றவை அப் போது கொத்தணிகள் சீராக இயங்கப் போதிய வழிகாட்ட ல்க ளைத் தந்துள்ளதாகவும் கொத்தணிமுறை ஒரு பக்குவ நிலை யையும் நிலைப்பாட்டையும் அடைந்துள்ளதாகவும் கொள்ளப் பட்டது. கொத்தணி அமைப்பு இந்த நாட்டில் தேசிய கல்வி முறை ஆரம்பித்து சுமார் அரை நூற்றாண்டினை அண்மி த்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் ஏன் கொண்டு வரப்பட்டது என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது.

1981ல் வெளியிடப்பட்ட கல்வி வெள்ளை அறிக்கை முன்னுரை அதுவரை கல்வி அமைப்பில் நிலவிய பலவீனங்க ளைச் சுட்டிக் காட்டியுள்ளது.

01. அரசாங்கப் பாடசாலைகளிடையே கிடைக்கும் வரைய றுக்கப்பட்ட வளங்களைப் பெற்றுக் கொள்வதில் காணப் பட்ட போட்டியும் ஒரு சில பெரிய செல்வம் மிக்க பாடசா லைகள் பெரிய செல்வம் மிக்க பாடசாலைகளாக வளரும் அதேவேளை சிறிய வறிய பாடசாலைகள் மென்மேலும் வறுமைப்படுவனவாய் ஆகின்றமை.

02. பரீட்சைகளுக்கு முதன்மையளித்து அவை வலியுறுத் தப் படுவதால் ஏனைய கல்வி அம்சங்கள் புறக்கணிக்கப்படு கின்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. தேசிய ரீதியில் பரீட்சிக்கப்படும் பாட விடயங்க ளிலேயே மிகையான அழுத்தமும், உள்ளூர் நிலைமை களுக்கேற்ப செயன்முறை முக்கியத்துவமுடைய பாடங்கள் புறக்கணிக்கப்படுகின்றமையும்

04. ஆசிரிய சேவையின் சீரற்ற நிலை

இந்தப் பலவீனங்களின் அடிப்படையிலேயே சீர்திருத்தங்க ளுக்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. பாடசாலை அமைப்பு முறையில் (பொதுக் கல்வி) மேற்கொள்ளப்பட்ட பல முன்மொழிவுகளில் ஒன்றாக கொத்தணிமுறை அமைந் துள்ளது. கொத்தணிமுறை பொதுக் கல்வியில் காணப்படும் பல குறைபாடுகளுக்குத் தீர்வாக அமையுமென வெள்ளைய றிக்கையைத் தயாரித்தவர்கள் நம்பினார்கள்.

01. ஒரே பாடவிதானத்தைப் பின்பற்றும் பாடசாலைக ளிடையே ஒப்புரவின்மை காணப்படுகின்றது. இது மாவட்டங்களுக்கிடையிலும் ஒரே மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கிடையிலும் காணப்படுகின்றது. போதனை யின் தரத்திலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

02. ஒவ்வொரு பாடசாலையும் தனித்தனி அலகுகளாக அமைந்து அரசின் மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்களைத் தாம் மட்டுமே சுகித்துக் கொள்ள வேண்டும் என்ற போட்டி நிலைக்குத் தூண்டப்படுகின்றன.

**எனவே கல்வி வாய்ப்புக்களில் நிலவும் சமமின்மையைக் குறைக்கவும் தகைமை கூடிய ஆளணிமூலம் பாடசாலைகள் சிறந்த முகாமைத்துவத்தைப் பெற்றுக் கொள்ளவும், சிறிய பெரிய பாடசாலைகள் ஒரே குழுவில் இடம்பெறச் செய்வதன் மூலம் அக்குழுவின் (கொத்தணி) திரண்ட மூலவளங்களும் சேவைகளும் அக்குழுவில் அங்கத்துவம் பெறும் சகல பாடசாலைகளுக்கும் - பிள்ளைகளுக்கும் கிடைக்கச் செய்யவும், கல்விக் கூடங்களிடையே அனாவசியமான - ஆரோக்கியமற்ற போட்டி நிலையைத் தவிர்த்துக் கொள்ளவும் வகை செய்யுமாறு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக் கொத்தணிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. எனவே கொத்தணி முறை இரு முக்கிய பணிகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

(அ) கிடைக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி கல்வியைத் திட்டமிட்டுத் திறம்பட வழங்கும் கல்விசார் பணிகளைக் கொண்டது.

(ஆ) கல்வி நிறுவனங்கள் திறம்பட இயங்கும் வகையில் முகாமைத்துவம் செய்யும் நிர்வாகம்சார் பணியைக் கொண்டது.

பாடசாலை முறைமையின் அபிவிருத்தியையும், அமைப்பு முறையையும் திட்டமிட்டு நிர்வகிப்பதற்குரிய ஆகவும் சிறிய அலகாக இனிமேல் இருத்தற்பாலது பாடசாலைக் கொத்தணியாகும். அதாவது கல்வி அபிவிருத்திக்கான இறுதி அலகு கொத்தணி. நாட்டில் கல்வி அபிவிருத்திக்காக அமைச்சு மட்டத்தில் வகுக்கப்படும் திட்டங்கள் ஈற்றில் செயலுறுப் பெறும் இடம் என இதனைக் கொள்ள முடியும். கல்வி அமைச்சு - பிராந்திய மாவட்டத் திணைக்களம் - கோட்டக் கல்வி அலுவலகம் - கொத்தணி அலுவலகம் என இவ்வாறு நாட்டின் கல்வி அபிவிருத்தியை உத்தரவாதப்படுத்தும் ஒரு படியாகக் கொத்தணி விளங்குகின்றது. எனவே திட்டத்தின் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதில் கொத்தணி பெருங் பங்கு வகிக்கின்றது. இதனால்தான் அன்று கொத்தணி முறைக்கு அவ்வளவு அழுத்தமும் முதன்மையும் கொடுக்கப்பட்டு வந்தது.

கொத்தணி அமைப்பின் முக்கிய நோக்கங்களையிட்டு கல்வி அமைச்சில் கொத்தணித் திட்டத்துக்குப் பொறுப்பாக இருந்த கல்விப் பணிப்பாளர் திரு. டி.என். வீரசிங்கா பின்வருமாறு விபரித்துள்ளார்.

01. கொத்தணிக்குள் அடங்கும் பாடசாலைகளில் முறையானதும் நுணுக்கமானதுமான மேற்பார்வை, மதிப்பீடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்த செயற்பாடு என்பவற்றினூடாக தரமான கல்வி அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக.

02. பராமுகமாக விடப்பட்ட குறைவிருத்தியைக் கொண்ட கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளும் சமூக அந்தஸ்தைப் பெற்று உயர்வடையவும், கொத்தணி செயற்பாடுகளில் அவை பங்கு கொள்வதன் மூலம் தமது தரத்தை உயர்த்திக் கொள்ளவும் வசதிகளையும் சேவைகளையும் பங்கிட்டுக் கொள்ளவும்.

03. பாடசாலைகள் அதிக தகுதிவாய்ந்த ஆளணி அமைப்பொன்றினால் முகாமைப்படுத்தப்படுவதற்கேதுவாக வும் அதிபரின் முக்கிய பங்கை அங்கீகரித்து அவர்களிடையே திட்டமிடுதல், முகாமைத்துவம் மற்றும் குறிப்பிட்ட நிர்வாகப் பணிகள் போன்ற செயற்கூறுகளை வழங்குவதற்குதவுமுகமாக வும்,

04. பங்கீடுகளையும் வசதிகளையும் மீண்டும் மீண்டும் பெற்றுக் கொள்ளுதல் உபயோகித்தல் ஆகிய வீண் பிர யங்களை முடியுமானவரை குறைப்பதற்கும், தவிர்ப்பதற்கும், பாடசாலைக் கொத்தணிக்குள் கிடைக்கும் அரிதான வளங்க ளை உத்தமமான முறையில் பிரயோகிப்பதற்கு உதவுவதற்கும் என கொத்தணிகள் அமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இந்த விவரங்களைப் பொறுத்தவரையில் திட்டம் சிறந்த குறிக்கோள்களையும் செயற்பாட்டு அம்சங்களையும் கொண்டு நாட்டின் சூழ்நிலைக்கேற்ப பொருளாதார சிக்கனங்க ளையும் முக்கிய கருக்களாகக் கொண்டுள்ளது. சிறந்த முகாமைத்துவத்தின் அடிப்படையில் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்தும் நுட்பமான ஒரு திட்டமாக இது அமைந்தது.

கொத்தணி முறையில் காணப்படும் மற்றைய பிரதான அம்சங்கள் கொத்தணி மூலாதாரப் பாடசாலையும் கொத்தணி அதிபரும் ஆகும். கொத்தணியில் இயல்பாகவே நடுநாயகமாக விளங்கத்தக்கதும் அல்லது அந்நிலையினை வகித்ததற்கு வேண்டும் இயல் திறனை உடையதும் இடைநிலை வகுப்புக்க ளைக் கொண்டதுமான பெரும் பாடசாலையே மூலதாரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையாக இருக்க வேண்டும் என அரசு எதிர்பார்த்தது. சிறந்த விஞ்ஞானக் கூடம், வேளைக்களம், நூலகம், கட்புல - செவிப்புல சாதனங்களைக் கொண்ட கல்வி வசதிகள், இணைப்பாடவிதானம், விளையாட்டு, கலை, நுட்பவாய்ப்புக் கள் என்பவை அமைந்திருக்கக் கூடியதாக இந்த மூலாதாரப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என வெள்ளையறிக்கை குறிப்பிடுகின்றது. இவ்வாறு அபிவிருத்தி யடையச் செய்யும்போது இவ்வசதிகளையும் வளங்களையும் ஏனைய அங்கத்துவப் பாடசாலைகளும் உரிமையுடன் உபயோகிக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இத்தகைய திட்டத்தின் மூலம் கொத்தணியில் இடம்பெறும் சிறிய, வறிய பின்தங்கிய பாடசாலைகளும் தமக்கேயுரிய வசதிகளாகக் கருதி இவற்றைப் பயன்படுத்தி முன்னேற்றம் எய்தல் சாத்தியமே. மூலாதாரப் பாடசாலை அதிபரின் (கொத்தணி அதிபர்) திறமையான நிர்வாக முகாமைத்துவம் மூலம் இது சாத்தியமாகலாம்.

கொத்தணி அதிபரின் பணி இந்த வகையில் அச்சாணி போன்று அமைந்துள்ளது. அங்கத்துவப் பாடசாலைகளின் கல்வி மேற்பார்வை, ஆசிரியரை ஆற்றுப்படுத்தல், பாடவிதான இணைப்பாடவிதான செயற்பாடுகள், வசதிகளை யும், வளங்களையும் தேவைக்கேற்ப பாடசாலைகளுக்குப் பங்கிடல், பாடசாலைகளின் நிதி முகாமை போன்றவற்றை - சுருக்கமாகக் கூறின், பாடசாலை அபிவிருத்தி மாணவர் ஆசிரியர் நலன் என்பவற்றைத் திட்டமிட்டு செயற்படுத்துபவர் கொத்தணி அதிபர். கொத்தணியைப் பொறுத்தவரையில் மாவட்டக் கல்விப் பணிப்பாளருக்குப் பொறுப்புடையவர் கொத்தணி அதிபர். மேலும் ஆசிரியரையும் அங்கத்துவப் பாடசாலைகளின் அதிபர்களையும் ஊக்குவிக்கும் அடிப்படை யில் சம்பள ஏற்றம், சேவை நீடிப்பு, இடமாற்றம், பரீட்சைக் கடமைகளுக்கு நியமித்தல் போன்ற அம்சங்களில் கொத்தணி அதிபரின் சிபார்சுகள் முக்கியத்துவத்தைப் பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முன்னைநாள் வட்டாரக் கல்வி அதிகாரிகளின் பணிகளையும் உள்ளடக்கி மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலாதாரப் பாடசாலையின் சட்ட ரீதியான அதிபர் பணியும் கொத்தணி அதிபருக்கு வழங்கப்பட்டது. ஒரு புறம் சகல அங்கத்துவப் பாடசாலைகளையும் மறுபுறம் தன் பாடசாலை யின் கடமைகளையும் கவனித்து கல்வித் திணைக்களத்துடன் எப்போதும் இணைப்பாளராக விளங்கும் பாரிய பொறுப்பும் அவர்மீது சுமத்தப்பட்டது. இப்பாரிய கஷ்டங்களில் இருந்து ஓரளவு அவருக்கு நிவாரணம் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இப்பணியை ஆற்றுவதற்கு உதவியாக மூலா தாரப் பாடசாலையிலேயே மேலதிகமான அலுவலக இட வசதியும் பணியணியும் இருக்கும். மேலும் கொத்தணியின் நிர்வாகத்தைக் கவனித்தற்கும் கொத்தணிப் பாடசாலைகளின் கல்வியை மேற்பார்வை செய்வதற்கும் போதுமான நேரவசதி யைக் கொத்தணி அதிபருக்கு அளிக்குமாகமாக மூலாதாரப் பாடசாலைக்கு ஒரு மேலதிக அதிபரும் நியமிக்கப்படுவர்' என வெள்ளையறிக்கை குறிப்பிட்டது.

இத்தகைய நன்கு திட்டமிடப்பட்ட கொத்தணி அமைப்பு நடைமுறையில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கில் சில பொறிமுறைகளையும் வகுத்துள்ளதை அவதானிக்க முடிகிறது. அதாவது நடைமுறைப்படுத்தப்படும் கொத்தணிகளின் அனுப வங்களைக் கொண்டு படிமுறையாகத் திட்டத்தினை சீராக்கி விரிவாக்குவதற்கு வழிகள் செய்யப்பட்டன. கடந்த ஆறு வருட கால செயற்பாட்டு அனுபவங்களின் காரணமாக அடிப்படை இலட்சியங்கள் மாறுபடாதவகையில் கொத்தணி அமைப்பிலும் நடைமுறையிலும் பொருத்தமான மாற்றங்கள் செயற்பட்டு வந்தன. கொத்தணி அதிபர்களின் நிர்வாகக் கடமைகளைப் பொறுத்தவரையில் அத்தகைய ஒருவர் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்றொரு நியதி இருந்த போதிலும் பிரதேசங்களின் சூழல் - போதிய ஆளணியினர் இன்மைபோன்ற காரணங்களால் நடைமுறையில் இந்த நியதி தளர்த்தப்பட்டு அதிபர் சேவை யைச் சேர்ந்தவர்களும் பட்டதாரி உதவி ஆசிரியர்களும் கொத்தணி அதிபர்களாக நியமிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தணியின் உயரிய இலட்சியங்கள் நடைமுறையில் சூழலுடன் தாக்கமுறும் போதுதான் அதன் வெற்றி தோல்வியை இனங்காண முடியும். பௌதீக வளங்கள் பற்றிக் கூறப்பட்ட இலட்சியங்களை முதற்கண் நோக்குவோம். பாட சாலைகளுக்கிடையே வளங்களில் காணப்பட்ட ஏற்றத் தாழ்வு கள் சமனற்ற பங்கீடு போன்றவற்றைக் குறைத்து அல்லது அகற்றி கிடைக்கும் வளங்களில் உச்சப்பயனைப் பெறத்தக்க வகையில் சிக்கனமான பிரயோகத்தை ஏற்படுத்து வதற்கும் அதன் மூலம் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்து வதற்கும் கொத்தணிமுறை வாய்ப்பாக அமையுமென நம்பிக்கை தெரி விக்கப்பட்டது. உண்மையில் கல்வியில் 'அசம நிலை' என்னும் இத்தகைய பிற்போக்கான நிலை நீண்டகால மாக கல்விமான்களால் சுட்டிக்காட்டப்பட்டு வந்துள்ளது. கொத் தணி அமைப்பு இதனைச் சீர்செய்வதாக இருப்பின் கல்வி உலகுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமையும். கொத்த ணிக்குட்பட்ட பாடசாலைகளின் வளங்களை ஒன்றுதிரட்டி அப்பாடசாலைகள் அனைத்தும் அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. பின்தங்கிய பிரதேசங்க ளில் அமைக்கப்பட்ட சில கொத்தணிகளைப் பொறுத்தவரை யில் மூலதாரப் பாடசாலைகளிலேனும் குறிப்பிட்ட வளங்க ளைக் காண்பது அரிதாக இருந்தது. கட்டிடம், தளபாடம், கற்பித்தல் உபகரணங்கள், துணைப் பாடவிதான வாய்ப்பு வசதிகள், ஆசிரியர் என்றிவ்வாறு ஒவ்வோர் அம்சமாக நோக்கி னும் கல்வியை வேண்டி . அங்கலாய்த்து நின்ற சிறார்களுக்கு ஓரளவாகினும் கல்வி வழங்கத் தக்க நிலை இல்லாமலிக்கும் போது கல்வியில் அபிவிருத்தியைக் காணுவது துர்லபம். ஒரு பிரதேசத்தில் பிள்ளைகள் வசதியான பாடசாலையின் மாடிக் கட்டிடத்தில் தளபாட வசதிகளுடன் போதிய ஆசிரியர்க ளின் சேவையுடன் கல்வி பெறும் அதேவேளை மற்றொரு பிர தேசத்தில் பிள்ளைகள் எதுவித வசதிகளுமற்ற வெற்றுத் தரை யில் கற்பிக்க ஆசிரியரின்றி வெறுமனே வீடு செல்லும் அபாக் கிய நிலையும் காணப்பட்டமை மனிதாபமான ரீதியில் அநீதி என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் சேவையினைக் குறிப்பாக அவதானிக்கும் போது பொதுவாக எங்ஙனும் குறைநிலை என்ற கோசம் தொடர்ந்திருப்பினும் பட்டினப்பாங்கான பாடசாலைகளை விடவும் கிராமப்புற பின்தங்கிய கஷ்டப்பிரதேச பாடசாலைகளை பொறுத்தவரையில் இந்நிலை உக்கிரமடைந்து காணப்படு கின்றது. மேலும் இப்பாடசாலைகளில் நிலவும் குறை, விகிதாசாரத்தில் பட்டினப்பாங்கான பாடசாலைகளை விடவும் அதிக அளவாகும். இதற்கு ஒரு முக்கிய காரணம் போக்கு வரத்து மற்றும் வாழ்க்கை வசதிகளைப் பொறுத்தவரையில் இப்பாடசாலைகளில் அதிக கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருப்பதைக் காரணமாகக் கொண்டு ஆசிரியர் இவ்விடங்களுக்கு நியமனம் பெற அல்லது இடமாற்றம் பெற்றுச் செல்வதை விரும்புவதில்லை. இதனால் இயல்பா கவே இப்பாடசாலைகள் ஆசிரியரின்றி வறுமைப்படவும் வசதியான நகரப்புறப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் மிகைப்பட்டு தேக்கமுறவும் நேரிடுகின்றது. ஆசிரியர் பற்றாக்குறையால் அதிகம் பாதிக்கப்படும் பாடசாலைகள் ஆரம்பப் பாடசாலைகளாகும்.

இன்று சர்வதேச கல்வி மகாநாடுகளிலெல்லாம் சகலருக்கும் ஆரம்பக் கல்வி என்ற கோட்பாடு வலியுறுத்தப்பட்டும் அதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோது மனித உரிமையாகிய அடிப்படைக் கல்வியை எதிர்பார்த்து நிற்கும் ஏழைப் பிள்ளைகள் அக்கல்வியை ஒழுங்காகப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புக்களை இழந்து காணப்படுவது துரதிஷ்டமே. எனவே குறிப்பாக கிராமப்புறப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறை ஓரளவாகினும் சீர் செய்யப்பட வேண்டியது அவசிய மாகும். ஆசிரியரின் சமனற்ற பரம்பலில் காணப்படும் சிக்கலின்மையை இல்லாமற் செய்ய அல்லது குறைக்க அரசு உடனடியான நியமனங்கள் மூலம் சாத்தியமில்லை என்பதைக் கருத்திற் கொண்டு - சில திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம். குறிப்பாக கிராமப்புறப் பாடசாலைகளில் ஆசிரியர் சேவையைப் பெற்றுக் கொள்வதாயின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) ஆசிரியர்களுக்கு குறிப்பிட்ட காலத்துக்கு உத்தரவாத மளிக்கக்கூடிய இடமாற்றத் திட்டங்களை நடைமுறைப்படுத்த லாம்.

ஆ) தாமாகவே ஆசிரியர் கிராமப்புற பாடசாலைகளை நாடக் கூடிய விதத்தில் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம். இது பலவிதமாக அமையலாம்

(1) கஷ்டப்பிரதேச பாடசாலைக்குரிய அலவன்ஸ் வழங்கல்

(2) பரீட்சைக் கடமை போன்றவற்றில் ஈடுபடுத்தல்

(3) விசேட கடன் வசதிகள் போன்றவற்றை வழங்குதல்.

இத்தகைய நடவடிக்கைகளால் ஆசிரியர் தாமாகவே இப்பாடசாலைகளுக்கு ஈர்க்கப்படுவார்கள். மேலும் அதிக பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் இடமாற்றங்கள் மூலம் குறைபாட்டைப் போக்க சாத்திய மில்லாத இடத்து அரசு தொண்டர் ஆசிரியர் நிலையினைக் கருத்திற் கொண்டு தகுதியானவர்களுக்கு நியனம் வழங்கு வதன் மூலம் அல்லது நியாயமான ஒரு மாதாந்தப் படியினை வழங்குவதன் மூலம் உடனடியாக ஆசிரியர் பற்றாக்குறை யினை தீர்க்க முடியும்.

அடுத்ததாக நோக்க வேண்டியது மூலாதாரப் பாடசாலை களின் நிலை. வெள்ளையறிக்கையின்படி மூலாதாரம் பாடசா லைகள் சிறந்த விஞ்ஞான, ஆய்வு கூடம், வேலைத்தளம், நூலகம் செவிப்புல - கட்புலக் கல்வி வசதிகள், இணைப் பாட விதான பயிற்சி வாய்ப்புக்கள் எனுமிவை பொருந்தி இருக்கு மாறு அபிவிருத்தி செய்யப்படும். ஆயின் நடைமுறை யில் இவை அனைத்துமோ அல்லது பெரும்பாலான வசதிகளோ இல்லாமலும் மூலாதாரப் பாடசாலைகளை நிறுவ வேண்டிய நிர்ப்பந்தம் கொத்தணிகளை அமைக்கும் போது ஏற்பட் டுள்ளதை மறுக்க முடியாது. அந்த வகையில் கிராமப் புற பிரதேசங்களிலிருந்த சில இடைநிலைப் பாடசாலைகள் இத்திட்டத்தின் கீழ் தலைமை வகிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் வளங்களும் வசதிகளும் அபிவிருத்தி செய்யப்படவில்லை. கொத்தணி அங்கத்துவப் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் கனவுகளையும் அபிலாசைகளையும் நிறைவுசெய்ய எந்த வகையிலும் இந்த மூலப் பாடசாலைகளால் இயலாத நிலையில் தத்தம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதில் இவை போராட வேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்பட்டன.

பொதுவாக ஏற்கனவே செல்வாக்கும் செல்வமும் பெற்றுப் போதிய வளங்களுடன் சேவையாற்றிய பெரிய பாடசாலைகள் மூலப் பாடசாலையாக அமையும் போது இயல்பாகவே அவற்றின் வளங்கள் மேலும் மேலும் அதிகரித்துச் செல்லும் நிலை காணப்பட்டது. அரசியல் அதிகாரமும் கல்வி அலுவலகங்களும் இப்பாடசாலைகளின் மீது காட்டும் முன்னுரிமை அனுகூலங்களால் இது சாத்தியமாகின்றது. அதேவேளை பின்தங்கிய கிராமப்புறப் பாடசாலைகளுக்கு ஓரளவாகினும் வளங்களைப் பங்கிட்டுக் கொடுப்பதில் இத்தகையோரின் மனப்பாங்கு முரண்பட்டுக் காணப்படுவது வேதனைக்குரியது.

கொத்தணியில் அங்கத்துவம் பெறும் தனித்தனிப் பாடசாலைகள் ஓர் அலகு என்ற அமைப்பில் தத்தம் வளங்களைப் பங்கிட்டு ஒருமுகமான முன்னேற்றத்தை எய்துவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கட்டத்தில் இத்தகைய மனநிலையை ஏற்படுத்திக் கொள்ளல் கடினமாயினும் படிப்படியாக அவர்கள் கொத்தணி ரீதியாகச் சிந்தித்துச் செயல்பட நடைமுறை அனுபவங்கள் உதவுமாயின் இலட்சியம் வெற்றி காண்பது நிச்சயம். அதேவேளை கொத்தணி அலகுகள் தத்தமக்கிடையில் போட்டியிட்டுக் கொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. இந்தப் போட்டியில் ஏலவே குறிப்பிட்டபடி செல்வாக்குள்ள கொத்தணி மூலப் பாடசாலை தம் வளங்களை மேலும் பெருக்கிக் கொள்வதில் ஆர்வம் காட்டும் நிலை ஏற்பட்டது. இதனால் பிரதேசத்தின் பொதுவான கல்வி அபிவிருத்தியை திட்டமிட்டுச் செயல்படுத்துவதில் தடைகள் அமைந்தன.

கொத்தணித் திட்டத்தினால் ஒருபுறம் வளப் பங்கீடு பிரயோகம் என்ற பொருளாதார ரீதியிலான நன்மைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறம் இலகுவான திறமையான முகாமைத்துவம் என்ற கூறும் இடம் பெறுவதனால் கொத்தணி அதிபரின் பங்கு முக்கியத்துவம் பெற்றது. பாடசாலைகளின் வளங்களைத் திரட்டி திட்டமிட்ட முறையில் பங்கிட்டுப் பயன்படுத்தி முகாமை செய்யும்போது இயல்பாகவே அபிவிருத்தியை எதிர்பார்க்கலாம். ஆனால் வளப்பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறை, கட்டிட தளபாடப் பிரச்சினைகள், உபகரண வசதியின்மை, பாடசாலையின் அபிவிருத்திக்கு பெற்றோரின் அக்கறையை எப்படியுமே ஈர்த்துக் கொள்ள முடியாத அளவு வறுமையும் பாமரத்தன்மையும் ஆட்கொண்டுள்ள சுற்றாடல் பின்னணி, இலகுவில் அலுவலகங்களுடனோ அல்லது அங்கத்துவப் பாடசாலைகளுடனோ தொடர்பு கொள்ள முடியாத அளவு போக்குவரத்து தகவல் தொடர்பு முறையின் சீரற்ற நிலைமை, குடி நீர் மற்றும் வாழ்க்கை வசதிகளின் கஸ்டமான நிலை ஆகியன நிலவுகின்ற ஒரு கொத்தணி கூட வெற்றிகரமாக செயல்பட வேண்டுமென எதிர்பார்ப்பது நியாயமாகாது. மூலப் பாடசாலைகளிலுமே இத்தகைய பிரச்சினைகள் நிலவும்போது ஒரு கொத்தணி அதிபர் எங்ஙனம் திறமையுடன் செயற்பட முடியும். கொத்தணி அதிபர் கொத்தணி நிர்வாகத்தில் ஈடுபடும்போது மூலப் பாடசாலையைக் கவனிப்பதற்கு ஏற்ற வகையில் மேலதிக அதிபர் நியமனம் என்றெல்லாம் ஏற்பாடுகள் எழுத்தில் இடம்பெற்ற போதிலும் நடைமுறையில் சில இடங்களில் இது செயற்படுத்தப்படவில்லை. ஒரே அதிபர் சுமார் 10 முதல் 20 பாடசாலைகளின் நிர்வாகத்தை நடத்துவதற்கும் அத்தனை பாடசாலைகளினதும் வளப் பற்றாக்குறையினை நிறைவு செய்யும் போராட்டத்திற்கு தலைமை வகிப்பதற்கும் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

முகாமையை இலகுபடுத்துவதற்கும் திறனடையச் செய்வதற்கும் சில வளங்கள் இன்றியமையாதன. பிரதானமாக சகல வசதிகளுடனும் கூடிய அலுவலகம், தகவல் பரிமாற்றத்துக்கு வகைசெய்யுமாறு சீரிய தபால் சேவை, துரித தொடர்பு கொள்ளலுக்கு உதவும் தொலைபேசி வசதிகள், தட்டச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லச்சு வசதிகள் உபகரணங்கள், அலுமாரிகள், தளபாடங்கள் போன்ற வசதிகளும் எழுதுவினைஞரின் சேவையும் மிக இன்றியமையாதன. இன்று தகவல் பரிவர்த்தனையிலேயே அபிவிருத்தி துரிதப்படுத்தப்படுகின்றது. இத்தகைய வசதிகள் மூலப் பாடசாலைகளில் அமையும்போதுதான் கொத்தணி அதிபர் தன் முகாமைத்துவத்தை இலட்சியத்துக்கேற்ப செயல்படுத்த முடியும்.

90 களின் ஆரம்பத்திலிருந்து கொத்தணி முறை படிப்படியாக செயலிழந்தும் முக்கியத்துவமிழந்தும் வந்துள்ளமைக்கு இம்முறையின் மூலம் எதிர்பார்த்த பயன்களை அடைய முடியாமற் போனமை ஒரு காரணம் எனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# கல்வி முறையில் கலாசார தனித்துவம்

கல்வி பெறுவது முஸ்லிம் ஆண், பெண் அனைவர் மீதும் கட்டாயக் கடமை என இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இது ஆன்மீகக் கல்வியை மட்டுமன்றி உலகியல் கல்வியையும் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். ஏனெனில் இஸ்லாத்தில் இவை தனித்தனியாகப் பிரிக்கப்படவில்லை. மனிதன் இவ்வு லகிலும், மரணத்தின் பின்னுள்ள மறுவுலகிலும் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ வேண்டும் என்றே இஸ்லாம் வழிகாட்டு கிறது. எனவே கல்வியைப் பெறும் போது கல்வியின் உலகி யல் அம்சங்களைப் புறக்கணிப்பதையோ ஆன்மீக அம்சங்க ளைப் பார்க்கிலும் உலகியல் அம்சங்களுக்கு முதன்மைய ளிப்பதையோ இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை. இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாட்டைப் பொறுத்தவரை உலகியல் என் பது ஆன்மீக வெற்றிக்கு வழி வகுப்பதாகவே அமைய வேண் டும். இரண்டும் இணைந்தவை, ஒன்றிலொன்று தங்கியவை.

இலங்கை போன்ற முஸ்லிமல்லாத நாடுகளைப் பொறுத்தவரை முஸ்லிம்களின் கல்வியானது பாரம்பரிய மதரஸாக் கல்வி, பொதுக் கல்வி (உலகியல்) என்ற இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகுபாட்டில் பின்னப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். பொதுக் கல்வியை அரசு வழங்கும் போது அது சகல சமூகத்த வருக்கும் பொதுவானதாகவே வழங்குகின்றது. இங்கு பொதுக் கல்வி எனக் குறிக்கப்படுவது இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலிருந்து இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த அரசின் கல்வியமைப்பைக் குறிக்கும். இப்பொதுக்கல்வி யானது காலத்துக்குக் காலம் பல்வேறு தாக்கங்களுக்கு உட்பட்டு சுதேசிய பண்புகளைப் பெற்று வந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பிரித் தானிய ஆட்சியாளர் இலங்கையில் கிறிஸ்தவ சமய சார்பான கல்வியமைப்பொன்றையே பின்பற்றினர். 1832இல் கோல் புறூக் குழுவினரின் சிபார்சின்படி ஆங்கிலக் கல்வி ஊக்கு விக்கப்பட்டமையும், உதவி நன்கொடை முறையினால் கிறிஸ்தவ சமயக் குழுக்கள் ஊக்குவிக்கப்பட்டமையும் கிறிஸ்தவ சார்பான அரசின் கல்விக் கொள்கையை மேலும் உறுதிப் படுத்தியதெனலாம். இவ்விதக் கல்வி அமைப்பே இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை தொடர்ந்திருந்தது. அரசின் கிறிஸ்தவ சார்பான கல்வியமைப்பு இலங்கையின் சுதேசிகளான பௌத்த, இந்து, முஸ்லிம்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. அரசும் கிறிஸ்தவ மதக் குழுக்களும் வழங்கிய இத்தகைய பொதுக்கல்வியை சுதேசிய சமூகத்தவர் வெறுக்கலாயினர். குறிப்பாக முஸ்லிம் சமூகம் இத்தகைய கல்வியில் அக்கறை காட்டாது ஒதுங்கியும் வாழலா யினர். இந்நிலை அடுத்த நூற்றாண்டுவரை தொடர்ந்திருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானிய ஆட்சியாளர் வழங்கிய கிறித்தவ சமய சார்பான கல்வி முறையில் சுதேசிய சமூகங்கள் காட்டிய அதிருப்தியின் வெளிப்பாடே அந்நூற் றாண்டின் பிற்கூற்றில் இலங்கையில் எழுச்சி பெற்ற சுதேசிய கல்வி மறுமலர்ச்சி இயக்கங்களின் நடவடிக்கைகளாக அமைந்தன. கிறிஸ்தவ சமய சார்பான கல்விமுறை, தமது சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைகளையும் கலாசாரங்களையும் சிதைத்து விடுவதை உணர்ந்த பௌத்த, இந்து, முஸ்லிம் சமூக சீர்திருத்தவாதிகள் தத்தம் சமய கலாசார சூழலில் கல்வி வழங்கப்படவேண்டி யதன் அவசியத்தை உணர்ந்தனர். இதன் விளைவாக கேர்ணல் ஒல்கொட், அனகாரிக தர்மபால, ஆறுமுக நாவலர், அறிஞர் சித்தி லெப்பை போன்ற தலைவர்கள் தமக்குரிய சமய கலாசார சூழலில் கல்வி நிறுவனங்களை தாபிக்கலாயினர். இலங்கை யின் வட பாகத்தில் உருவான சைவ வித்தியாசாலைகளும், இந்துக் கல்லூரிகளும், ஆனந்தாக் கல்லூரி, தர்மராஜாக் கல்லூரி, மகிந்தாக் கல்லூரிகளும், ஸாஹிறாக் கல்லூரிகளும் இப்புனித நோக்கின் அடிப்படையில் தாபிக்கப்பட்ட கல்லூரிக ளாகும். இவை தனியார் கல்லூரிகளாகவும் காலப்போக்கில் உதவி நன்கொடை பெறும் கல்விக்கூடங்களாக மாறி அரசின் அவ்வப்போதைய கல்வித் திட்டங்களுக்கேற்ப பொதுக் கல் வியை வழங்கிய தனித்துவமிக்க கல்லூரிகளாகவும் விளங்கின எனலாம்.

இருபதாம் நூற்றாண்டில் இலங்கையருக்கு அரசியலிலும் நிர்வாகத்திலும் பங்குபற்றுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்ட வேளையில் கல்வியிலும் சுதேசிய பாரம்பரியங்களுக்குப் படிப்படியாக இடமளிக்கப்பட்டு வந்ததை உணரலாம். இக்கா லகட்டத்தில் அரசின் பள்ளிக்கூட அமைப்பு மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை ஆங்கிலப் பாடசாலை, இரு மொழிப் பாடசாலை (ஆங்கிலத்துடன் சிங்களமும் அல்லது ஆங்கிலத்துடன் தமிழும்) சுயமொழி சிங்களப் பாடசாலை, சுயமொழி தமிழ்ப் பாடசாலை ஆகியவனவாகும். இவற்றுள் முஸ்லிம்களின் கல்வியானது பெரிதும் சுயமொழி தமிழ் பாடசாலை என்ற பகுப்பிலேயே அடங்கியிருந்தது. இவ்வ மைப்பு முஸ்லிம்களின் தனித்துவம் சம்பந்தமாக பல அசௌக ரியங்களை விளைவித்தமையை அன்றைய முஸ்லிம் தலை வர்கள் உணர்ந்தனர். அக்காலை டொணமூர் அரசியல மைப்பின் கீழ் அரசாங்க சபை உறுப்பினராகவும் பின்னர் கல்வி நிர்வாகக் குழுவின் உறுப்பினராகவும் இருந்த சேர் றாசிக் பரீத்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி டி.பி. ஜாயா போன்ற முஸ்லிம் தலைவர்களின் முயற்சியால் பொதுக்கல்வியைப் பொறுத்தவரையில் முஸ் லிம்களின் கலாசார பண்புகளைப் பேணுவதற்கேற்ற வாய்ப் புக்கள் படிப்படியாக வழங்கப்படலாயிற்று.

பள்ளிக் கூடங்களில் முஸ்லிம் மாணவர்களின் நன்மை கருதி 1938ஆம் ஆண்டிலிருந்து அரபு (மௌலவி) ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் முஸ்லிம் மாணவர்க்கு அரபு மொழியும் இஸ்லாம் சமயமும் கற்பித்தனர். இந்த நியமனம் இன்றுவரை தொடர்ந்திருப்பதுடன், முஸ்லிம் மாணவர் குறிப்பிட்டளவில் பயிலுகின்ற முஸ்லிமல்லாத ஏனைய பாட சாலைகளிலும் அரபு ஆசிரியர் நியமிக்கப்படுவது தனித்துவ நலன் பேணும் பெரும் வாய்ப்பாகவும் அமைந்துள்ளது. மேலும் அரபு மொழி, இஸ்லாம் சமய போதனைகளை மேற்பார்வை செய்ய அரபுக் கல்வி அதிகாரிகளும் நிய மிக்கப்பட்டனர்.

1941 வரை முஸ்லிம் ஆசிரியர்களின் பயிற்சியானது முற்றிலும் தமிழ் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலேயே தங்கியிருந்தது. முஸ்லிம் ஆசிரிய ஆசிரியைகள் தமது கலா சாரத்தைப் பேணுவதற்குப் போதிய வாய்ப்புக்கள் வழங் கப்படவில்லை என்பது அப்போது உணரப்பட்டது. எனவே சேர் றாசிக் பரீத் அவர்களின் முயற்சியால் 1941இல் முஸ்லிம்க ளுக்கான ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அளுத்கம என்னுமிடத்தில் திறந்து வைக்கப்பட்டது. மேலும் 1941 ஒக்டோபரில் அட்டா ளைச் சேனையில் நிறுவப்பட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முதலில் முஸ்லிம்களையும் உள்ளிட்ட தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்து வந்தது. காலப் போக்கில் 1947இலிருந்து முஸ்லிம் ஆண் ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கல்லூரியாக இது மாற்றப்பட்டது. 1954இல் அளுத்கம ஆசிரியர் கல்லூரி தனியே முஸ்லிம் மகளிர்க்காக மாற்றப்பட்டது. இவை கல்வியில் முஸ்லிம்களின் தனிப் பண்பாட்டைப் பேண எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1940களில் அரசாங்கம், முஸ்லிம் தலைவர்களின் இடையறாத கோரிக்கைகளின் விளைவாக முஸ்லிம் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த அரசினர் தமிழ் (மொழிமூல)ப் பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்களையும் முடியுமான வரை உதவி ஆசிரியர்களையும் முஸ்லிம் ஆசிரியர்களிலிருந்தே நியமித்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இக்காலப் பகுதியில் அரசினர் தமிழ்ப் பாடசாலைகளில் பயன்படுத்தப்பட்டு வந்த பாலபோதினி போன்ற தமிழ் வாசகங்கள் (Tamil Readers) முஸ்லிம் மாணவர்களுக்கு ஏற்றனவல்ல என்று 1943ல் எழுப்பப்பட்ட ஆட்சேபனைகளின் விளைவாக முஸ்லிம் சமய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் 'முஸ்லிம் பாலர் வாசகம்' என்னும் புதிய பாடநூல்கள் முஸ்லிம் மாணவர்களால் பயன்படுத்தப்படலாயின.

மேலும் இக்காலப் பகுதியில் முஸ்லிம் மாணவர்களின் உயர் கல்வி வாய்ப்புக்களுக்காக காத்தான்குடியிலும் (1941), அளுத்கமவிலும், எருக்கலம்பிட்டியிலும் மூன்று மத்திய கல்லூரிகளை அரசு நிறுவியது. முதலிரண்டும் ஆண்களுக்காகவும் மற்றையது பெண்களுக்காகவும் தாபிக்கப்பட்டன. இவை விடுதி வசதிகளுடன் கூடிய கல்லூரிகளாக விளங்கின. 1944இல் முஸ்லிம் பகுதிகளிலுள்ள அரசினர் தமிழ்ப் பாடசாலைகளின் விசேட குறைகளைப் பற்றி விசாரிக்க உப குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து முஸ்லிம்களின் கல்வியில் அரசு அதிக அக்கறை செலுத்தத் தொடங்கியது எனலாம். முஸ்லிம் தலைவர்களின் தூண்டுதல்களின் விளைவாக மேலும் முஸ்லிம்களுக்காக முந்நூற்றுக்கும் அதிகமான பாடசாலகளை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கொழும்பில் முஸ்லிம் பெண்களின் உயர்கல்வியைக் கருத்திற்கொண்டு சேர் ராசிக் பரீதின் முயற்சியால் 1946இல் பம்பலப்பிட்டியில் முஸ்லிம் மகளிர் கல்லூரி தாபிக்கப்பட்டது. 1950 களில் நிலைமையில் மேலும் முன்னேற்றம் காணப்பட்டது. முஸ்லிம் ஊர்களிலெல்லாம் அதிக அளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் பாடசாலைகள் நிறுவப்பட்டன. தமிழ்ப் பாடசாலை என்ற பகுப்பிலிருந்து முஸ்லிம் பாடசாலைகள் வேறுபடுத்தப்பட்டன. முஸ்லிம் பகுதிகளில் கல்வியூட்டிய பாடசாலைகளெல்லாம் முஸ்லிம் வித்தியாலயங்களாகவும் முஸ்லிம் மகா வித்தியாலயங்களாகவும் மாறின.

முஸ்லிம்களுக்கென்று தனியான பாடசாலைகளை அரசு வழங்கியதைத் தொடர்ந்து முஸ்லிம் பாடசாலைகள் தமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அரசின் கொள்கைக்கிணங்க இஸ்லாமியப் பெயர்களைச் சூடிக் கொண்டன. அல்ஹம்ரா, அல் அக்ஷா, மதீனா, அறபா, மினா போன்ற பெருமைமிக்க இஸ்லாமிய தலங்களின் பெயர்களும், உமர் பாறூக், உஸ்மான், ஹசன், ஹுசைன் போன்ற இஸ்லாமியத் தலைவர்களின் பெயர்களும், கஸ்ஸாலி, இக்பால், றூமி போன்றி இஸ்லாமிய அறிஞர்களின் பெயர்களும், ஆமினா, கதீஜா, ஆயிஷா, பாத்திமா போன்ற இஸ்லாமிய மாதர் திலகங்களின் பெயர்களும், சித்தி லெவ்வை, ஜாயா, ராசீக் பரீத், பதியுதீன் மஹ்மூத் போன்ற இலங்கை முஸ்லிம் தலைவர்களின் பெயர்களும் முஸ்லிம் பள்ளிக்கூடங்களின் மகுடங்களாயின. மேலும் அல்மர்ஜான் (முத்து), அல்மனார் (ஒளி), ஸாஹிறா (பிரகாசம்), அல்ஹிதாயா (நேர்வழி) தாறுஸ்ஸலாம் (சாந்தி இல்லம்), தாறுல் உலூம் (அறிவகம்) போன்ற சிறந்த பொருள்தரும் அரபுப் பெயர்களும் பொறிக்கப்பட்டன. இத்தகைய இஸ்லாமிய மகுடங்களின் கீழ் முஸ்லிம் பாடசாலைகள் இஸ்லாமிய முன்மாதிரியையும், சமய கலாசார விழுமியங்களையும் இலட்சியமாகக் கொண்டு இயங்கும் என்ற எதிர்பார்ப்புக்களுடன் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. மேலும் ஏனைய சமூகங்களுக்கு அரசு அனுமதித்துள்ளமை போலவே முஸ்லிம் பாடசாலைகளிலும் இறை பிரார்த்தனைக்காக தொழுகை மண்டபம், அல்லது சிறிய பள்ளிவாசலை அமைத்துக் கொள்வதற்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கூடம் தொடங்கும்போதும் முடிவடையும் போதும் இஸ்லாமிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய முறைப்படி பிரார்த்தனை புரிவதற்கும் துதிப்பாக்களை பாடுவதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு முஸ்லிம்கள் தமது கலாசாரத்தைப் பேணுவதற்காக அக்காலத்திலிருந்து சித்தி லெப்பை, சேர் றாசிக் பரீத், ரி.பி. ஜாயா, டாக்டர் கலீல், பதியுதீன் மகுமூது போன்ற கல்விமான்களும் முன்னின்று உழைத்ததன் பேறாக முஸ்லிம் சமூகம் கல்வித் துறையில் இன்று பல உரிமைகளையும், சலுகைகளையும் பெற்று விளங்குகின்றது. முஸ்லிம்கள் அரசு வழங்கும் பொதுக் கல்வியில் பெற்றுள்ள இத்தகைய தனித்துவமிக்க உரிமைகளும் சலுகைகளும் இன்று முழுவதாகப் பயன்படுத்தப்படுகின்றனவா? என்பது சிந்திக்க வேண்டியதாகும். எமது தலைவர்கள் போராடி வென்றெடுத்துத் தந்த தனித்துவப் பண்புகளின் புனித நோக்கம் இன்று எந்த அளவு நிறைவேற்றப்படுகின்றது?. ஒரு ஜனநாயக அரசு சமயத்தின் பெயரால் ஒரு சமூகத்தை அதன் தனிப் பண்புக்கூறுகளைக் கௌரவிக்கின்ற அதே வேளை, குறிப்பிட்ட அச்சமூகம் அதனை அலட்சியம் செய்வது எந்தவகையிலும் முறையாகாது.

முஸ்லிம்களின் கலாசாரம் என்பது என்ன? அதன் பண்புக் கூறுகள் யாவை? இன்று எம் சமூகத்தினரால் இவை சீர்தூக்கிப் பார்க்கப்படுவதில்லை. மரணத்தின் பின்னுள்ள மறுமை வாழ்வில் உறுதியான நம்பிக்கை வைத்திருப்பவர்கள் முஸ்லிம்கள். முகம்மது (ஸல்) அவர்கள் உலகிற்குக் கொண்டு வந்த இறைதூது, இறுதியானதும், அவர்கள் கொண்டுவந்த இஸ்லாம் ஒன்றே மனித சமுதாயத்தின் ஈருலக வெற்றிக்கும் உறுதியான நெறி என்றும் முஸ்லிம்கள் நம்புகின்றனர். எனவே இறைவனால் அருளப்பட்ட திருக்குர்ஆனின் ஏவல் விலக்கல்களுக்கு ஏற்றவாறும், முகம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையைப் பின்பற்றியும் நடப்பது முஸ்லிம்களின் கட்டாயக் கடமையாகும். ஒரு முஸ்லிம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற கட்டளைகளையும், எவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது என்ற விலக்கல்களையும் அனுசரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுகுவதன் மூலமே முஸ்லிம்களின் கலாசாரம் பேணப்பட லாம்.

பள்ளி வாழ்க்கையைப் பொறுத்தவரை மாணவர்கள் இறை வணக்கத்தை நிறைவேற்றுவதில் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும். இன்று பெரும்பாலான முஸ்லிம் பாடசாலை களில் இஸ்லாமியத் திருநாட்களையும் நினைவு தினங்களை யும் கொண்டாடுவதில் காட்டப்படும் அக்கறை, கட்டாய கட மையாகிய தொழுகையை வலியுறுத்துவதில் காட்டப்படு வதில்லை.

மாணவர் சீருடையைப் பொறுத்தவரையிலும் இஸ்லாமி யக் கோட்பாடுகள் உறுதியாகப் பின்பற்றப்படல் வேண்டும். ஆண் பிள்ளைகளைப் பொறுத்தவரை நீண்ட காற்சட்டை அணி வது ஊக்குவிக்கப்படல் வேண்டும். தொப்பி அணி வதற்கும் இடமளிக்கப்படல் வேண்டும். இதன் மூலம் முஸ்லிம் மாண வர்கள் தனித்துவமாகக் காட்சி தருவர். பெண்களைப் பொறுத் தவரை ஆரம்ப வகுப்பிலிருந்தே 'பர்தா' எனப்படும் மறைப்பா டையை அணிந்து கொள்வதற்குப் பழக்கப்படல் வேண்டும். இப்பயிற்சியின் மூலம் மாணவிகள் பல்கலைக்கழகப் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் போதும் 'பர்தா' அணிந்து தனித்து வத்தைப் பாதுகாக்க வாய்ப்பு ஏற்படும். இந்த வகையில் முஸ்லிம் ஆசிரியைகளும் தாமே முன்மாதிரியாக நடப்பதன் மூலம் தனித்துவப் பண்புகளுடன் கூடிய தூய சமுதாய மொன்றைத் தோற்றுவிக்கலாம்.

இஸ்லாமியக் கோட்பாடுகளின்படி கூட்டுக் கல்வி முக்கிய பிரச்சினையாகும். குறிப்பாக வயதுவந்த ஆண், பெண் சேர்ந்து பயிலுவதை இஸ்லாம் தடைசெய்கின்றது. இந்த விடயத்தில் முஸ்லிம் சமூகம் அக்கறை காட்டுவதுடன் திட்டவட்டமான கொள்கைகளும் பின்பற்றப்பட வேண்டும். பெண்களுக்காகத் தனியான உயர் கல்லூரிகள் நிறுவுவதன் மூலம் இப்பிரச்சி னைக்குத் தீர்வுகாண முயல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக, முஸ்லிம்களின் சமய நம்பிக்கைக்கும், கலாசார விழுமியங்களுக்கும் ஊறு விளைவிக்காதவாறு கல்விச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதைப் உறுதி செய்து கொள்வது இன்றியமையாததாகும். வயது வந்த ஆண்களும், பெண்களும் இணைந்து செயல்படும் பகிரங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் சமயக் கட்டுக் கோப்பு பாதிக்கப்ப டாதவாறு பார்த்துக் கொள்ளல் வேண்டும். மேலும் கலை இலக்கியம் என்ற பெயர்களால் நடாத்தப்படும் கூட்டுச் செயற்பாடுகளிலும் முஸ்லிம் பெண்கள், கலாசார தனித்து வத்தைப் பேணும் வகையில் நடந்து கொள்ளவது அவசி யமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

# கல்வியியல் சமவாய்ப்பு கோட்பாடும் செயற்பாடும்

கல்வி பெறுவது ஒவ்வொரு பிரசையினதும் அடிப்படை உரிமை. இது மனித சமுதாயத்தின் அடிப்படை உரிமை. ஐ. நா. தாபனத்தின் மனித உரிமை சாசனம் 29 பிரிவுகளும் அடிப்படை உரிமைகள் யாவை எனக் கூறுகின்றன. அதன் 26வது பிரிவின் உப பிரிவுகள் கல்வி ஓர் அடிப்படை மனித உரிமை என்பதை விளக்குகின்றன. அதாவது,

01. ஆரம்பக் கல்வியாயினும் ஒருவருக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டும். அது கட்டாயமானதாகவும் இருக்க வேண்டும். தொழில் நுட்ப, தொழில் சார் கல்வி பொது வாகவும், உயர்கல்வி திறமையடிப்படையில் சகலருக்கும் சமமாகக் கிடைக்கத்தக்கதாகவும் இருக்க வேண்டும்.

02. கல்வி மனிதனின் முழுமையான ஆளுமை விருத்திக்கும், மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரம் என்பவற்றை வலுப்படுத்துவதற்கும் வழிகாட்ட வேண்டும். மேலும் பன்னாட்டு, பல்லின, பன்மத சமூகங்களுக்கிடையே நல்விளக்கம், சகிப்புத்தன்மை, நல்லுறவு என்பவற்றையும் ஐ.நா.வின் சமாதான நடவடிக்கைகளை மேம்படுத்துவ தாகவும் அமைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பெற்றார் தம் பிள்ளைகளுக்கு வழங்கும் கல்வி எத்தகையது என்பதைத் தெரிவு செய்யும் முன்னுரிமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

மனித உரிமை சாசனத்தைத் தொடர்ந்து, சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காகவும், பாகுபாடு காட்டுவதைத் தடுப்பதற்காகவும் சாள்ஸ் டி அம்மவுண் என்பவரின் தலைமையில் ஐ.நா. உப ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழு தெரிவித்த சிபார்சுகள் 1960 இல் யுனெஸ்கோ தாபனத்தால் 'கல்வியில் பாகுபாடு காட்டுவதற்கெதிரான சர்வதேச சாசனம்' என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவற்றைத் தொடர்ந்து கல்வியில் ஜனநாயகக் கோட்பாடுகள் வலுப்பெறத் தொடங்கின. அவற்றின் பல்வேறு பண்புகளும் கல்வி குறித்து மனிதனுக்குள்ள உரிமையை உறுதி செய்வனவாகக் கொள்ளப்பட்டன. அவையாவன, கல்வியில் சமத்துவம், இலவசக் கல்வி, கட்டாயக் கல்வி, தொடர் கல்வி, சகலருக்கும் கல்வி, ஆற்றலுக்கேற்ற கல்வி போன்றனவாகும்.

குறிப்பாக கல்வியில் சமத்துவம் பேணல் அல்லது கல்வியில் யாவர்க்கும் சம சந்தர்ப்பம் வழங்கல் (Equal Opportunity) என்பது மனிதத்துவ அடிப்படையிலான ஓர் எண்ணக்கருவாகும். சற்று விளக்கமாகக் கூறப்போனால் இந்த சமத்துவம் பலதரப்பட்ட வேறுபாடுகளுக்கும் தடைகளுக்கும் அப்பால் சென்று சாதிக்க வேண்டிய முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. இன வேறுபாடுகள், வர்க்க வேறுபாடுகள், நிற வேறுபாடுகள், மொழி வேறுபாடுகள், மத வேறுபாடுகள், பிரதேச வேறுபாடுகள் என்பவற்றைக் கடந்து சமத்துவம் நிலை நாட்டப்பட வேண்டும். 'சட்டத்தின் முன் யாவரும் சமம்' என்ற ஜனநாயகக் கோட்பாடு நிறுவப்பட வேண்டும்.

ஆயின் உலக வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும் போது பன்மைச் சமுதாயங்களில் இந்த சமுகக் கோட்பாடு எவ்வளவு தூரம் வெற்றி பெற்றுள்ளது என்பதை அவதானிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் நீண்டகாலமாக நிலவி வந்த இன ஒதுக்கலை (Racial Discrimination) நீக்க நூற்றாண்டு காலமாக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் இதற்கு சான்றாகும். 1896 ஆம் ஆண்டின் பிளைவ் எதிர் பெர்குஷன் வழக்குத் தீர்ப்பு இன ஒதுக்கலை ஊக்குவித்ததையும் 1954 இல் பிறவுண் எதிர் தோபே கல்விச் சபை வழக்கின் தீர்ப்பு இன ஒதுக்கலை நீக்குவதற்கு ஏற்பாடு செய்த போதிலும் வெள்ளையர் மனப்பாங்கு மாறாமையால் ஏற்பட்ட குழப்ப நிலைகளும், 1970 இன் பின்னர் கடைப்பிடிக்கப்பட்டுவரும் கலாசார இணைப்பு வேலைத்திட்டங்களும் கல்வியில் சமத்துவம் பேண எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

சுவிச்சர்லாந்து, மலேசியா போன்ற பன்மொழிச் சமுதாயங்களில் மொழி வேறுபாடுகள் கல்வியைப் பாதிக்காத சமூக நிலை காணப்படுகிறது. கல்வியில் வேறுபாடு காட்டாத சமத்துவப் போக்கு சட்டத்தால் மட்டுமன்றி மனப்பாங்கு மாற்றத்தாலும் நிறுவப்பட வேண்டும். ஜனநாயக விழுமியங்களை ஏற்றுக்கொண்டுள்ள இலங்கை போன்ற நாடுகளில் கல்வியில் சம வாய்ப்பு என்பது கோட்பாடு ரீதியில் மட்டுமல்லாது செயற்பாட்டு ரீதியிலும் சாதிக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

எமது பாரம்பரிய மரபுக் கல்வி முறைகளில் கல்வி முதன்மையாக வலியுறுத்தப்பட்டிருந்தது. ஆயின் அன்றைய தேவைக்கு அமைவாக அது வழங்கப்பட்டது. கல்வி வாய்ப்புகளும் செயற்பாடுகளும் விரிவடைந்திருக்கவில்லை. பண்டைய மரபில் பொதுமக்கள் வாழ்க்கைக்குத் தேவையான கல்வியை வழங்குவதற்கு கோயிலை அண்மியும், பள்ளிவாயில்களிலும், விகாரைகளிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இத்தகைய கல்வி முறைகளில் கல்வி பொதுவானதாக வழங்கப்பட்டது. தத்தம் சமய, கலாசார வாழ்க்கை முறைகளுக்குத் தேவையான கல்வியை வழங்கி வந்த சுதேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-இந்து, இஸ்லாமிய, பௌத்த கல்வி முறைகள் போர்த்துக்கேயரினதும் தொடர்ந்து ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோரினதும் வருகையோடு மதிப்பிழக்கத் தொடங்கின. பதிலாக கிறிஸ்தவ சமய சார்பான கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

கிறிஸ்தவ சமயக் குழுக்கள் கல்வி வழங்குவதில் ஆர்வத்துடன் செயல்பட்டன. சமயம் பரப்பும் உள்நோக்கு இதற்கு உந்து விசையாக இருந்தது. இறுதியாக ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவ சமயக் குழுக்களுக்கு ஆதரவாக மேற்கொள்ளப்பட்ட அரச கொள்கைகளும் நடவடிக்கைகளும் சமூகத்தில் கிறிஸ்தவ சமயக் குழுப் பாடசாலைகளின் செல்வாக்கை மேலும் அதிகரித்தன. இந்தியாவில் மெக்கோலே பிரபு தெரிவித்த கருத்துக்களும் (Macaulay's Minutes, 1835) இலங்கையில் கோல்புறுக் ஆணைக்குழுவின் *(1832)* சிபார்சுகளும் சுதேசிகளுக்கு ஆங்கிலக் கல்வி வழங்குவதன் அவசியத்தையும் சமயக் குழுக்களின் பாடசாலைகளுக்கு அரச ஆதரவு வழங்குவதையும் வெளிப்படுத்தின. மெக்கோலேயின் 'சுதேசிகளை ஆங்கில அரசுக்கு விசுவாசமான ஆங்கில கலாச்சாரத்தைப் பின்பற்றுபவராக உருவாக்குவதற்கான கொள்கையும்', 'சமுதாயத்தில் சலுகை பெற்ற வகுப்பினர்க்கு கல்வி வழங்குவதான கீழ்நோக்கிய கசிதல் கோட்பாடும்' (Downward Filteration Theory) செயன் முறையில் சமுதாயத்தை இருபிரிவுகளாகப் பிரிப்பதற்கு காரணமாயின. ஆங்கிலேயர் வழங்கிய கல்வி சமுதாயத்தின் தேவையைக் கருத்திற் கொண்டதாகவும் இருக்கவில்லை.

இந்த சூழ்நிலையிலேயே 19ம் நூற்றாண்டின் பிற்கூற்றில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், அநகாரிக தர்மபால, அறிஞர் சித்திலெவ்வை ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்ட சுதேசிய மறுமலர்ச்சி இயக்கங்கள் கிறிஸ்தவ சமய சார்பான கல்வி முறைகளுக்கெதிராக கிளர்ந்தெழுந்து தத்தம் தனித்துவம் பேணும் கலாசாலைகளைத் தோற்றுவித்தன. இக்கல்லூரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறித்தவ சூழலில் கல்வி பெற முடியாதிருந்த சுதேச இந்து, பௌத்த, இஸ்லாமிய மக்கள் தம் கலாச்சார சூழலில் ஆங்கில உயர்கல்வியைப் பெறுவதற்கு ஏற்ற வாய்ப்புக்களை வழங்கின. **'கோயில்களிலும், பள்ளிவாசல்களிலும் நடை பெற்றுவந்த பழமையான மரபுவழி பாடசாலைகள் படிப்படியாக மாற்றம் பெற்று இறக்குமதி செய்யப்பட்ட பிரித்தானிய 'மாதிரி'களின் தோற்றத்தைப் பெறலாயின.'** 1870ம் ஆண்டிலிருந்து இப்பாட சாலைகளும் கிறித்தவ சமயக் குழு பாடசாலைகளைப் போன்று உதவி நன்கொடைத்திட்டத்தின் கீழ் சேர்க்கப் பட்டன.

எனவே 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையின் அரசாங்கப் பாடசாலைகளும், கிறித்தவ குழுக்களின் பாடசா லைகளும், சுதேசிய சமயக் குழுக்களின் பாடசாலைகளும் கல்வியை வழங்கி வந்தன. அரசாங்க பாடசாலைகள் தவிர்ந்த பாடசாலைகள் கட்டணம் அறவிடுபவையாக இருந்தன. உயர்தரக் கல்வியை வழங்கிய பாடசாலைகள் நகரப் புறங்களிலேயே இருந்தன. இதனால் சமுதாயத்தில் கல்வியை வேண்டிநின்ற அனைவரும் தமக்கு வேண்டிய கல்வியைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலும் மக்கள் வேறுபடுத்தப்பட்டனர். உயர்தரக் கல்வி வாய்ப்பு சமூகத்தில் மிகக் குறைந்த வீதத்தினர்க்கே கிடைத்தது.

**'கல்வியை விரிவு படுத்தவும் பலதுறைப்படுத்தவும் 1920 வரை எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் நாட்டின் கலாசார தேவைகள், நிலைமைகள் ஆகியவற்றையும், தனித்தனி குழந்தைகளின் கல்வி கற்கும் ஆற்றலையும் நாட்டின் வேலை வாய்ப்புக்களையும் கருத்திற் கொள்ளாது திட்டமிடப்பட்ட வையாகும்.**

1931ஆம் ஆண்டு இலங்கை அரசியல் வரலாற்றில் மிக முக்கிய ஆண்டாகும். மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படை இவ்வாண்டில் நிறுவப்பட்டது எனலாம். இவ்வாண்டில் வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமையின் பலனாக, பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு கல்வி வாய்ப்புக்களை விரிவுபடுத்தும் குறிக்கோள் அரசுக்கு ஏற்பட்டது.

சர்வசன வாக்குரிமையைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட அரசாங்க சபையின் கல்விக் குழுவானது நாட்டு மக்களின் கல்வி சம்பந்தமான முன்னேற்ற நடவடிக்கைகளை மேற் கொண்டது. இக்காலப்பகுதியில் கல்வி வாய்ப்புக்களுக்கும் முன்னரைவிட விரிவுபடுத்தப்பட்டன.

**'ஏலவே குடியேற்றவாத கல்விக் கொள்கைகளால் உருவாக்கப்பட்டு மீள வலியுறுத்தப்பட்டிருந்த சமூக - கலாசார, சமூக - பொருளாதார சமமின்மைகள் 1940 களில் படிப்படியாக குறையத் தொடங்கியது'** அரசாங்க பாடசாலைகள் கிராமப் புறங்களில் மேலும் நிறுவப்பட்டன. இதனால் கல்வி விரிவு ஏற்பட்டது.

| ஆண்டு | அரசாங்க பாடசாலைகள் | உதவி நன்கொடை பெறும்பாடசாலைகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1869 | 120 | 21 | 141 |
| 1870 | 156 | 229 | 385 |
| 1890 | 436 | 971 | 1407 |
| 1910 | 759 | 1910 | 2669 |
| 1930 | 1490 | 2502 | 3992 |
| 1939 | 1990 | 2145 | 4135 |
| 1945 | 2399 | 2144 | 4543 |

*1940 இல் நாட்டின் அன்றைய கல்வி முறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது பற்றி ஆராய நிய மிக்கப்பட்ட விசேட குழு தன் அறிக்கையை 1943ல் சமர்ப்பித்தது. அப்போதைய கல்வியமைச்சர் திரு. சி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா தலைமை வகித்த இக்குழுவின் அறிக்கை இலங்கையின் கல்வி வரலாற்றில் பாரிய மாற்றங்களை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திய சிபார்சுகளைக் கொண்டிருந்தது. **'இந்நாட்டின் வரலாற்றிலேயே முதன் முதலாக கல்வியின் தரம், அமைப்பு, ஆகியவற்றைத் திட்டப்படுத்தவும் ஒழுங்கு படுத்தவும் எடுத்த வழிவகைகள், ஜனநாயக தத்துவம், கல்வி, கல்வி உளவியல் ஆகியன பற்றிய தற்கால கொள்கைகளின் அடிப்படையில் அமைந்திருந்தன. அத்தோடு இவை நாட்டின் பொருளாதார சமூக கலாசார தேவைகளை மனதிற்கொண்டு வகுக்கப்பட்டனவுமாகும்."**

'உளவிருத்தியும் குணம், திறமை ஆகியன உட்பட்ட பண்பும் கல்வியின் குறிக்கோள்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தன. கல்வி கற்பதற்கு எல்லோருக்கும் சம வாய்ப்பு - அதாவது தரம், அளவு ஆகிய இரண்டும் சார்ந்த சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற சனநாயகக் கொள்கை வெளியிடப்பட்டது. எல்லோருக்கும் கல்வி கற்பதற்கு சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கைக்கேற்ப முதலில் எல்லோருக்கும் ஆற்றலுக்கேற்ற சமவாய்ப்பு அளிக்கும் அடிப்படையில் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

1943ம் ஆண்டின் விசேட குழு சிபார்சுக்கமைய சகலருக்கும் கல்வியில் சமவாய்ப்பு அளிப்பதற்கான ஜனநாயகக் கோட்பாட்டுக்குப் பொருத்தமான இலவசக் கல்வித் திட்டம் 1.10.1945 முதல் அமுல் செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இந்நாட்டில் கல்வியில் சமவாய்ப்பு வழங்குவதற்காக பல முன்னேற்றமான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அவற்றைப் பின்வருமாறு சுருக்கமாகப் பட்டியல் படுத்தலாம்.

**01. இலவசக் கல்வித் திட்டம்**

**02. தாய் மொழிப் போதனை**

**03. புலமைப் பரிசில்கள்**

**04. கிராமப் புறங்களில் மத்திய கல்லூரிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. அரசு, பாடசாலைகளைப் பொறுப்பேற்றமை

06. இலவச மதிய போசனம்

07. இலவச பாடநூல்

08. இலவச சீருடை

09. பாடசாலைக் கொத்தணி முறை

10. உயர்கல்வி மூன்றாம் நிலைக் கல்வி விஸ்த ரிக்கப்பட்டமை

11. பொதுக் கலைத் திட்டம்

12. முறைசாராக் கல்வி - விஸ்தரிப்பு

13. ஆசிரியர் ஆட்சேர்ப்பு

14. மாணவர் கல்விக்கான ஏனைய உதவிகளும் சலுகைகளும்

Class No
Acc No 1793

## 1. இலவசக் கல்வித் திட்டம்:

1943ம் ஆண்டின் சிறப்பு அறிக்கையில் இலவசக் கல்வித் தத்துவத்தின் இரண்டு குறிக்கோள்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

(அ) 'ஒவ்வொரு தனியாளுக்கும் சமவாய்ப்பு இருக்க வேண்டும். எனவே அவருக்குத் தேவையான உள்ளார்ந்த ஆற்றல் இருக்குமெனில் அவர் நாட்டின் சமூக பொருளாதார அரசியல் வாழ்வின் மிக குறைந்த நிலைமையிருந்து மிக உயர்ந்த நிலைக்குத் தன்னை உயர்த்திக் கொள்ளலாம்.'

(ஆ) 'சனநாயக சமுதாயமொன்றின் கல்வி, எல்லாக் கட்டங்களிலும் இலவசமாக இருத்தல் வேண்டும்.'

கல்வியில் சமவாய்ப்புக் கோட்பாடு உயிர் பெற வேண்டுமானால் அது இலவசமாகக் கிடைக்க வேண்டும் என்பது இவ்விரு எடுகோள்களின் மூலம் தெளிவு படுத்தப்பட்டன. அதாவது, 'கல்வித் துறையில் நகர - கிராம, ஏழை - பணக்காரர்



Arasady Public Library
Municipal Council
Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன போன்ற வேறுபாடுகள் கருத்திற் கொள்ளப்படாது அரசாங்கம் வசதிகளைச் செய்து கொடுக்குமானால் அவ்வ சதிகளை அனுபவிப்பதற்கு சகல மாணவர்க்கும் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும். மேலும் நாட்டின் சகல சமூக இனங்க ளையும் ஒன்று சேர்ப்பதற்கும் ஒரே நாட்டினர் என்ற உணர்வை ஏற்படுத்துவதற்கும் உதவக் கூடியதாக இந்த சமவாய்ப்புத் தத்துவம் உதவ வேண்டும். கல்வியில் மக்களாட்சித் தத்துவம், சமவாய்ப்பு, கட்டாயக் கல்விக் கோட்பாடு, தேசிய உணர்வு என்பன சுதந்திரத்தின் பின்னர் இந்த நாட்டின் கல்வியை வழிநடாத்திச் செல்வதில் முன்னிரிமைகளை வழங்கியபோதி லும் இலவசக் கல்வித் திட்டமே இவற்றுக்கு சட்ட அடிப்படை களை வழங்கியது எனலாம்.

இலவசக் கல்வி முறையை கன்னங்கரா அறிமுகப்படுத்திய போது 'விலைமதிப்பற்ற முத்து' என்றார். அதுவரை இந்நாட்டில் கல்வியின் பயனைப் பெற்றவர்கள் மிகச் சிறுபான்மையினராகவே இருந்தனர். மேலும் அக்கல்வி முறை சமுதாயத்தை இரு பிரிவுகளாகப் பிரித்திருந்தது.

(1) அரசாங்க நிர்வாகப் பதவிகளைப் பெறுவதற்காக ஆங்கிலம் கற்ற வகுப்பினர், உயர் வகுப்பினர், சலுகை பெற்றவராகவும், வசதி படைத்தவராகவும் இருந்தனர்.

(2) தாய் மொழியில் கல்வி பெற்றோர் செல்வாக்கற்ற, வறிய மக்களாய் இருந்தனர்.

இந்தப் பிளவு மக்களின் ஒருமைப்பாட்டுக்குத் தடையாக வும், சனநாயக அரசின் அபிவிருத்திச் செயற்பாடுகளைத் தடைசெய்வதாகவும் அமைந்தது. அப்போது நடைமுறை யிலிருந்த அரசாங்க பாடசாலைகள் தாய் மொழிக் கல்வியை வழங்கின. அடிப்படையான கல்வியை மட்டுமே இவை வழங்கின. ஆங்கிலப் பாடசாலைகள் உயர்தரமான கல்வியை வழங்கின. தனியாரால் அல்லது சமயக் குழுக்களால் நடத்தப்பட்ட இப்பாடசாலைகள் அதிக கட்டணத்தை வசூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தமையால் சனத்தொகையில் 3% வசதியான மக்களின் பிள்ளைகளுக்கே அவை கல்வி வழங்கின.

ஒரு கிராமியப் பெற்றாரைப் பொறுத்தவரை ஆங்கிலக் கல்வியும், சிவில் சேவை, பொறியியலாளர், வைத்தியர், சட்டத்தரணி போன்ற உயர் உத்தியோகங்களைப் பெறுவதற்காக வாய்ப்பும் ஒரு போதும் அடையமுடியாத எட்டாக் கனியாகவே கருதப்பட்டது. அவர்கள் தம் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிக் கொள்ளக் கூடிய இலட்சியம் ரூபா 100/- சம்பளத்தில் சுய மொழி ஆசிரியராக வருவதொன்றேயாகும். இன்ப வசதிகளை கொண்டிருந்த தலைநகர பெரிய கல்லூரிகளும் கிராமப்புற உயர் கல்வி நிலையங்கள் எனக் கூறப்பட்ட ஆங்கிலப் பாடசாலைகளிலும் சேர்ந்து படிக்கும் வாய்ப்பு மிகச் சிலருக்கே கிட்டியது.

மிகத் திறமைசாலிகளாகப் பிறந்திருந்தாலும் வறிய குடும்பத்தில் பிறந்த காரணத்துக்காக கல்வி வாய்ப்பு இல்லாத நிலையே அன்று இருந்தது. அந்த நிலையை மாற்றவே கன்னங்கரா புதிய திட்டத்தைச் சமர்ப்பித்தார். அரச பேரவையில் அவர் **'அதிக விலையில் வழங்கப்பட்ட கல்வி இலங்கை அரச பேரவையால் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மூடிய புத்தகமாக இருந்த அது திறந்த ஆவணமாக மாற்றப்பட்டுள்ளது. செல்வந்தர்களின் தனியுரிமையாக விளங்கிய அது வறிய மக்களின் மீற முடியாத உரிமையாக்கப்பட்டுள்ளது'** (ஹன்சாட் 1944) எனக் கூறினார்.

இலவசக் கல்வித் திட்டத்தின்படி கல்வி முதலாம் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை இலவசமாக ஆக்கப்பட்டது. அப்போது நடைமுறையில் இருந்த உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் கட்டணம் அறவிடுவதை இச்சட்டம் ரத்துச் செய்தது. கல்விக்காக நிதிப் பொறுப்பை அரசு ஏற்றுக் கொண்டது. ஆசிரியர் சம்பளம் நேரடியாக அரசினால் வழங்கப்பட்டது. பாடசாலைகளுக்காக உபகரண நன்கொடை வழங்கப்பட்டது. இந்த உதவி நன்கொடைத் திட்டத்தின் கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்க முடியாத பாடசாலைகளும் போதுமானதும் பொருத்த மானதுமான கல்வியை வழங்க வேண்டியிருந்ததோடு இது தேசிய கல்விக் குறிக்கோள்களுக்குள் உறுதிப்படுத்தப்பட்டு அவை அரசாங்க மேற்பார்வையின் கீழ் கொண்டுவரப்பட்டன. கல்வி ஒரே பரிபாலனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இதன் முன்னர் அரசாங்கப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி இலவசமாக வழங்கப்பட்டது. ஆனால் ஆங்கில மொழி மூலமான கல்வியும் உயர் கல்வியும் கட்டணம் செலுத்தியே கற்க வேண்டியிருந்தது. புதிய திட்டத்தின் கீழ் உயர் கல்வியும் இலவசமாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இந்த திடீர் மாற்றத்தால் இலவசமாகக் கல்வி பெறும் வாய்ப்பைப் பெற்று உடனடிப் பலன் பெற்றோர் வசதியான பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வி பெற்ற உயர் வர்க்கத்தினரேயாவர்.

ஆயின் இலவசக் கல்வித் திட்டம், கல்வியில் சமவாய்ப்பை விஸ்தரிப்பதனூடாக கல்வியில் பங்குபற்றலை (Participation) அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இலங்கை, ஆசியாவிலேயே உயர் எழுத்தறிவு வீதத்தைப் பெற்றி ருப்பதற்குக் காரணம் இலவசக் கல்வித் திட்டமும் மாணவர்க்கு வழங்கப்பட்ட உதவிகளுமே எனக் கூறப்படு கின்றது.

கல்வி வாய்ப்பின் விரிவினைப் பின்வரும் அட்டவணைகள் தெளிவுபடுத்தும்.

| ஆண்டு | பாடசாலைத் தொகை | மாணவர் தொகை | எழுத்தறிவு வீதம் |
|---|---|---|---|
| 1946 | 5159 | 9,33,358 | 57.8% |
| 1965 | 9477 | 23,29,403 | 77.1% |
| 1986 | 10,000 | 37,51,708 | 87.2% |

கல்வி வாய்ப்புக்கள் விரிவாக்கத்தின் பயனாக நகரப்புற கிராமப்புற சமமின்மையும் ஆண் - பெண் சமமின்மையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்துள்ளன. சுமார் 25 வருடங்களில் ஏற்பட்ட மாற்றத்தை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| 1930களில் பங்குபற்றாமை ( 5-14) | 1963 இல் பங்குபற்றல் (5-14) |
|---|---|
| ஆண் 50 வீதத்துக்கும் அதிகம் | 76.7 வீதம் |
| பெண் 75 வீதம் | 72.6 வீதம் |

இவ்வித அதிகரிப்பு இடைநிலைக் கல்வியிலும் காணப்பட்டது.

**சேர்வு வீதம்**

| வகுப்புக்கள் | 1952 | 1957 | 1965 |
|---|---|---|---|
| 9 - 10 | 69,233 | 1,51,265 | 2,94,253 |
| 11 - 12 | 5000 | - | 34,679 |

இலவசக் கல்வி வாய்ப்புக்கள் சுதந்திரத்தின் பின்னர் தொடர்ந்து வந்த அரசாங்கங்களின் நடவடிக்கைகளால் மேலும் விஸ்தரிக்கப்பட்டன.

## 02. தாய்மொழிப் போதனை

தாய் மொழிப் போதனை இந்நாட்டின் கல்வி வரலாற்றில் மற்றுமோர் புரட்சிகர நடவடிக்கையாகும். ஆங்கிலக் கல்வியும் மேற்கத்தைய கலாசாரமும் மக்கள் மனதில் மகத்துவத்தைப் பெற்றிருந்த ஒரு காலத்தில் தாய் மொழிப் போதனை முக்கிய திருப்பம் எனக் கருதப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930 களில் கன்னங்கரா தாய் மொழிப் போதனை பற்றி அடிக்கடி சட்ட நிரூபண சபையில் கூறி வந்தார். தத்தம் தாய் மொழி பற்றி அறிந்திராத ஒரு சமூகத்தின் மத்தியிலேயே இவ்வாறு கூறி வந்தார். 1931இல் சகல ஆங்கிலப் பாடசாலைகளிலும் 9ஆம் வகுப்பு வரை தாய் மொழி கற்பிக்கப்பட வேண்டும் என்று பிரமாணம் ஒன்று கட்டாயப்ப டுத்தியது. 1933இல் பாடசாலைப் பரிசோதகர் சுயமொழி ஒன்று தெரியாவிட்டால் நியமனம் இல்லை என்பதும் விதியாக இருந்தது. பயிற்றப்பட்ட ஓர் ஆசிரியர் இரு மொழி தெரிந்த வராக இருக்க வேண்டும் என்பதும் அமைச்சின் தீர்மானமாக இருந்தது. உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் தாய் மொழி ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் பாலர் வகுப்பிலிருந்து அங்கு ஆங்கிலமே மொழி மூலமாக இருந்தது. 1939இல் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான சகல பரீட்சைகளிலும் சுய மொழி ஒரு கட்டாய பாடமாக ஆக்கப் பட்டது. இத்தீர்மானத்தின் பின்னர் சிங்களம்/தமிழ் கற்பிப்பது பற்றி அலட்சியமாக இருந்த பல ஆங்கிலப் பாடசாலைகளின் பாடத்திட்டத்தில் இப்பாடங்கள் மிகப் பெரும் அக்கறையைப் பெறலாயின.

**'1505 இன் பின் அடுத்தடுத்து இலங்கையின் கரையோர மாகாணங்களை ஆட்சிசெய்த போர்த்துக்கேயரும், டச்சுக்கார ரும் இறுதியாக பிரித்தானியரும் சுதேச மக்களின் மொழி, ஆன்மீக உணர்வுகள், அபிலாசைகள் என்பவற்றையும் மக்களின் சுதந்திரத்தையும் கொன்றொழித்தனர்.**

1943 இன் விசேட குழுவின் அறிக்கை பின்வருமாறு கூறியது.

1. ஆரம்ப பாடசாலைகளின் போதனாமொழி தாய்மொழி யாகும். ஆங்கிலம் கட்டாய இரண்டாவது மொழியாகும்.

2. இடைநிலைப் பாடசாலைகளில் தாய்மொழி மூலம் அல்லது இரு மொழி மூலம் கல்விப் போதனை நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இடைநிலைப் பாடசாலை உயர் வகுப்புக்களில் போதனாமொழி ஆங்கிலமாக அல்லது சிங்களமாக அல்லது தமிழாக அல்லது இரு மொழியாக இருக்கும்.

போதனா மொழி சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்ட புதிய சட்டம் சகல பாடசாலைகளிலும் ஆரம்பக் கல்வி தாய் மொழியில் வழங்கப்பட வேண்டும் என்பது நிச்சயப்படுத்தப்பட்டது. முன்பு இடைநிலைக் கல்வி ஆங்கில மொழி மூலமே போதிக்கப்பட்டது. சுய மொழிப் பாடசாலைகள் எழுத்தறிவுடன் கூடிய ஆரம்பக் கல்வியை மட்டுமே வழங்கின. புதிய நடவடிக்கை சுய மொழி மூலம் முழுமையான கல்வியைப் பெறுவதற்கு இடமளித்தது. சமூக பொருளாதார தடைகளால் பாதிக்கப்பட்டிருந்த மக்களைப் பொறுத்தவரை இந்நடவடிக்கை சகல பிரிவினரையும் சமத்துவ நிலைக்கு கொண்டு வந்தது.

1945 ஒக்டோபர் 1ம் திகதி முதல் சகல பாடசாலைகளிலும் தாய் மொழிப் போதனை ஆரம்பமாகியது. கல்வி வாய்ப்பின் சமத்துவத்தை ஊக்குவிக்கும் முக்கிய நடவடிக்கையாக இது அமைந்தது. வேறு நடைமுறைசெயன்முறை இடர்பாடுகள் காரணமாக ஆரம்பக் கூட்டத்தில் இது ஆரம்பக் கல்விக்கு மட்டுப்படுத்தப்பட்டது. இது படிப்படியாக பின்வருமாறு விஸ்தரிக்கப்பட்டது.

| ஆண்டு | வகுப்பு | ஆண்டு | வகுப்பு |
|---|---|---|---|
| 1945 | 1 | 1954 | 7 |
| 1946 | 2 | 1955 | 8 |
| 1947 | 3 | 1956 | 9 |
| 1948 | 4 | 1957 | 10 |
| 1949 | 5 | 1958 | 11 |
| 1953 | 6 | 1959 | 12 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960 - பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவுகள் தாய் மொழியில் ஆரம்பம்

இந்தப் போதனா மொழி மாற்றங்களால் சுதந்திரத்தின் பின்னர் ஆரம்பக் கல்வியிலும் இடைநிலைக் கல்வியிலும் தீவிரமான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

| ஆண்டு | பாடசாலைத் தொகை | மாணவர் தொகை |
|---|---|---|
| 1947 | 5915 | 1025836 |
| 1957 | 7374 | 1873328 |
| 1967 | 9585 | 2558525 |
| 1977 | 9648 | 2566381 |
| 1984 | 9914 | 3625867 |

## 03. புலமைப் பரிசில் திட்டம்

புலமைப் பரிசில் திட்டம் சம வாய்ப்புக் கோட்பாட்டுக்கு உதவிய ஒரு திட்டமாகும். உயர் கல்வியைப் பெறுவதற்கும் உயர் கல்லூரிகளில் கல்வி பெறுவதற்கும் வறுமை தடையாக அமைந்தமையால் எத்தனையோ திறமை வாய்ந்த மணம் பரப்ப வேண்டிய புஷ்பங்கள் அதற்குரிய வாய்ப்பு இன்மையால் இளமையிலேயே வாடிக் கருகி மண்ணோடு மண்ணாய் மறையும் பரிதாப நிலை இலவசக் கல்வித் திட்டம் செயற்படுவதற்கு பல வருடங்களுக்கு முன்பே உணரப்பட்டு வந்துள்ளது.

1918லிருந்து டென்ஹாம் புலமைப் பரிசில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது விரிவானதாக இருக்கவில்லை. தற்போதைய புலமைப் பரிசில் திட்டம் 1940 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. பிரதேச வாரியாக நிறுவப்பட்டிருந்த விடுதிகளுடன் கூடிய மத்திய பாடசாலைகளுக்கு திறமையான,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதியற்ற மாணவர்களை அனுமதிக்கும் இந்தப் புலமைப் பரிசில் திட்டம் 1961 வரை நடைமுறையிலிருந்தது. 8ம் வகுப்புபரீட்சையில் சித்தியெய்திய மாணவர்கள் இப்பாடசாலைகளில் விஞ்ஞானத் துறையில் கல்வி பெறுவதற்கான வாய்ப்புக்களைப் பெற்றனர். பல்கலைக்கழகக் கல்வியையும் தொடர்ந்து பெறக்கூடியதாக இருந்தது.

1961 லிருந்து 1972 வரை ஜாதிக நவோதயா புலமைப் பரிசில் திட்டம் நடைமுறைக்கு வந்தது. 7ம், வகுப்பில் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையிலிருந்து திறமையான மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு உயர் கல்லூரிக்கு அனுமதிக்கப் பட்டதுடன் உதவிப் பணமும் வழங்கப்பட்டது. இப்பரீட்சை பின்னர் 5ம் வகுப்பில் நடாத்தப்பட்டு பின் மீண்டும் 1988 முதல் ஆண்டு 5 இலிருந்து நடாத்தப்பட்டது. 1995 இல் நடத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைகள் புதிய பரீட்சைத் திட்டத்தின் அடிப்படையில் நடைபெறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டன.

**சுதந்திரத்தின் முன்னரும் பின்னரும் நடைமுறையிலிருந்த புலமைப் பரிசில் திட்டங்களின் மூலம் கிராமப் புறங்களில் பிறந்தவர்களாக இருந்தும், இந்நாட்டின் கல்வி, கலாசார, அரசியல், பொருளாதார, விஞ்ஞான, நிர்வாக துறைகளின் மேம்பாட்டுக்காக உழைத்த எத்தனையோ அறிஞர்களும், தலைவர்களும், நிபுணர்களும் உருவாகியுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.**

1981ம் ஆண்டில் அன்றைய வர்த்தக அமைச்சராவிருந்த திரு லலித் அத்துலத் முதலியால் ஆரம்பிக்கப்பட்ட மகாபொல உயர்கல்வி புலமைப் பரிசில் திட்டமும் உயர் கல்வி வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கான ஒரு திட்டமெனக் கருதலாம். இதன் மூலம் வருடாந்தம் ஆயிரக்கணக்கான மாண வர்கள் உயர் கல்வி பெறுவதற்குரிய வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர். பாடநூல், வதிவிடம், உபகரணம், உணவு போன்ற செலவுகளைத் தாங்கமுடியாது ஏங்கி நின்ற ஏழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்க்கு இது ஓர் வரப்பிரசாதமாகும். இத்திட்டத்தின் மூலம் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறுவோரும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறுவோரும் மாதாந்தம் நிதி உதவியைப் பெற்று தமது கல்விச் செலவின் ஒரு பகுதியை நிறைவு செய்ய முடிகின்றது. 1981/82 - 1990/91 வரையிலான பத்து வருடங்களில் அரசு 27,174 மகாபொல புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளது.

## 4. கிராமப் புறங்களில் மத்திய கல்லூரிகள்:

தரமான கல்வியை வழங்கிய பாடசாலைகள் பெரும்பாலும் நகரப் புறங்களிலும் அண்மிய பிரதேசங்களிலுமே நிறுவப் பட்டிருந்தன. கிராமப்புற மாணவரைப் பொறுத்தவரை தலை நகருக்கு அல்லது நகரையண்மிய இடங்களுக்குச் சென்று உயர்தரமான கல்வியைப் பெறுவது புவியியல் ரீதியில் பெரும் தடைக்கல்லாக அமைந்தது. ஏழைகளுக்கும் உயர் கல்வி வாய்ப்புக்களை வழங்கும் கன்னங்கராவின் திட்டம், தடை களை அகற்றுவதற்கு முயற்சித்தது. நகரப் பாடசாலைகளில் வழங்கப்பட்ட உயர்தரமான கல்வியை கிராமங்களுக்கும் எடுத்துச் செல்ல அவர் கையாண்ட வழி மத்திய பாடசாலை களை கிராமங்களிலும் அமைத்தமையாகும்.

அவரது உண்மையான நோக்கம், கிராமப்புறத்தின் மிகச் சிறு தொகை, ஆனால் மிகத் திறமையான மாணவர்க்கேனும் உயர்தரக் கல்வியை வழங்க வேண்டும் என்பதாகும். இது குறித்து அவரது கருத்தாவது,

**'சென் தோமஸுக்கும், வெஸ்லிக்கும், ஆனந்தாவுக்கும் அல்லது றோயலுக்கும் தம் பிள்ளைகளை அனுப்ப சக்தியற்ற பெற்றார்களின் ஏழைப் பிள்ளைகளுக்காகவே இத்தகைய பாடசாலைகளை நிறுவுகின்றோம். உயர் கல்வியால் வரும் நலன்களை பெரிய நகரங்களில் வாழும் பிள்ளைகள் மட்டும் ஏன் அனுபவிக்க வேண்டும்? மேலும் 'எங்கள் தொகுதிகளில் தம் பெற்றாரின் மட்டுப்பாடுகளால் தன்னை ஓர் சுயமொழி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராக வருவதற்கு அப்பால் மேலே வருவதற்கு எத்தகைய நம்பிக்கையையும் வைக்க முடியாத ஒரு பிள்ளை - ஆனால் அற்புதமான மூளையுடைய அழகிய பிள்ளை வாழும் எங்கள் தொகுதிகள் றோயல் கல்லூரியைப் போன்ற பாடசாலைகளை அல்லது அதைவிட சற்றுக் குறைந்த தரமுடைய பாடசாலைகளை ஏன் நாங்கள் ஆரம்பிக்கக் கூடாது? ஏன் அக்குழந்தை ஏனையவர்களுடன் சமமான வாய்ப்பினைக் கொண்டிருக்கக் கூடாது?' எனவும் கூறினார்.

(அரசாங்க சபை ஹன்ஸார்ட் 1944 பக்கம் 925)

முதலாவது மத்திய பாடசாலை அமைச்சரின் தொகுதியான 'மத்துகம'வில் தாபிக்கப்பட்டது. 1943 இல் ஒன்பதாக அதிகரித்து 1944 இல் 24 ஆக உயர்ந்தது. 1946 ல் 50; 1947 இல் 54 மத்திய பாடசாலைகள் இருந்தன.

1945 இல் இலவசக் கல்வித் திட்டம் நடைமுறைக்கு வந்தபோது மத்திய பாடசாலைகளுக்கு அனுமதி பெற போட்டி நிலை தோன்றியது. இப் பாடசாலைகளில் பொதுக் கல்வியும் தொழில் பயிற்சி வழங்கும் செயன்முறைக் கல்வி யும் வழங்கப்பட்டது. விஞ்ஞானக் கல்வி, இசை, நடனம், சமயக் கல்வி என்பனவும் கற்பிக்கப்பட்டன.

மத்திய பாடசாலைகள் புலமைப் பரிசிலையும் ஆங்கிலக் கல்வியையும் கிராமத்துக்குக் கொண்டுவந்ததோடு திறமை யான ஏழை மாணவர்கள் உயர் நிலைக்குச் செல்லவும் வாய்ப்பு வழங்கியது. இப்பாடசாலைகள் ஏழை மாணவர்க்கு தங்கு மிடம், உணவு, உடை என்பவற்றையும் வழங்கின.

மத்திய பாடசாலைகள் கிராமப்புற திறமையான மாண வர்க்கு உயர் கல்வியை வழங்கி சமுதாயத்தில் சமத்துவத்தை தோற்றுவிப்பதற்கு முக்கிய பங்காற்றின எனலாம்.

தொடர்ந்து வந்த காலங்களிலும் கிராமப்புறப் பாடசாலை களை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் நடைமுறைப்ப டுத்தப்பட்டன. தொகுதிகள் தோறும் மத்திய மகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாலயங்கள், பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் மத்திய கல்லூரிகள் ஆகிய திட்டங்களின் கீழ் சகல வசதிகளும் கொண்ட பாடசாலைகளாக கிராமப்புறப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. தேசிய பாடசாலைகள் திட்டம் கிராமப் புறங்களிலும் உயர் கல்வியைக் கொண்டு செல்லும் புரட்சிகர திட்டமாகும்.

## 05. அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்றமை:

இலவசக் கல்வித் திட்டம் அமுலுக்கு வருமுன்னர் நாட்டி லிருந்த உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், அரசாங்க பாடசாலைகள் என்பன 1945ம் ஆண்டின் பின்னரும் நாட்டில் கல்வியை வழங்கிக் கொண்டி ருந்தன.

1939ம் ஆண்டின் 31ம் இலக்க கல்விச் சட்டத்தின்படி பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கும், மூடுவதற்கும், கட்டாயக் கல்வியை அமுல் படுத்துவதற்கும் அதிகாரம் கல்வி நிர்வாகக் குழுவிடமே ஒப்படைக்கப்பட்டது. 1943ம் ஆண்டின் விசேட குழு அறிக்கை, நடைமுறையிலிருந்த கல்வி நிர்வாக முறையை அனுமதித்ததுடன் சமயக் குழுக்களுக்குச் சொந்தமான பாடசா லைகள் பரவுவதை வரையறைக்குட்படுத்த வேண்டும் எனவும் கூறியது. இதன் பின் 1947ம் ஆண்டில் 26ம் இலக்க கல்வி (திருத்த) சட்டம், அரசு எதிர்பார்க்கும் அளவு திருப்தியாக இயங்காத பாடசாலைகளை மூடி விடும் அதிகாரத்தை அரசுக்கு ஒப்படைத்தது.

1950ன் கல்வி வெள்ளையறிக்கையின்படி 'உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் உதவி, பாடசாலை நிர்வகிப்பவரின் சமயத்தைச் சேர்ந்த பெற்றோர்க ளின் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப தீர்மானிக்கப்பட வேண்டும்' என்ற முன்னய சட்டத்தின் (1947) விதி நீக் கப்பட்டது. இதனால் உதவி நன்கொடை பெறும் பாடசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைகளை நிறுவுவதற்கு இருந்த தடையும் நீக்கப்பட்டது. தொடர்ந்து சமயக் குழுக்கள் தத்தம் சமய பாடசாலைகளை விரிவுபடுத்தவும் அவற்றில் இந்து, பௌத்த சமயத்தைச் சார்ந்த பெற்றோரின் குழந்தைகளைச் சேர்த்து அவர்களுக்கு சமயத்தைப் பரப்புவதற்கும் வழி பிறந்தது.

1950 வெள்ளையறிக்கையின் படி இலவசக் கல்வியுடன் தொடர்பில்லாத சகல தனியார் பாடசாலைகளும் பதிவு செய் யப்பட்டு ஒரு பதிவாளரின் கீழ் நிர்வகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த வெள்ளையறிக்கையில் தெரிவிக் கப்பட்ட பல சிபார்சுகள், இந்த தசாப்தத்தில் கல்விக்கான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்தியதோடு மீண்டும் மிஷ னறிக்கல்விமுறை தலையெடுக்கக் காரணமாகவும் இருந்தது. தவிர இக்காலப்பகுதியில் நாட்டில் சுய மொழிக் கல்வி நடைமுறையில் இருந்தமையும் இதனை ஊக்குவித்தது எனலாம். அரசாங்கப் பாடசாலைகளும், உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும் கல்வியை வழங்கின.

சமய வாரியான பாடசாலை முறை சுதந்திரத்தின் பின்னரும் தொடர்ந்து ஊக்குவிக்கப்பட்டமையால் அரசாங்கப் பாடசா லைகளுக்கான செலவுகளை விட இலவச கல்வித் திட்டத்தின் கீழ் இயங்கிய உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் செலவின அதிகரிப்பு 274.3 சதவீதமாகும். அதேவேளை அர சாங்க பாடசாலைகளின் செலவின அதிகரிப்பு 86.7 சதவீதமாகும்.

1959 இல் சிங்களத்தில் பௌத்த கல்வி பற்றி ஆராய்வ தற்காக நியமிக்கப்பட்ட குழு உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்க வேண்டும் என சிபார்சு செய்தது.

நாட்டின் கல்வி முறை அரசினது முழுக் கட்டுப்பாட்டிலும் நேரடி நிர்வாகத்திலும் இருக்கும் போதுதான் சம வாய்ப்புக்கு அது வழிவகுக்கும் என்று கொண்ட புதிய அரசாங்கம் 1960 இல் 'உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும் ஆசிரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாலைகளும் (விசேட விதிகள்) சட்டத்தின் கீழ் நாட்டி லுள்ள சகல பாடசாலைகளையும் அரசு பொறுப்பேற்ப தற்கு வழிவகுத்தது. இதன்படி அரசு விதித்த நிபந்தனை களுக்கமைய கட்டணம் அறவிடாத் இலவச பாடசாலைகள், கட்டணம் அற விடும் தனியார் பாடசாலைகள் ஆகிய 63 பாடசாலைகளைத் தவிர்ந்த 1750 பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றுக் கொண்டது.

நிலம், உடைமைகள் கையளிப்பதிலுள்ள பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காக 1961ல் 'உதவி நன்கொடை பெறும் பாடசா லைகளும் ஆசிரிய கலாசாலைகளும் விசேட (மேலதிக) விதி கள் சட்டம்' நிறைவேற்றப்பட்டது. 1961 மார்ச் 8 முதல் இச்சட்டங்கள் அமுல் செய்யப்பட்டன.

அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டமை சம வாய்ப்புக்கான முக்கிய நடவடிக்கையாகும். இதன் மூலம் உயர் வர்க்கத்தினரை உருவாக்கும் உயர் பாடசாலை ஆதிக்கம் உடைந்தது எனலாம். 1981ம் ஆண்டிலும் பல தோட்டப் பாடசாலைகளையும் அரசு பொறுப்பேற்றது. எனினும் எஞ்சிய ஒரு சில தனியார் பாடசாலைகளும் கையேற்கப்படும் போதுதான் கல்வியில் அரசினது பூரணத்துவமான பொறுப்பு ஏற்படும் எனலாம்.

## 06. இலவச மதிய போசனம்:

மதிய போசனம் வழங்கும் நடவடிக்கை இலவசக் கல்வித் திட்ட எண்ணக்கரு தோன்றுவதற்கு முன்னரே ஏற்பட்டதாகும். 1930 களில் நாட்டின் சில பகுதிகளில் மக்களைத் தாக்கிய மலேரியாக் காய்ச்சலின் விளைவாக மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்த மாணவர்க்கு நிவாரணம் அளிக்கும் வகையில் சில பகுதிகளில் போசாக்குள்ள மதிய உணவு இலவசமாக வழங்கப்பட்டது. பின் நாடு முழுவதும் இத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1936 - 37 வரவு செலவுத் திட்டங்களில் இந்த நடவடிக்கைக் கென அரசினால் நிதி ஒதுக்கப்பட்டது. 1939 இல் 1213 பாடசாலைகள் மதிய உணவு வழங்கப்படும் பாடசாலைப் பட்டியலில் அடங்கியிருந்தன. சில பகுதிகளில் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்த முடியாத அளவு நிதி நிலை போதாதிருந்தது. 1944இல் இது சம்பந்தமான பிரச்சினை அரச பேரவையில் எழுந்தபோது அப்போதைய அரச பேரவை உறுப்பினர் சமரக்கொடி, 'சகல மாணவர்க்கும் மதிய உணவு வழங்க வேண்டாம்' எனக் கூற அமைச்சர் கன்னங்கரா, 'சகல மாணவர்களும் மதிய உணவு வழங்கப்படுவார்கள்' என்றார். அவருடைய தூரநோக்கு இந்நாட்டின் சகல மாணவர்களும் இத்திட்டத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதாகும்.

உடல், உள ஆரோக்கியங்கள் ஒரு மாணவனின் கல்வி அடைவினைப் பாதிக்கின்றது. போஷாக்கு - உணவு இன்மை யால் மாணவர் ஆரோக்கியம் பாதிப்படையக் கூடாது என்ப தற்காக இது நடைமுறைப்படுத்தப்பட்டது. மாணவர் ஒரே வகுப்பில் மீளத் தங்குவதையும், இடை விலகுவதையும் இது தடுக்கின்றது. பங்குபற்றல் வீதத்தையும் அதிகரிக்கின்றது. மனிதவள அபிவிருத்தியைப் பொறுத்தவரை ஒரு மாணவனின் ஆரோக்கியத்துக்கும் போஷாக்குக்கும் இடையிலான தொடர்பு முக்கியமானது.

1951இல் யுனெஸ்கோவால் நடாத்தப்பட்ட சர்வதேச பொதுக்கல்வி மகாநாட்டு அறிக்கை 'போசாக்குக் குறை பாட்டால் எந்த மாணவனும் அவனது பாடசாலை நடவடிக்கை யிலிருந்து தடுக்கப்படக் கூடாது' எனக் கூறியது.

1936ல் மதிய உணவாக சோறு வழங்கப்பட்டது. 1953 இன் பின்னர் பாணும் பாலும் வழங்கப்பட்டது. சில காலம் வழங் கப்படவில்லை. 1.10.56 லிருந்து ' மீண்டும் வழங்கப்பட்டது பாணும் பாலும் 'கெயர்' மூலம் (பி.எல். 480 திட்டத்தின் கீழ்) வழங்கப்பட்டது. சில காலம் வழங்கப்படாது மீண்டும் பிஸ்க்கட் வழங்கப்பட்டது. 1989 மே மாதத்திலிருந்து ரூபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று பெறுமதியான சமைத்த உணவு அரசினால் வழங் கப்பட்டது. பின் ரூபா மூன்றுக்கான உணவு முத்திரை வழங்கப்பட்டது. 1994லிருந்து முத்திரைகள் நேரடியாக கிராம சேவகர் மூலம் வழங்கப்படலாயிற்று.

இலவச மதிய உணவுத் திட்டத்தின் குறிக்கோள்கள் கல்வி சார்பானவையாகும்.

1. மாணவரின் ஆரோக்கியத்தையும் போஷாக்கு தரத்தி னையும் பேணுதல்.

2. பாடசாலைகளில் வர்க்க பேதமற்ற ஒரு சமுதாயத்தை தோற்றுவிக்கும் மனப்பாங்கை விருத்தி செய்தல்.

போஷாக்கின்மையால் பாடசாலைக் கல்வி பாதிக்கப்படும் வறிய மாணவரைப் பொறுத்தவரை அவர்களை கல்வியில் பங்கு கொள்ளச் செய்ய - வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள இலவச மதிய உணவுத் திட்டம் உதவியது.

## 07. இலவச பாடநூல் :

இலவசக் கல்வியை முன்னெடுத்துச் செல்லும் வகையில் இலவசப் பாடநூல் வினியோகமும் விசேட தேவைப்பாடு டைய மாணவர்களுக்கு இலவச உபகரணங்கள் வழங்கப்பட்ட மையும் கல்விச் சமவாய்ப்பை ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஒரு கட்டமாகும். இலவச பாடநூல் வழங்கும் கருத்தை 1940 இல் கன்னங்கராவும் கொண்டிருந்தார். அப்போது கிராமங்க ளில் அனேக வறிய மாணவர்கள் புத்தகங்களை விலை கொடுத்து வாங்க முடியாமலுள்ளனர் எனக் குறிப்பிட்டார்.

அரச பேரவையில் இலவசக் கல்வித் திட்டம் விவாதிக் கப்பட்டபோது அப்போது பேரவை உறுப்பினராகவிருந்த திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனா, சகல மாணவர்க்கும் இலவசமாக பாடநூல்கள் வழங்கப்பட வேண்டும் எனும் கருத்தை 24.01.1945 இல் தெரிவித்தார். அப்போது சகல மாணவர்க்கும் வழங்கப்படாது மாத வருமானம் ரூபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75/-க்குட்பட்ட வறிய பெற்றோரின் பிள்ளைகளுக்கு மட்டும் சில முக்கிய பாடங்களுக்கான நூல்கள் வழங்கப்பட்டன. ஜே.ஆர். பின்னர் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் முதலாவது ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் 1980ம் ஆண்டில் முதன் முறையாக இலவச பாடநூல்களை வழங்கி இலவசக் கல்விக்கு உரமூட்டினார் எனலாம். வருடாந்தம் பெருந்தொகைப் பணத்தை அரசு இதற்கெனச் செலவிட்டுள்ளது.

| | |
|---|---|
| 1980 இல் | 57.8 மில்லியன் ரூபாய் |
| 1985 இல் | 118.1 மில்லியன் ரூபாய் |
| 1990 இல் | 235.4 மில்லியன் ரூபாய் |
| 1992 இல் | 330.8 மில்லியன் ரூபாய் |

1980 லிருந்து 10ம், வகுப்பு வரையான மாணவர்கள் அனைவருக்கும் இலவசமாக பாடநூல்கள் வழங்கப்பட்டன. 1982 லிருந்து தம்ம பாடசாலைகளுக்கும் இது விஸ்தரிக்கப்பட்டது.

இத்திட்டத்தினால் பாட நூல்களுக்கென பெற்றார் செலவிடும் பெருந்தொகைப் பணம் மீதப்படுத்தப்பட்டதோடு வறுமை நிலை காரணமாக பாடநூல் இன்றி பாடசாலையை விட்ட அல்லது பாடசாலையில் சேராத மாணவர்க்கு இது பேருதவியாகவும் அமைந்தது.புள்ளி விபரங்களின்படி இலவச பாடநூல் விநியோகத்தினால் மாணவர் பங்குபற்றும் வீதம் அதிகரித்திருந்தமையும், இடை விலகல் வீதம் குறைந்துள்ளமையும் அறிவிக்கப்பட்டது.

மேலும் வலது குறைந்த மாணவர் நலன் கருதி செவிப்புலன் சாதனங்களையும் கண்ணாடி போன்றவற்றையும் 'பிரெய்லி' எழுத்துமுறை உபகரணங்களையும் வழங்கி வருகின்றது. இதன் மூலம் அத்தகையோரின் கல்வி வாய்ப்புக்கும் உதவியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. இலவச சீருடை விநியோகம்

சீருடை விநியோகம் ஒரு முற்போக்கான திட்டமாகும். இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மறைந்த ஆர். பிரேமதாஸா 18.01.1993 இல் இத் திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார். முதலாவது விநியோகத்திற்காக 600 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. நாட்டில் கல்விபயிலும் 44 இலட்சம் மாணவர்கள் முதன் முறையாக இதன் பயனை அனுபவித்தனர். இத்திட்டம் கல்வியில் சம வாய்ப்பை மட்டுமன்றி மாணவர் உள்ளங்களில் சமத்துவத்தை விதைப்பதற்கும் வழி செய்தது எனலாம்.

வறிய மாணவரும் வசதிபடைத்த மாணவரும் ஒரே தரமான நிறமான சீருடைகளை அணிந்து வகுப்பறைச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது அங்கு நீதி, சமத்துவம் என்பன பற்றிய மனப்பாங்கு விருத்தியடைகின்றது. ஒழுங்கான உடைகள் இன்மையால் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாதிருந்த கிராமப்புற, சேரிப்புற வறிய மாணவரைப் பொறுத்தவரை திட்டம் மிகப் பயனுள்ளதாகும்.

## 09. பாடசாலைக் கொத்தணி முறை

1980 களின் பிற்பகுதியில் அரசு நிர்வாகத்தை மக்கள் காலடிக்கு எடுத்துச் செல்லும் முயற்சியில் அக்கறை காட்டியது. கல்வி நிர்வாகத்திலும் இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டன.

பாடசாலைக் கொத்தணி அமைப்பு என்பது 1981 கல்வி வெள்ளையறிக்கையில் முன் மொழியப்பட்டு பின்னர் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. 1988ற்குள் நாட்டில் சகல மாவட்டங்களிலும் இம்முறை ஏற்படுத்தப்பட்டது. இத னால் நாட்டின் கல்வி நிர்வாகம் அமைச்சு - பிராந்தியம் - மாவட்டம் - கோட்டம் - கொத்தணி என்ற தொடர் இணைப் பிற்குள் கொண்டுவரப்பட்டது. முன்னர் வட்டாரம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக்கப்பட்ட நிர்வாக அலகே கொத்தணி என மாற்றம் பெற்றது எனலாம். ஒரு வட்டாரக் கல்வியதிகாரியின் இடத்தை புதிய முறையில் கொத்தணி அதிபர் நிரப்பினார். இதன் நோக்கங்கள்

01. வளங்களை உள்ளூர் மட்டத்தில் சமமாகப் பங்கிடலும் உச்சமாகப் பயன்படுத்தலும்.

02. கிட்டிய மேற்பார்வை, மதிப்பீடு, ஆலோசனை முகாமைத்துவச் செயற்பாடு.

03. நாட்டின் கல்வி அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதும் அபிவிருத்திச் செயற்பாட்டினை உறுதி செய்வதும்.

ஒரு மூலாதாரப் பாடசாலையின் அதிபரே கொத்தணியின் நிர்வாகத் தலைவராகச் செயல்பட்டார். உள்ளூர் மட்டத்தில் சில செல்வாக்குள்ள பாடசாலைகள் மட்டும் வளங்களை அனுபவிக்க பல பாடசாலைகள் வளங்களைப் பெற்றுக் கொள்ள முடியாது கல்வியில் பின்னடைவதனை புதிய திட்டம் சீர் செய்யும் என எதிர்பார்க்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் வளத்தை சீராகப் பங்கிடல், வளப் பயன்பாடு, ஆசிரியர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்தல், ஒரே அலகாக கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பன கல்வியில் சம வாய்ப்பை ஏற்படுத்தும் முயற்சியாகும். கிட்டிய மேற்பார்வை மூலம் சிறந்த முகாமைத்துவத்துக்கு வழி வகுப்பதாகவும் இது அமைந்தது. கொத்தணிக்குட்பட்ட அதிபர், ஆசிரியர், ஊழியர்களின் சம்பள உயர்வு, சேவை நீடிப்பு, இடமாற்றம் ஆகிய தாபன விடயங்களிலும் பரீட்சைக் கடமைகளுக்குச் சிபார்சு செய்தல் போன்ற விடயங்களிலும் கல்வி அலுவலகத்துக்கு சிபார்சு செய்யும் அதிகாரமும் கொத்தணி அதிபருக்கு வழங்கப்பட்டிருந்தது.

கொத்தணி முறை எதிர்பார்க்கப்பட்ட அளவு பயன்தராவிடினும் உள்ளூர் மட்டத்தில் சம வாய்ப்பை ஏற்படுத்தும் நிர்வாக அலகாக இது ஏற்பாடு செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. உயர் கல்வியும் மூன்றாம் நிலைக் கல்வியும் விஸ்தரிக்கப்பட்டமை:

உயர் கல்வி வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டமையும் பிரதேசவாரியாக மூன்றாம் நிலைக் கல்வி விஸ்தரிக்கப்பட்டமையும் சமவாய்ப்புக்கான அடிப்படைகளாக அமைந்தன. இதனைப் பின்வருமாறு விளக்கலாம்.

01. பல்கலைக்கழகங்களும், பீடங்களும், உயர்கல்வி நிறுவனங்களும் அதிகரிக்கப்பட்டமை.

02. தொழில் நுட்பக் கல்லூரிகளும், கற்கை நெறிகளும் அதிகரிக்கப்பட்டமை.

03. பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் தெரிவில் பிரதேச மட்டத்திலான அதிகரிப்பு.

1942இல் நிறுவப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகம் முற்றிலும் இலவச பல்கலைக்கழகமாக பின்னர் வளர்ச்சியடைந்தது. 1952 இல் இது பேராதனையிலும் கொழும்பிலும் இரு வளாகங்களைக் கொண்டிருந்தது. பேராதனை வதிவிட வசதிகளைக் கொண்டிருந்தது. பல்கலைக்கழக கமிஷன் தலைவர் சேர் ஐவர் ஜென்னிங்ஸ், சனநாயக அடிப்படையில் கல்வி அமையும் போது வறிய மாணவரும் தங்கிப் பயில விடுதி வசதி அவசியம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

1959 இல் வித்யோதயா பல்கலைக்கழகமும் வித்தியாலங்கார பல்கலைக்கழகமும் உருவாக்கப்பட்டன. இப் பல்கலைக்கழகங்கள் நாட்டின் உயர் கல்வித் தேவையை நிறைவு செய்ய போதாதவையாக இருந்தன. ஆரம்பத்தில் கலைத்துறையில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக தகுதி பெற்ற அனைவருக்கும் பல்கலைக்கழக வாய்ப்பு குறைவாகவே இருந்தது. அனுமதி அதிகரிக்கப்பட்ட போது பல்கலைக்கழக வளாகங்கள் அதற்குப் போதுமானதாக அமையவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனா மொழி மாற்றம் மாணவர் அனுமதித் தேவையை வலுப்படுத்தியது. இதனால் கலை, விஞ்ஞான துறைகளிலான போதனைகள் சிங்கள, தமிழ் மொழிகளிலும் ஆரம்பிக் கப்பட்டன. 1968 முதல் சகல துறைகளும் சுய மொழிகளில் ஆரம்பமாகியது. உயர் கல்வி சம வாய்ப்புக்கு இது எடுத்துக்காட்டாகும்.

1942 முதல் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் முழு நேர மாணவராக பயின்ற மாணவர்களின் அதிகரிப்பு பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1942 | - 904 | 1965 | - 10725 |
| 1948 | - 1612 | 1968 | - 12392 |
| 1952 | - 2232 | 1971/72 | - 12388 |
| 1958 | - 2950 | 1978 | - 15039 |
| 1962 | - 7184 | 1982 | - 18089 |

1966 இன் உயர் கல்விச் சட்டத்தின் படி இலங்கைப் பல்கலைக்கழக கொழும்பு வளாகம் 1967 முதல் தனிப் பல்கலைக்கழகமாக உருவாக்கப்பட்டது.

1972 அளவில் கொழும்பு, பேராதனை, வித்தியோதயா வித்தியலங்கார ஆகிய நான்கு பல்கலைக்கழகங்களே இருந் தன. இதன் பின்னர் யாழ்ப்பாண பல்கலைக்கழகம், மொறட் டுவ பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம், றுஹுணு பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டன. பிரதேச ரீதியாக மாணவர்கள் தேவைகளை இப் பல்க லைக்கழகங்கள் நிறைவு செய்ய முயற்சித்தன. மேலும் 1965ல் நிறுவப்பட்ட கனிட்ட பல்கலைக்கழக் கழகங்கள், அண்மைக் காலத்தில் அறிமுகப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுத்தப்பட்ட இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரிகள் பிரதேச வாரியாக விஸ்தரிக்கப்பட தொழில் நுட்பக் கல்லூரிகள் என்பன மூன்றாம் நிலைக் கல்வி வாய்ப்புக்களை பிரதேசங்கள் தோறும் விஸ்தரிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகும்.

*1894*இல் தாபிக்கப்பட்ட மருதானை தொழில் நுட்பக் கல்லூரியே நீண்டகாலமாக தொழில் நுட்பக் கல்வியை வழங்கி வந்தது. பின்னர் அம்பாறை ஹார்டி தொழில் நுட்பக் கல்லூரியும் *(1956)* மற்றும் தொழில் நுட்பக் கல்லூரிகளும் நாட்டின் பல பாகங்களிலும் நிறுவப்பட்டன. *1985* அளவில் மொத்தம் *28* தொழில் நுட்பக் கல்லூரிகள் இயங்கின. கொழும்பில் மட்டுமே நடத்தப்பட்டுவந்த பல பயிற்சி நெறிகள் பின்னர் விஸ்தரிக்கப்பட்டு பிரதேச வாரியான தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் வழங்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டன.

**தொழில் நுட்பக் கல்லூரியில் மாணவர் சேர்வு**

| | | |
|---|---|---|
| 1960 | - | 957 |
| 1965 | - | 721 |
| 1970 | - | 695 |
| 1975 | - | 1521 |
| 1978/79 | - | 2172 |
| 1982/83 | - | 4964 |
| 1985/86 | - | 4236 |
| 1988/89 | - | 4267 |

*1970* களில் பல்கலைக்கழகத் தெரிவு முறையில் மேற்கொள்ளப்பட்ட தரப்படுத்தல், பிரதேச சனத்தொகை ரீதியான கோட்டா முறை என்பன சமவாய்ப்பு வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட புதிய திட்டங்களாகும். இது நாட்டின் கல்வி முறையிலும், வாய்ப்பிலும் பிரதேச ரீதியாக நிலவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிரவின்மையை (Disparity) நீக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும்.

*1965 - 1970* க்கு மிடையில் பல்கலைக்கழகத் தெரிவில் *73.1* வீதமான மாணவர்கள் கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் வசதியான பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள் என்பது கண்டறியப்பட்டது. கல்வி வசதிகளில் மாவட்ட ரீதியாக நிலவிவந்த ஏற்றத்தாழ்வுகளே இதற்கு காரணமாக இருந்தது. மாவட்ட ஏற்றத்தாழ்வுகளை நீக்க சனத்தொகை கோட்டா முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முறை விருத்தியடைந்த பிரதேசங்களில் கண்டனத்துக்குட்பட்ட போதிலும், வசதியற்ற மாவட்டங்களில் உயர் கல்வி வாய்ப்புக்களை விரிவுபடுத்த உதவியது எனலாம்.

இது குறித்து கலாநிதி சுவர்ணா ஜயவீர, 'இத்திட்டம் மாவட்ட ரீதியில் கல்வியின் தரத்தை அதிகரிப்பதற்குப் பதிலாக மாவட்டக் கோட்டாவை நிரப்புவதற்கே முயற்சி மேற்கொள்ளப்பட்டது.' எனக் குறிப்பிட்டுள்ளார். மொணராகலை மாவட்டத்தில் சில ஆண்டுகளில் விஞ்ஞானத் துறையில் தெரிவு செய்யப்படுவதற்கு எவருமே இருக்கவில்லை.

## 11. பொதுக் கலைத் திட்டம்

கல்வி முறையில் பொதுக்கலைத்திட்டம் பின்பற்றப் பட்டமையும் சம வாய்ப்புக்கு பங்களிப்புச் செய்த ஓர் அம்சமாகும். முன்பு கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண வகுப்பு மூன்று பிரிவுகளாக இருந்தது. அவை :

*1.* கலைப்பிரிவு

*2.* விஞ்ஞானப் பிரிவு

*3.* வர்த்தகப் பிரிவு

இப்பிரிவு முறை சமுதாயத்தில் உயர்வு, தாழ்வு வேறுபாடுகள் ஏற்படுவதற்கு வழிவகுப்பதாக இருந்தது. விஞ்ஞானக் கல்வி கற்பதற்குரிய வாய்ப்புக்கள் சகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்க்கும் கிடைக்கவில்லை. விஞ்ஞான கூட வசதிகள், விஞ்ஞான ஆசிரியர்கள் உள்ள வசதியான பாடசாலைகளில் சேர்ந்து படிக்கும் வாய்ப்பு சமுதாயத்தில் சகலருக்கும் கிடைக்காத நிலையில் இந்த வேறுபாடு சமுதாய வேறு பாட்டை தோற்றுவிப்பதாக இருந்தது. வர்த்தகப் பிரிவு மிகத் தாழ்ந்த நிலையில் நோக்கப்பட்டது. இந்த நிலை 1981ல் புதிய திட்டப்படி மாற்றியமைக்கப்பட்டது. பொதுக் கலைத்திட்டம் பின்பற்றப்பட்டமையால் சம வாய்ப்புக்கு வழிவ குக்கப்பட்டது.

## 12. முறைசாராக் கல்வி விஸ்தரிப்பு

கல்வியில் பங்குபற்றாமை (Non Participation) இடைவிலகல் (Drop out) மீளத்தங்குதல் (Repetition) போன்றன கல்வியின் முழுப்பயனையும் அடையாத ஒரு பிரிவினரை நாட்டில் உருவாக்கியுள்ளன. பின்தங்கிய கிராமப் புறங்களிலும், சேரிப் புறங்களிலும், வர்த்தகப் பிரதேசங்களிலும் இத்தகைய காரணிகளால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் அதிகம் காணப்படுகின்றனர்.

1981ல் குடிசனக் கணிப்பின்படி, 5-14 வயதுக் குழுவினரில் 16.3 சதவீதம் ஒருபோதும் பாடசாலை செல்லாதவர்களாவர். 1984ன் யுனிசெப் கணிப்பு: 1975/79 காலப்பகுதியில் இடைவி லகியோரில் 91% சத வீதமானவர்கள் குறைந்த வருமான முடைய தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் பிள்ளை கள் எனக் காட்டியது. 1987ம் ஆண்டின் சமூக பொருளாதார ஆய்வு முடிவுகள் என்றுமே பாடசாலை செல்லாதவர்கள் 25.02% சதவீதம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார, சுற்றாடல் தாக்கத்தினால் இவ்விதம் முறையான கல்வியிழந்த மாணவர்க்கு முறைசார்ந்த கல்வித் திட்டத்தின் கீழ் கல்வி வாய்ப்புக்களை வழங்குவது இன்றிய மையாதது. இவர்களும் முறையான கல்வியின் பயனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பாக திறந்த பாடசாலைகள் (Open Schools) அமைப்பது சம்பந்தமாக அண்மைக்காலங்களில் முன்மொழியப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் அத்தகையவர்களும் கல்வியின் பயனைப் பெற்று வாழ்க்கையை அனுபவிப்பதற்குரிய வசதி வாய்ப்புக் களை முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் உட்படும் மாணவர்கள் பின்வரும் வகுதிகளைச் சேர்ந்தோராவர்.

1. பாடசாலையில் சேராதவர்.

2. இடைவிலகியோர்.

3. வரவு ஒழுங்கற்றவர்கள்

4. பாடசாலைக் கல்வியை முடித்தவர்கள்

5. வளர்ந்தோர்

முன்னொருபோது தொகுதிகள் தோறும் வளர்ந்தோர் கல்வியதிகாரிகள் நியமிக்கப்பட்டு அவர்கள் மூலம் முறை சாராக் கல்வி நெறிகள் நடத்தப்பட்டன. பின்னர் பிரதேச கல்வி அலுவலகங்களின் நேரடி கண்காணிப்பிலும் ஒழுங்க மைப்பிலும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைபெற்றன.

1990 ன் பின் நடைமுறைப்படுத்தப்படும் முறைசாராக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களாவன:

1. தொழில் முகப்படுத்தும் நெறிகள் (பகுதிநேர தொழில்நுட்பநெறிகள்)

2. ஜனதா கல்வி நிலையங்கள்

3. வளர்ந்தோர் எழுத்தறிவு வகுப்புக்கள்

4. வளர்ந்தோர்/பாடசாலையை விட்டோர்க்கான ஆங்கில வகுப்புக்கள் என்பன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியமைச்சின் முறைசாராக் கல்விப் பிரிவு நாட்டின் முறைசாராக் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாக உள்ளது.

தொழில் முகப்படுத்தும் நெறிகளைப் பொறுத்தவரையில் வெளிநாட்டு நிறுவனங்களுட் அரச சார்பற்ற நிறுவனங்களும் பெரும் பங்காற்றியுள்ளன. அவையாவன, உலக கனடிய பல்கலைக்கழக சேவை நிறுவனம் (WUSC), சீடா (CIDA), சீடா (SIDA) சர்வோதயா போன்றனவாகும்.

தட்டச்சு, கணனி, மின்சார இணைப்பு, உடை தயாரித்தல், வானொலி, ரீ.வி. திருத்தல் போன்ற வாழ்க்கைத் தொழில்களுக்கான பயிற்சி நெறிகள் மூலம் கிராமிய இளைஞரும் யுவதிகளும் தொழிற்கல்வி வாய்ப்பைப் பெற்றுள்ளனர். புள்ளி விபரங்கள் குறுகிய காலத்தில் இக் கல்வி முறையில் ஏற்பட்ட அதிகரிப்பைக் காட்டும்.

| ஆண்டு | முழுநேர நெறி | | பகுதிநேர நெறி | |
|---|---|---|---|---|
| | நிலையங்கள் | மாணவர் | நிலையங்கள் | மாணவர் |
| 1978 - | 40 | 1200 | 600 | 20,000 |
| 1983 - | 240 | 18000 | 3000 | 120,000 |

## 13. பிரதேச வாரியாக ஆசிரியர் நியமனம்:

ஆசிரியர் பற்றாக்குறை நீண்ட காலமாக மாணவர் கல்வியைப் பாதித்து வந்துள்ளது. குறிப்பாக தோட்டப் பகுதி, வசதிகுறைந்த கஷ்டப் பிரதேசங்கள் என்பன இயல்பாகவே ஆசிரியர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டவையாகும்.

கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, கண்டி போன்ற நகரங்களிலும் அண்மிய பிரதேசங்களிலும் பாடசாலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவான அல்லது மேலதிக ஆசிரியர்களைக் கொண்டிருந்த வேளையில் மொணறாகலை, பதுளை, நுவரெலியா, பொலன்னறுவை, ஹம்பாந்தோட்டை, மன்னார் போன்ற மாவட்டங்களில் ஆசிரியர்களை நியமிப்பதிலும் அம்மாவட்டங்களில் வைத்திருப்பதிலும் கஷ்டங்கள் எதிர்நோக்கப்பட்டன. வசதியான மாவட்டங்களில்கூட தூர இடங்களில் அமைந்துள்ள பாடசாலைகளிலும் தீவிரமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வந்துள்ளது. மாணவர் : ஆசிரியர் விகிதாசாரம் இதனைத் தெளிவு படுத்தும்.

| | | |
|---|---|---|
| மாத்தறை மாவட்டம் | - | 20:1 |
| கொழும்பு மாவட்டம் | - | 26:1 |
| கண்டி மாவட்டம் | - | 22:1 |
| கிளிநொச்சி மாவட்டம் | | 38:1 |
| மட்டக்களப்பு மாவட்டம் | - | 37:1 |
| மொணறாகலை மாவட்டம் | - | 29:1 |

ஆசிரியர் தட்டுப்பாடு நிலவும் பாடசாலைகளைப் பொறுத்தவரை கல்வியில் சம வாய்ப்பு என்பது காலாவதியானதாகவே கருதப்பட்டது. எனவே ஆசிரியர் பரம்பலில் காணப்பட்ட இத்தகைய பிரதேச சமத்துவமின்மையை நீக்குவதற்கு அரசாங்கங்கள் அவ்வப்போது பல நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளன. அவை,

1. மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழான ஆசிரிய நியமனம்
2. பாடசாலையினதும் பாடசாலைச் சுற்றாடலினதும் அசெளகரியங்களைக் கருத்திற் கொண்டு விசேட படிகள் வழங்கியமை.

மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நியமனங்களும் கஸ்டப் பிரதேசப் படிகளும் பிரதேச சமத்துவமின்மையை முற்றாக நீக்க முடியாவிடினும் ஓரளவு குறைத்துள்ளது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தோட்டப் பாடசாலைக்கான ஆசிரியர் நியமனங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் அடிப்ப டையில் வழங்கப்பட்ட நியமனங்கள் தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் என்பன பிரதேச வாரியாக ஆசிரியர்க்கிருந்த தட்டுப்பாட்டை ஓரளவு நிவர்த்தி செய்துள்ளன எனலாம். இன ரீதியான ஆசிரியர் ஆட்சேர்ப்பு முறையும் இன ரீதியான பாடசாலைகளின் தேவைகளை நிறைவு செய்துள்ளன.

## 14. மாணவர் கல்விக்கான ஏனைய உதவிகளும் சலுகைகளும்:

பின்தங்கிய பிரதேசங்களில் விஞ்ஞான கூட வசதிகள் இல்லாத பாடசாலைகளிலும் நிதி வசதியற்ற பாடசாலைகளிலும் மாணவரின் கற்றல் மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு நிதி உதவிகளும், முற்பணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. விஞ்ஞானம் கற்றலுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்ய விஞ்ஞான உதவி நிதி (Science Imprest) யும், வாழ்க்கைத்திறன் கற்றலுக்கான, செய்து காட்டல் பொருட்களைக் கொள்வனவு செய்ய முற்பண உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. கிராமப் புறப் பாடசாலைகளின் கல்விக்காக இந்த உதவிகள் கூடியளவு பயன்படுத்தப்படுகின்றன.

மேலும் வசதிகளற்ற வறிய பிள்ளைகள், வசதிகள் சேவைகள் கட்டணம் செலுத்துவதின்றும் விலக்களிக்கப்பட்டு வருகின்றனர். மாணவர்கள் இலவச வைத்திய பரிசோதனைக்குட்படுவதோடு வசதியற்ற மாணவர்க்கு இலவசமாகவே சிகிச்சையளிக்கப்படுகின்றது. விசேட தேவைப்பாடுடைய வலது குறைந்த மாணவர்கள் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்காக விசேட பாடசாலைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். அங்கு கல்வியும் தொழிற் பயிற்சியும் வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசிப்பிடத்திலிருந்து தூர இடங்களிலுள்ள பாடசாலைக ளில் பயிலும் மாணவர்களுக்காக பாடசாலை பஸ் சேவை நடத்தப்படுவதோடு பஸ், புகையிரதம் என்பவற்றுக்கு சலுகைக் கட்டணத்தில் சீசன் டிக்கட்டும் வழங்கப்பட்டு வருகின்றது. இத்தகைய நடவடிக்கைகள் கல்வி, உள்ளவர் இல்லாதவர் என்ற சகல தரப்பினர்க்கும் கிடைக்க வேண்டும் என்ற குறிக்கோளில் செய்யப்பட்டவையாகும்.

பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயிலும் மாணவர்க்கும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்க்கும் அவர் தம் குறைந்த வருவாயைக் கருத்திற்கொண்டு வழங்கப்படும் நிதி உதவிகளும் (Bursary) வசதியற்ற மாணவர்க்கு கல்வியில் வழங்கப்படும் சம வாய்ப்பு எனலாம்.

## உண்மை நிலை:

இவ்வாறு இலங்கையின் கல்வி வாய்ப்புக்களை விஸ்தரிப்பதிலும் சம வாய்ப்புக்கு ஏற்பாடு செய்வதிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பிரதேச வாரியாகவும், இன ரீதியாகவும், மொழி வாரியாகவும் கல்வியை விரிவடையச் செய்துள்ளது எனக் கருதப்படுகின்றது.

இலங்கையில் கடந்த பல தசாப்தங்களாக கல்வியை விரிவுபடுத்துவதற்கு என பல திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்ட போதிலும் பாடசாலை சேராத 5-14 வய துக்குட்பட்ட பிள்ளைகள் கணிசமான தொகையினர் நாட்டில் இருப்பது எவ்வளவு தூரம் சம வாய்ப்பு எய்தப்பட்டுள்ளது என நிச்சயப்படுத்த முடியாதுள்ளது.

இலவசக் கல்வியும், சமத்துவக் கல்வியும் உயிர்பெற வேண்டுமானால் கட்டாயக் கல்வி என்பது இணைந்த செயற பாடாக அமைதல் வேண்டும். இலங்கை பல நூற்றாண்டுக் கல்வி வரலாற்றைக் கொண்டுள்ள போதிலும் கட்டாயக் கல்வி யைச் செயற்படுத்தும் சட்டவலு இல்லாமலேயே கல்வியை சனநாயகப்படுத்தும் செயற்பாடு நடைபெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1920ம், ஆண்டின் கல்விக் கட்டளைச் சட்டம், கட்டாயக் கல்வியைக் கொள்கையளவில் ஏற்றிருந்தது. அமுல் செய்யப்படவில்லை. 1939ம் ஆண்டின் கல்விச் சட்டம் 6-10 வயது கட்டாயக் கல்விக்குரிய காலம் எனக் குறிப்பிட்டது. 1947ன் சட்டம் 5-16 கட்டாயக் கல்விக்குரிய வயது என்றது. 1950ஐத் தொடர்ந்து வந்த கல்வி வெள்ளையறிக்கைகளிலும் கட்டாயக் கல்வி கால வரையறை குறிப்பிடப்பட்டன. எனினும் சட்ட ஆக்கத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை, 1972ன் கல்விச் சீர்திருத்தங்கள் 1981ன் கல்வி வெள்ளையறிக்கை என்பவற்றிலும் இந்த விடயத்துக்கு அழுத்தம் கொடுக்கப்படவில்லை.

முன்பு ஒரு காலத்தில் இருந்த வரவு அதிகாரிகள் (Attendance Officer) முறையும் பின்னர் நீக்கப்பட்டது. கல்விச் சம வாய்ப்பின் இலக்குகளை அடைவதற்கும் ஜனநாயக சமுதாயத்தை உருவாக்குவதற்கும் கட்டாயக் கல்விச் சட்டம் இன்றியமையாதது என்பது உணரப்பட வேண்டும்.

பிரதேச ரீதியான சம வாய்ப்புக்காக அரசு பல்வேறு திட்டங்களை நடைமுறைப் படுத்திய போதிலும் பாடசாலை கற்றல் வளங்களில் காணப்படும். அசமத்துவமும் துணைச் சேவைகளில் காணப்படும் ஏற்றத்தாழ்வும் நூறு வீதம் நிறைவுறாத பணிகளாக உள்ளன.

வகுப்பறை, தளபாட பற்றாக்குறை, மலசல கூடத் தேவை, நீர் வசதி, விளையாட்டு மைதானம், விஞ்ஞான ஆய்வு கூடம், கற்றல் உபகரணங்கள் ஆகியவற்றில் பற்றாக்குறை என்பன பிரதேச சமத்துவமின்மை தொடர்ந்து நிலவக் காரணமாக உள்ளன. எடுத்துக்காட்டாக விஞ்ஞான ஆய்வு கூடங்களின் தொகை ஒப்பீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான ஆய்வு கூடங்களின் தொகை

| மாவட்டம் | 1979 | 1983 |
|---|---|---|
| கொழும்பு | 38 | 216 |
| யாழ்ப்பாணம் | 70 | 230 |
| மொணறாகலை | 6 | 10 |
| கல்முனை | 9 | 18 |
| முல்லைத்தீவு | - | 03 |

இந்நிலையை நீக்குவதற்கு அரசாங்கம் பல திட்டங்களை மேற்கொண்டது. அதாவது சிறிய பாடசாலைகளின் அபிவிருத்திக்காகவும் தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திக்காகவும் யுனிசெப், சீடா, நோறாட் ஆகிய சர்வதேச நிறுவனங்களும் வேறு நிறுவனங்களும் பல திட்டங்களை செயற்படுத்துகின்றன.

1. உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி உதவி திட்டம்

2. சீடா வின் ஆரம்ப பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டம்.

3. சீடாவின் தோட்டப் பாடசாலை அபிவிருத்தித் திட்டம்.

4. உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் பாடசாலை பாடசாலை அபிவிருத்தித் திட்டம் (ஐ.எஸ்.டி) என்பனவாகும்.

இவ்வாறு பின்தங்கிய பிரதேசங்களின் பாடசாலை அபிவிருத்திக்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் தோட்டப் பகுதிகளிலும், கிராமப் புறங்களிலும் இன்னும் ஓராசிரியர், ஈராசிரியர் பாடசாலைகள் உள்ளன.

இலங்கையில் முன்பள்ளிக் கல்வி பற்றி அரசு பொறுப்பு எடுக்காமையும் சமூக சமத்துவமின்மையை தோற்றுவித்துள்ளது. சமூக அந்தஸ்தை உறுதிப்படுத்தும் ஓர் அம்சமாக - அலங்காரப் பொருளாக முன்பள்ளி கருதப்படுத்துகின்றது. செலவுமிக்க இதனை அரசு பொறுப்பேற்று இலவசமாக வழங்குவது சம வாய்ப்புக்கு இட்டுச் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 ம் ஆண்டின் ஆசிய அபிவிருத்தி வங்கி அறிக்கை பின்வருமாறு குறிப்பிடப்பட்டது.

'தேசிய கல்வித் திட்டத்தின் நோக்கம், சம வாய்ப்பை விஸ்தரிப்பதனூடாக கல்வியின் ஏற்றத்தாழ்வினை குறைப் பதாக இருக்க வேண்டும். சம வாய்ப்பு விஸ்தரிப்பு என்பது தேசிய இனம், சமயம், குலம், பிரதேச வேறுபாடின்றி சகல மாணவருக்கும் கல்விக்கான பங்குபற்றலை சகலரும் அனுப விப்பதற்குரிய சந்தர்ப்பங்களையும் வழங்க வேண்டும்.'

ஒரு மூன்றாம் உலக நாடு என்ற வகையில் இலங்கை பல அடிப்படையான சமூக பொருளாதார பிரச்சினைகளிலிருந்து விடுபட முயற்சிகளை மேற்கொண்டு வந்த போதிலும் கல்வி யில் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் குறிப்பிட்ட இலக்கை எய்தவில்லை எனக் கொள்ள முடியும். சம வாய்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது எதிர் நோக்கப்படும் இடையூறுகளும் தடைகளும் பல்வேறு சமூக பொருளாதார தத் துவ கோட்பாடுகளின் அடிப்படையில் அணுகப்பட வேண்டும்.

**1. பின்பற்றப்படும் மனித சமத்துவக் கோட்பாடு (Egalitarianism) கடந்தகால இறுக்கமான மரபுரிமைகளை உடைத்தெறிந்து சகல நிலைகளிலும் கல்வியை மக்களை மயப்படுத்தி தனியாள் விருத்தியினூடாக தேசிய அபிவிருத்தியைக் கட்டியெழுப்ப வேண்டும்.**

**2. நாட்டில் பிரதேச சமத்துவம் உறுப்படும்வரை பின்தங்கிய மாவட்டங்களுக்கு சாதகமான வகையில் உடன்பாடான ஒரு பேதப்படுத்தும் கொள்கை பின்பற்றப் படல் வேண்டும்.**

**3. கல்வியில் மேற் கொள்ளப்படும் எதிர்காலச் சீர்திருத்தங்கள் சமத்துவம் (Equity) பொருத்தப்பாடு (Relevance) தரம் (Quality) வினைத்திறன் (Efficiency) ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணைகள்

01. கல்வியின் புதிய பாதை : கல்வியமைச்சு - 1972

02. இலங்கையின் கல்வி - நூற்றாண்டு மலர் - பகுதி 3 - கல்வியமைச்சு 1969

03. புது உலகொன்றை நோக்கி.. கல்வி கலாசார தகவல் அமைச்சு 1989

04. கல்விப் பரிபாலனம் : (கன்னங்கரா ஞாபகார்த்தப் பேருரை) கலாநிதி ஆனந்த குருகே, தேசிய கல்வி நிறுவகம், 1992

05. கல்விய வாய்ப்பை விரிவாக்குதல் நிறைவுபெறாத ஒரு பணி (கன்னங்கரா பேருரை) கலாநிதி சுவர்ணா ஜெயவீர தேசிய கல்வி நிறுவகம் 1989.

06. Education Proposals for Reforms, Ministry of Education: 1981

07. Regional Imbalance in Education in Ceylon. - Swarna jayaweera, NESC Journal Vol:XX-1971

08. School Ancillary Service

- P.R. Wettasinghe, NIE - 1990

09. Dogged Preseverance coupled with fearless Advocacy. N.G. Kularetne, NIE, 1990

10. Secondary Education in Sri Lanka - K.H.Dharmadasa N.I.E. 1991

11. Non - Formal Education in Sri Lanka

T.I. Galapatty . N.I.E. - 1991

12. Education Policies and change from Mid-Twentieth Century to 1977 Suwarna Jayaweera, ME -1988

13. Education Policies and Change 1977 - 1986

W.A.de Silva & C. Gunawardena NIE-1989

14. Educational Statistics of Sri Lanka 1992 - Ministry of Education

15. Education in Sri Lanka 1948-1988

C.R.de Silva & D.De Silva New Delhi-1990

16. Economics of Higher Education in Sri Lanka, Prof. A.D.V. De de S. Indraretne, New Delhi, 1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| XVI | 1 | ஆசியுரை, ஆசியுரை, | ஆசியுரை, அணிந்துரை |
| XVII | 10 | Shool Cluster | School Cluster |
| 6 | 17 | உல | உலக |
| 44 | 19 | லோகாயுத | லோகாயத |
| 44 | 25 | ஆளு ராகவோ | ஆளுநராகவோ |
| 46 | 25 | கல்வியி லில் | கல்வியியலில் |
| 50 | 15 | அடிப்படையகின்றன | அடிப்படையாகின்றன |
| 50 | 25 | தூண் களுக்கு | தூண்டிகளுக்கு |
| 56 | 14 | கண்டுபிடப்பாளராகவே | கண்டுபிடிப்பாளராகவே |
| 64 | 8 | திருப்பியற்றவையாக | திருப்தியற்றவையாக |
| 73 | 6 | தொழில்பாடு | தொழிற்பாடு |
| 76 | 26 | வழங்குவோா | வழங்குவோர் |
| 86 | 5 | மன்றொரு | மற்றொரு |
| 104 | 14 | போன்றி | போன்ற |
| 113 | 6 | வாய்ப்புக்களுக்கும் | வாய்ப்புக்களும் |
| 116 | 10 | முன்னிரிமை | முன்னுரிமை |
| 143 | 26 | செயற | செயற் |
| 146 | 20 | மக்களை | மக்கள் |
| 146 | 23 | உறுப்படும் வரை | உறுதிப்படும்வரை |
| 146 | 28 | திருத்தங்கள் | சீர்திருத்தங்கள் |
| 146 | 30 | வற்றில் | ஆகியவற்றில் |
| பின்அட்டை | 27 | கூட்டி | ஊட்டி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 1793

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 1793

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராதனைப் பல்கலைக்கழக கலை மாணி (B.A. 1968) பட்டம், கல்வி டிப்ளோமா (Dip. in Ed. 1977) தகுதிச் சான்று, கல்வியியில் முதுமாணி(M.A. 1984)ப் பட்டம் என்பவற்றை உயர்தர அகடமித் தராதரங்களாகக் கொண்டவர்தான் அல்ஹாஜ் யூ.எல். அலியார் அவர்கள்.

அட்டாளைச்சேனை, அழுத்கம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் விரிவுரையாளராகவும் கொத்தணி அதிபராகவும் பணியாற்றித் தற்போது பிரதேச கல்விப் பணிப்பாளராகப் பதவி வகிக்கிறார். திறந்த பல்கலைக்கழகக் கல்வியியல் புற விரிவுரையாளராகவும் பணிபுரிந்தவர். பல வருடங்களாகத் தேசிய கல்வி நிறுவக கல்முனைப் பிராந்திய நிலைய கல்வி விரிவுரையாளராகவும் (PGDE) பணியாற்றி வருகிறார்.

இலக்கிய ஆய்வு, இஸ்லாமிய விரிவு, சமூகவியற்துறை, கல்வியியல நோக்கு என்பவற்றில் கைதேர்ந்த கட்டுரைகளை எழுதியவர். 1974, 78, 79 ஆம் வருடங்களில் சென்னை காயல் பட்டணம், கொழும்பில் நடந்த அனைத்துலக இஸ்லாமிய தமிழாராய்ச்சி மகாநாடுகளில் கலந்து ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தவர்.

சுதந்திரன், சிந்தாமணி, தினகரன், தினபதி, வீரகேசரி, செய்தி, மணிவிளக்கு போன்ற இலங்கை இந்தியப் பத்திரிகைகளில் இவரது ஆக்கங்கள் வெளிவந்தன.

இலங்கை எழுத்தாளர்களின் எழுத்துக்களை விமர்சனம் ஆய்வு செய்ய வேண்டுமென வழிகாட்டலை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்க்கு சுட்டி அவர்களது செயற்திட்டங்களுக்கு உறுதுணை செயதவர். அதனால் வந்ததே 'கவிஞர் ஏ. இக்பால் கவிதைகள் சில ஒரு மதிபபீடு' என்னும் தனியான சிருஷ்டிகர்த்தா ஒருவரை ஆய்ந்து விமர்சித்த நூல். அந்த வழியில் முந்திய நூலிது.

இந்தியாவின் தேர்தல் அதிகாரி டி.என். சேஷன் அவர்களின் திடகாத்திரத் தார்மீக நேர்மை இவரிடமுண்டு. சில வேளைகளில் தர்மத்துக்கு நடக்கும் ஹிம்சையால் அதிர்ந்து போகிறார்.

கவிஞர் ஏ. இக்பால்

ISBN 955-95831-0-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org